
கல்கி



KALKI 9-8-70 விலை 40 காசு



உங்கள் வீடு பல தலைமுறைகளுக்கு நிலைத்திருக்க வேண்டும்



வீடு என்பது அருமையுடன் போற்றிக்காக்க வேண்டிய உடைமை;
காலத்தின் தாக்குதல்களைத் தாங்குவதற்கேற்ப... உங்கள் அன்புக்குரியவர்களுக்கு ஆதரவாக இருந்து, காப்பதற்கென கட்டப்படுவது.
ஏஸிஸி சிமெண்ட் கொண்டு கட்டப்படும் வீடுகள், அனுபவம், தொழில்நுட்ப நிபுணத்துவம், பரம்பரைக்குரியதோர் பெயரின் பெருமதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் எழும் நம்பிக்கையின் உத்தரவாதம் கொண்ட தயாரிப்பிலும் கட்டப்படுபவை.
மேலும், ஏஸிஸி சிமெண்ட் விஷயத்தில், உங்களுக்கு சிமெண்ட் மற்றும் கான்க்ரீட்டின் பற்பல உபயோகங்கள் பற்றி, இவர்களிடமிருந்து இலவசமாக தொழில்நுட்பச் சேவையும், நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனையும் கிடைக்கும்.
தி கான்க்ரீட் அஸோஸியேஷன் ஆஃப் இந்தியா
66-ஏ, ராஷ்டிரபதி ரோடு, செகந்திராபாத்.
உங்கள் தேவைகளுக்கு அருகாமையிலுள்ள
ஏஸிஸி ஸ்டாக்கிஸ்டையோ
தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கோ. ஆஃப் இந்தியா லிட்.,
மதராஸ், அவர்களையோ அணுகுங்கள்.

ஏஸிஸி தரத்தில் உயர்ந்த தயாரிப்புகளுக்கு நீங்கள் பெறும் உத்தரவாதம்

தி அஸோஸியேட்டட் சிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்
தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கோ. ஆஃப் இந்தியா லிமிடெட்.

MEMBER
FAIR TRADE PRACTICES ASSOCIATION

SISTA'S-CMI-08 TAM

நீண்டகால அனுபவமே நற்புகழுக்கு உரைகல்

30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவம் ஒவ்வொரு எஸ்ட்ரெலா பேட்டரியிலும் உரமேறியுள்ளது.



மேம்பட்ட புதுப் புது பேட்டரிகளைத் தயாரித்தல், முடிவில்லாப் பணியாக நடைபெறுகிறது எஸ்ட்ரெலாவிலே. தற்காலம் காகிதம், பிளாஸ்டிக், உலோகம் ஆகிய உறைகளையுடைய பேட்டரிகள் கிடைக்கின்றன. எல்லாமே கசியாத் தன்மையுடையவை. எல்லாமே அதிக காலம் உழைத்து, மேம்பட்ட செயல்திறனை வழங்க உத்தரவாதமானவை. 30 ஆண்டு கால அனுபவத்தின் கற்பயன்கள் இவை.

எஸ்ட்ரெலா

பேட்டரிகள்

அதிக சக்தி
அதிக உபயோகம்

எஸ்ட்ரெலா பேட்டரீஸ்
லிமிடெட்.


Focus P9C THL

கல்கி

பொருளடக்கம்

சாதாரண, ஆடி 24 :: 1970, ஆகஸ்டு 9

அட்டைப் படம் : தாமோதர ராவ்



''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

சந்தா விவரம்	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 20-00	ரூ. 10-00
இலங்கை(இலங்கைநாணயம்)	ரூ. 21-00	ரூ. 10-50
இதர நாடுகள்	ரூ. 40-00	ரூ. 20-00

இது பறக்கும் போது பிரமாதமாயிருக்கும்!



கப்பல் அல்ல, திமிங்கிலம்!





தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மலர் 30 ● இதழ் 2

இருவகை அபாயம்

சென்ற ஆண்டில் இருந்ததைக் காட்டிலும் இன்று பாரத தேசம் ஆபத்தான நிலையின் விளிம்புக்கே வந்துவிட்டது. சென்ற ஆண்டில் நாட்டின் அரசியல் 'வருந்தத் தக்கதாக' இருந்தது; இப்போது அது 'அபாயகரமாக' மாறிவிட்டது. இந்த ஓராண்டில் கம்யூனிஸ சக்திகள் அவ்வாறு பலவிதங்களிலும் ஆழ வேர் விட்டிருக்கின்றன. சென்ற ஆண்டில் காங்கிரஸில் ஏற்பட்ட பிளவுக்குப் பின் தில்லியில் ஆள்கின்ற கட்சியின் பலம் நலிந்து, அக்கட்சி கம்யூனிஸ்ட்களைச் சார்ந்து வாழும்படி ஏற்பட்டிருப்பதால் இந்த ஆபத்து நிலைமை உண்டாகி விட்டது.

கம்யூனிஸ ஆதிக்கத்தினுள் இந்தியாவைக் கொண்டுவந்து விடக் கூடிய அளவுக்கா நிலைமை முற்றிவிட்டது என்று சிலர் ஐயுறலாம். இவர்கள் கம்யூனிஸ யதேச்சாதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட நாடுகளின் சரித்திரத்தைப் பார்த்தால், நம் நாட்டில் அவற்றைக் காட்டிலும் அஞ்சத்தக்க முறையிலேயே நிலைமை உருவாவதை உணருவர்.

நம் தேசத்தில் கம்யூனிஸ விஷம் இரு விதங்களில் பரவி வருகிறது. ஒன்று, வங்கத்தில் நடப்பது போல் சீன ஆதரவு பெற்று உள்நாட்டுக் கிளர்ச்சியைத் தூண்டி விடுவது. மற்றது, ருஷ்ய ஆதரவின்கீழ் தில்லி ஆதிக்கத்தின் உச்ச பீடத்திலிருந்து கம்யூனிஸ முறைகளைப் பரப்புவது. சித்தாந்த ரீதியில் ஊடுருவலைத் தொடங்கி, அதை அசல் ஆக்கிரமிப்பாக ஆக்கி விடுவதில் ருஷியாவுக்கு உள்ள வல்லமையைச் சரித்திர பூர்வமாக உணர்ந்தவர்கள் இதைக் கண்டு பயப்படாமலிருக்க முடியாது. நாட்டில் கிராமங்கள் முதற்கொண்டு பெரிய நகரங்கள் வரை நக்ஸல்பாரி முறையில் நடக்கும் சீனச் சார்பான ஆதிக்க வேட்டை ஒருபக்கம். !இவ்விதம் வெளிப்படத் தெரியாமல் மௌனமாக - ஆனால் வெகு வேகமாக - தில்லி மத்திய பீடத்தைக் கைக்குள் போட்டுக் கொண்டுள்ள ருஷியச் சார்பான அதிகார வேட்கை இன்னொரு பக்கம். ஆக இரு அபாயங்களும் இடுக்கியின் இரு கரங்கள் போல் நம் கண்முன்னே நெருங்கி வருகின்றன. இச்சந்தர்ப்பத்தில் உண்மை ஜனநாயக வாதிகள், சுதந்திரப் பிரியர்கள் யாவரும் மற்ற பேதங்களை மறந்து ஒன்றுபட்டு, நாட்டை இன்றைய ஆட்சியாளரிடமிருந்து காக்கவேண்டியதன் அவசியத்தை, அவசரத்தை விவரிக்கத் தேவையில்லை.

இந்த அவசர, அவசிய உணர்வுடன் தான் எதிர்ப்புக் கூட்டணி யோசனை உருவாயிற்று. ஜனநாயகத்தில் பற்றுக் கொண்ட யாவரும் ஊக்கமும், உற்சாகமும் கொள்ளும் வகையில் பாரதக் கூட்டணியை அமைக்கும் திருப்பணி தொடங்கிவிட்டதாகச் சென்ற வாரம் எழுதியிருந்தோம், ஆனால் துரதிருஷ்டவசமாக அதன்பின் பழைய காங்கிரஸின் பார்லிமென்டரி போர்டு கூடி, கூட்டணி உத்தேசத்தைத் தளர்த்தி, பார்லிமென்டில் ஒத்துழைப்பது பற்றி மட்டுமே தீர்மானம் நிறைவேற்றி விட்டது. இது நாட்டில் ஏமாற்றத்தை விளைவித்துள்ளது.

இவ் விஷயமாக ராஜாஜி பின்வருமாறு எழுதியுள்ளார்:

''தானே ஆரம்பித்து வைத்த ஓர் ஏற்பாட்டைப் பழைய காங்கிரஸ் புறக்கணித்து விட்டது. ஜனநாயகத்தையும், தேசிய ஒற்றுமையையும்விட மாநில, ராஜீய விவகாரங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த காரணத்தால் தான் இம்மாதிரி அது செய்ய நேர்ந்திருக்கிறது என்று ஸ்ரீ அட்டல் பிஹாரி வாஜ்பாய் கூறி இருக்கிறார். இது முற்றிலும் சரியான கருத்து. பிரதேச காங்கிரஸ் தலைவர்களுக்கும் அவர்களது குறுகிய மனப்பான்மை கொண்ட கொள்கைகளுக்கும் தலைமையினர் பணிந்து விட்டதாக பார்லிமென்டில் உள்ள பழைய காங்கிரஸ் அங்கத்தினர்கள் குறைகூறி யிருக்கிறார்கள். இந்திரா — கம்யூனிஸ்டு வெள்ளத்தில் தேசம் மூழ்கிவிடக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கும்போது மாநில அதிகாரம்

அளிக்கின்ற வசதிகள் பொருளற்றவை. கீதையின் இரண்டாவது அத்தியாயம் 46-வது சுலோகத்தில் கூறப்பட்டுள்ளது இதற்கு ஓரளவு பொருந்தும். அதாவது: 'பெரு வெள்ளத்திலே ஒரு சிறு குட்டை எவ்வளவு பயன்படுமோ, அவ்வளவுக்கே நன்கறிந்த பிரம்ம ஞானிக்குச் சகல வேதங்களும் பயனுகும்.'

''ஸ்ரீ வாஜ்பாயும், ஆசார்ய ரங்காவும் கூட்டணிக்கான தமது போராட்டத்தைக் கைவிடவில்லை. இப்பொழுது நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது. தேசத்தைக் காப்பதற்கான போராட்டத்தில் ஈடுபடுமாறு பழைய காங்கிரஸ் கட்சியை ஜனசங்கமும், சுதந்திரக் கட்சியும் இப்பொழுது கேட்கின்றன. 'இந்தியாவைக் காப்போம்' என்ற கோஷத்தைத் தாம் எழுப்பியதன் மாபெரும் லட்சியம் கைகூடுவதற்கு ஸ்ரீ காமராஜ் தொடர்ந்து பாடுபடுவார் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஜூன் 28ந் தேதி அ. இ. கா. க. நிறைவேற்றிய தீர்மானத்தில் காணப்பட்ட உறுதியும், விவேகமும் மீண்டும் தோன்றக்கூடியவாறு அவர் உழைப்பார் என நம்புகிறேன்.''

ஜனநாயகத்தையும், சுதந்திரத்தையும் காப்பதற்காக எல்லா தேச பக்தக் கட்சிகளும் ஒன்று சேர வேண்டும் என்று ஜூன் 28ந் தேதி அ. இ. கா. க. நிறைவேற்றிய தீர்மானம்தான் சரியான பாதையைப் புலப்படுத்தியது. குழப்பமும், தயக்கமும் சிலர் மனத்தில் ஏற்பட்டுள்ளபோதிலும், போகப் போக விவேகம் மேலோங்கும் என்று [எதிர்பார்ப்போமாக !

ராஜாஜியின் கருத்துக்கள்

கம்யூனிஸ்ட்கள் நிலப்பறி இயக்கத்தைத் தீவிரமாக்கப் போவதாக அச்சுறுத்தியிருக்கின்றனர். இப்போது செய்யக் கூடிய விவேகமுள்ள, சக்தி வாய்ந்த, நடவடிக்கை ஒன்றே ஒன்றுதான் — அதாவது, தடுப்புக்காவல் சட்டத்தைப் பிறப்பித்து, இந்தத் தேசத் துரோகக் காரியத்தை நடத்தும் தலைவர்களின் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரம் பெறுவதேயாகும். தமிழக அரசாங்கம் இவ்வாறு செய்யாதிருப்பது பரிதாபகரமானது. தடுப்புக் காவல் சட்டம் பிறப்பிக்காமல் தனிப்பட்டவர்களின் மீது ஏராளமான செலவில் போலீஸ் நடவடிக்கை எடுப்பதற்கு இடம் ஏற்படுத்தியிருப்பது பொருத்தமல்ல. நிலப்பறியில் ஈடுபடுபவர்கள், கம்யூனிஸ்டுகள் ஒரு போட்டி சர்க்கார் நடத்துவதாக மயங்கியவர்களேயாவர்.

★

தென் வியட்நாமிய வாலிபர்கள் ஸைகோனில் உள்ள இந்திய தூதரகத்தைத் தாக்கியிருக்கிறார்கள். மாடம் பின் அவர்களை இந்திய சர்க்கார் வரவேற்று, உதவி புரிந்து, சௌகரியம் செய்து தந்தபின் வேறென்ன எதிர்பார்க்க முடியும்? வியட்காங் கம்யூனிஸ்டுகளின் 'தாற்காலிக சர்க்கார்' எனப்படும் ஒன்றில் வெளிவிவகார மந்திரியான மாடம் பின்னுக்கு இந்தியாவில் தந்த வரவேற்பு, இதுகாறும் நம்முடன் நட்புக் கொண்டிருந்த ஆசிய நாடுகளுடன் நமக்குள்ள தொடர்பைப் பயங்கரமாகப் பாதிக்கக் கூடும்.

★

இந்தியாவுக்கும் கம்யூனிஸ்ட் நாடான கிழக்கு ஜெர்மனிக்கும் இடையே உள்ள ராஜரீக உறவை உயர்த்துவதென இந்திய சர்க்காரின் உச்ச வட்டாரங்கள் முடிவு செய்திருப்பதாகச் செய்தி வந்துள்ளது. இது நமக்கு மேல்நாடுகளுடன் உள்ள தொடர்பை மிகவும் பாதிக்கும். பெர்லினைக் கிழக்கு ஜெர்மனியின் எல்லைக்குட்பட்ட ஓர் அங்கமாகக் கருத வேண்டும் என்று ருஷியா வற்புறுத்தியிருக்கும் சமயம் பார்த்து இந்தியா இவ்விதம் முடிவெடுத்திருப்பது மிகவும் துரதிருஷ்டமானது.

★

வங்காளத்தில் இன்னும் சட்ட ஒழுங்கு ஏற்படவில்லை எனப் பிரதமரே ஒப்புக் கொள்கிறார். கவர்னர் ஸ்ரீ தவான் அவர்கள் கௌரவமாகப் பதவியிலிருந்து விலக, இதுவே தருணம். ஜெனரல் கரியப்பா அல்லது ஜெனரல் குமாரமங்கலம், அல்லது இவர்களைப் போலத் தகுதி பெற்றவர்களை அங்கு கவர்னராக நியமிக்க வேண்டும்.


திருக்குறள் போட்டி

தெய்வத் தமிழை என்றும் பேணி வளர்த்துவரும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம், கல்லூரி மாணவர்களின் திருக்குறள் ஈடுபாட்டை வளர்க்கும் வகையில் ஓர் அரிய திட்டம் வெளியிட்டுள்ளது.

தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு கல்லூரியிலும் மாணவர்கள் திருக்குறளில் கீழ்க்கண்ட அதிகாரங்களைப் பொருளுடன் மனப்பாடம் செய்து ஒப்புவிக்க வேண்டும். அந்தந்தக் கல்லூரியில் முதலாவதாகத் தேறிய மாணவனுக்கு நூறு ரூபாயும், இரண்டாவதாகத் தேறிய மாணவனுக்கு எழுபத்தைந்து ரூபாயும், போட்டியில் கலந்து கொண்ட எல்லா மாணவர்களுக்கும் பாராட்டுப் பரிசும் வழங்கப்படும்.

திருக்குறள் 1, 3, 4, 8, 10, 11, 12, 13, 14, 16, 18, 19, 20, 21, 23, 26, 29, 31, 38, 79, 81, 82, 83, 90, 94 அதிகாரங்களில் பரீட்சை நடத்தப்படும்.

போட்டியில் கலந்து கொள்ளும் கல்லூரி மாணவர்கள் தங்கள் விண்ணப்பத்தாளைக் கல்லூரிப் பேராசிரியர் அல்லது முதல்வரின் கையெழுத்துடன் 15—8—70க்குள் கிடைக்கும்படி ஸ்ரீ வி.என். சதாசிவராவ், 45—ஏ, ராஜ வீதி, காஞ்சீபுரம்—2 என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்க வேணும்.



ஜனசங்க மாநாடு

நாடு கம்யூனிஸப் பாசறையாகிவிடாமல் ஜனநாயகக் கட்சிகள் ஒருமித்துச் செயலாற்ற வேண்டும் என்பதில் தீவிரப் பற்றுக் கொண்டுள்ள ஜனசங்கத்தின் நான்காவது மாநில மாநாடு ஆகஸ்டு 9, 10 தேதிகளில், சென்னை மௌண்ட் ரோடு, அபட்ஸ்பரியில் அமைக்கப் பட்டுள்ள மண்டபத்தில் நடைபெறுகிறது. மாநிலத் தலைவர் திரு நா. பா. ...கதேவன் தலைமை வகிக்கிறார். அகில இந்திய ஜனசங்கத் தலைவர் ஸ்ரீ அட்டல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொள்வது குறிப்பிடத்தக்கது.

ஆகஸ்டு 7, 8 தேதிகளில் விஷய ஆலோசனைக் கமிட்டி கூடி மாநாட்டு நி... ணங்களை நிர்ணயிக்கும். ஜனசங்கத்தின் பாராளுமன்றக் குழுவின் துணைத் தலைவர் ஸ்ரீ ஜ..ந்த..த ராவ் ஜோஷி, அகில இந்திய காரியதரிசிகளில் ஒருவரான ஸ்ரீ பி. பரமேசுவரன் ஆகியோர் மாநாட்டில் பங்கு கொள்ளுகிறார்கள். 9ந் தேதி மாலை சென்னை கடற்... திலகர் கட்டத்தில் பொதுக்கூட்டமும் நடைபெறுகிறது.

மாநாடு சிறப்பாக நடக்க வாழ்த்துகிறோம். இந்திரா அரசின் கம்யூனிச..ப் போக்கை மக்களுக்கு அறிவுறுத்தி ஜனநாயக உணர்வை வளர்க்க மாநாடு உதவும் என நம்புகிறோம். ஸ்ரீ வாஜ்பாய் அவர்களுக்கும், மற்ற ஜன சங்கத் தலைவர்களுக்கும் நல்வரவு கூறுகிறோம்.



★ பாரீஸில் உலகப் புகழ்பெற்ற வெர்செல்ஸ் மாளிகையும்....

★ ஈஃபில் கோபுரமும்.

★ உலகத் தமிழ் மகாநாட்டினை யொட்டி யுனெஸ்கோ (ஆக்டிங்) டைரக்டர் ஜெனரல் ஆதிசேஷய்யா அளித்த விருந்தில் அவருக்கு இருபுறமும் திரு ம.பொ.சி.யும் திரு ஃபிலியோஸாவும் அமர்ந்திருக்கின்றனர்.



பாரீஸில் பைந்தமிழ்

"பேட்டிக் கட்டுரைக்கு, 'பாரீஸில் பழம் தமிழ்' என்று தலைப்புப் போட்டுவிடவா? அனேகமாக மேலை நாட்டுக் கல்விமான்கள் மொழி இயல் ஆராய்ச்சிகளில் தானே அக்கறை காட்டிப் பேசியிருப்பார்கள்! பிராமி எழுத்துக்களை அலசிப் பிழிந்து எடுத்திருப்பார்களே?" என்றேன், ம. பொ. சி. அவர்களைப் பார்த்து. அவர் அப்போதுதான் மாஸ்கோ வழியாகப் பாரீஸ் சென்று லண்டன் வழியாகத் தாயகம் திரும்பியிருந்தார்.

ம. பொ. சி. சிரித்தார். "அந்தத் தலைப்பு நூற்றுக்கு நூறு பொருந்தாது! நம் சர்வகலாசாலைத் துணை வேந்தர் சுந்தரவடிவேலு இந்த நூற்றாண்டைப் பற்றிப் பேசியிருக்கிறார். நம் முதலமைச்சர் கருணாநிதியோ விண்வெளி விஞ்ஞானத் துறையிலும் கூடத் தமிழ் ஊடுருவி நிற்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே 'பாரீஸில் பைந்தமிழ்' என்றே போடுங்கள்! மறுப்பு இருக்காது" என்றார்.

பரஸ்பர மொழி புரிந்து கொள்ள முடியாத நிலையில் சில வேடிக்கைகளும் நடந்திருக்கின்றன. ம. பொ. சி. ஒரு ஹோட்டலுக்குச் சாப்பிடப் போனார். அச்சிட்ட பட்டியலைக் காட்டிக் குறிப்பிட்ட உணவு வகையைக் கொண்டுவரச் சொன்னார். உணவுத் தட்டும் வந்து சேர்ந்தது. ஆனால் 'ஸ்பூன்' இல்லை. வார்த்தையையும் பாவத்தையும் இணைத்தவாறு மூன்று விரல்களை நீட்டிக் காட்டி 'ஸ்பூன்', 'ஸ்பூன்' என்று கேட்டிருக்கிறார். பரிமாறும் சிப்பந்தி நன்கு புரிந்துகொண்டு விட்டவன் போல் உள்ளே போய்ச் சில நிமிடங்களில் மூன்று தட்டுகளில் அதே உணவைக் கொண்டு வந்து வைத்தான். மேஜைக்கு உணவு வந்துவிட்டால் நம் ஊர் ஹோட்டல் போலத் திருப்பிக் கொண்டு போகச் சொல்ல முடியாது! ஆகவே அதற்கும் சேர்த்துப் பில் கொடுத்தார்!

"மகாநாட்டின் முதல் நாள் இரவு தமிழக அரசின் சார்பாகச் சென்ற குழுவினருக்கு விருந்து. இரண்டாம் நாள் எல்லாப் பிரதிநிதிகளுக்கும் விருந்து. கடைசி நாள் கலை விருந்து. பத்மா சுப்பிரமணியம் அவர்களின் நடன விருந்து.

"சில நூறு தமிழ் பேசுபவர்களே வசிக்கும் பிரெஞ்சு நாட்டின் தலைநகரில், அரசாங்க உதவியும் அமைச்சர்கள் பங்கும் இல்லாமல் நடந்தது மூன்றாவது உலகத் தமிழ் மகாநாடு. ஆகவே அது ஒரு திருவிழாவாக இல்லாமல் ஓர் ஆராய்ச்சியாளர் கூட்டமாகவே விளங்கியதில் வியப்பொன்றுமில்லை. கட்டுரைகள் படிக்கப்பட்டதும் ஆங்கிலத்திலே, விவாதிக்கப்பட்டதும் ஆங்கிலத்திலே! 'ஏன் இந்த மாநாட்டை ஆங்கிலத்தில் நடத்துகிறீர்கள்?' என்று செல்லர் என்ற மேல் நாட்டு ஆராய்ச்சிக்காரரே கேட்டார்!

"இந்த மூன்று மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பற்றியும் விவாதிக்கப்பட்ட விஷயங்கள் பற்றியும் ஆங்கிலத்தில் தொகுப்பு நூல்கள் வெளியிடுவார்கள். இதனால் தமிழுக்குப் பெருமை என்றாலும் அதிக லாபம் அடைவது ஆங்கில மொழிதான்! இந்த ஆங்கிலத் தொகுப்புக்களின் தமிழ் மொழி பெயர்ப்பு வெளியானால்தான் இந்த மாநாடுகளால் தமிழுக்கு லாபம். பெஸ்கி சதுரகராதியை எழுதியதன் மூலம் தமிழ் லாபம் அடைந்தது. ஆனால் கால்டுவெல் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததன் மூலம் லாபமடைந்தது தமிழல்ல; ஆங்கிலம் தான்! இதை மகாநாட்டு நிர்வாகிகள் நினைவில் கொள்ள வேண்டும். மேலும் எந்தெந்த நூற்றாண்டுகளில் எழுத்து எப்படி வளர்ந்தது என்று ஆராய்ச்சி செய்வதற்குச் சமமாக எண்ணங்களும் எப்படி வளர்ந்தன என்று ஆராய்ச்சி செய்வது மொழி வளர்ச்சியின் தன்மையைப் பிரதிபலிப்பதாக அமையும்" என்று முடித்தார் ம. பொ. சி. உலகத்

தமிழ் மகாநாடுகளைப் பொறுத்த வரை இவர் 'ஹாட் ட்ரிக்' அடித்தவர். மூன்று மாநாடுகளிலும் பங்குபற்றும் வாய்ப்பைப் பெற்றவர்!

பன்மொழிப் புலவர் திரு க. அப்பாதுரை இந்த மகாநாட்டுக்காக நேராகப் பாரிஸுக்குப் போனார். நேராக அங்கிருந்து ஊர் திரும்பினார். முன்னேற்பாடாகப் பல பிரெஞ்சுச் சொற்களைக் கற்றுக்கொண்டு போனவர் இவர். ''ஆனால் இந்தச் சொற்களெல்லாம் எனக்கு உதவின என்று சொல்ல முடியாது. காரணம், அவர்கள் நடைமுறைப் பேச்சில் மொழியைக் கையாளும் விதத்துக்கும் நான் புத்தகத்திலிருந்து படித்துக் கொண்டு போன சொற்களுக்கும் இடையே அகண்ட வெளியே இருக்கிறது'' என்றார் திரு அப்பாதுரை. இவர் கற்றுக் கொண்டு போன பிரெஞ்சு அங்கே அறிவிப்புப் பலகையைப் படிக்க மட்டும் வெகுவாக உதவியது.

மகாநாடு தொடங்கப்பட்ட தினத்துக்கு முதல் நாள் பிரெஞ்சு நாட்டின் தேசியத் திருநாள். சரித்திர காலத்தில் பாஸ்டில் சிறை தகர்க்கப்பட்ட நாள். மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு அந்த விழாவைப் பார்க்க அனுமதிச் சீட்டு வழங்கினார்கள். ஒரு குறிப்பிட்ட அகலமான தெருவில் நின்று ஊர்வலத்தைப் பார்க்கத்தான் அந்த அனுமதிச் சீட்டு. சாதாரணமாக நம் ஊரில் நடக்கும் அலங்கார ஊர்வலங்கள் போலத்தான் இருந்ததாம்!

''மேலை நாட்டு ஆசிரியர்கள் நிறைய சம்ஸ்கிருத ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அதை ஒட்டித்தான் அவர்கள் இப்போது தமிழ் ஆராய்ச்சியில் இறங்கியிருக்கிறார்கள். பாணினியை நிறையப் படித்ததன் மூலம் அவர்கள் சொற்களின் ஒலிநய பேத ஆராய்ச்சியில் ஈடுபட்டார்கள். இப்போதுதான் தொல்காப்பியரின் உதவி நாடி மொழி இயல் பேதங்களில் புகுந்திருக்கிறார்கள். வடமொழி ஆராய்ச்சி அனுபவ அளவை அவர்கள் தமிழ் ஆராய்ச்சியில் எட்ட இன்னும் கொஞ்சம் நாட்கள் ஆகலாம். அவர்களுக்கு ஆர்வம் இருக்கிறது'' என்கிறார் அப்பாதுரை.

காலேஜ்—டி பிரான்ஸ் என்ற இடத்தில்தான் மகாநாடு நடந்தது. அப்பாதுரை, கி. வா. ஜ., சா. கணேசன், கருத்திருமன் ஆகியோர் தங்கியிருந்த 'டாக்மார்' ஹோட்டலிலிருந்து சமீபத்தில்தான். ஹோட்டல் அறை வாடகை இவர்களுக்கு அனுமதிக்கப்பட்டிருந்த அன்னியச் செலவாணி அத்தனையையுமே விழுங்கும் நிலை ஏற்பட்டு அப்புறம் ஒரு வகையாகச் சமாளிக்கப்பட்டது.

அப்பாதுரை பாரிஸ் நகரில் இருக்கும்போது முக க்ஷவரத்துக்காகச் சலூன் போக விரும்பினார். பாரிஸிலிருந்த இந்திய நண்பர்கள் அவருடைய அன்னியச் செலாவணியை நினைவுபடுத்தினார்கள்! அப்புறம் சலூன் நினைவு அவருக்குச் சென்னை வந்த பிறகுதான் தோன்றியது. சாதாரணமாக ஒரு சலூனில் நுழைந்தால் நம் ரூபாய் விகிதத்தில் பதின்மூன்று ரூபாய்க்கு மேல் கட்டணம் ஆகுமாம்.

பாரதியார் அந்த நாளையப் பிரெஞ்சுப் பிரதேசமான புதுச்சேரியில் சில காலம் வசித்தார் என்று தெரியும். ஆனால் அவரை பிரெஞ்சு நாட்டுத் தலைநகருக்கே அழைத்துப் போன பெருமை நம் துணைவேந்தர் சுந்தரவடிவேலு அவர்களையே சேரும். மகாகவி பாரதியின் கல்வி பற்றிய குறிக்கோள்களையும் லட்சியங்களையும் திரட்டி, சென்னை சர்வகலாசாலைத் துணைவேந்தர் சுந்தரவடிவேலு இந்த மகாநாட்டுக்கு ஒரு கட்டுரை சமர்ப்பித்ததின் மூலம் பாரதியின் கவிதை மணத்தை இன்றைய பாரீஸிலும் வீசச் செய்த தமிழ்நாட்டவரானார்.

அன்றைய பாரீஸில்—அரை நூற்றாண்டுக்கு முன்பே பாரதியின் கவிதா சக்தி பிரஞ்சுக்காரர்களைக் கவர்ந்திருக்கிறது. இதுபற்றிப் பாரதியே,



பிரான்ஸென்னும் சிறந்த புகழ் நாட்டிலுயர்
புலவோரும் பிறருமாங்கே
விராவு புக ழாங்கிலத்தீங் கவியரசர்
தாமுமிக வியந்துகூறிப்
பராவி யென்றன் தமிழ்க்கவியை மொழிபெயர்த்தும்
போற்றுகின்றார் ;.......

என்று எழுதியிருக்கிறார். ஆகையால் துணை வேந்தர் இக்காலக் கவியைப்பற்றி விவாதிக்க பிரான்ஸுக்கு ஏற்கனவே அறிமுகமான பாரதியையே துணைக்கு அழைத்தார்.

பாரீஸ் சர்வ கலாசாலையில் பதினைந்து நாடுகள் தனித்தனியே மாணவர் விடுதிகளை நிர்மாணித்துக் கொடுத்திருக்கின்றன. அந்தந்த நாடுகளின் பெயரை அந்த விடுதிகள் தாங்கி நிற்கின்றன. இந்திய மாணவ விடுதியும் உண்டு. ஆனால், அந்தந்த நாட்டுக்கான விடுதியில் அந்த நாட்டு மாணவர்கள் தான் வசிக்க வேண்டும் என்றில்லாமல் அந்த நாட்டைச் சேர்ந்த ஐம்பது சதமாணவர்கள் அவசியமாக மற்ற நாடுகளைச் சேர்ந்த ஐம்பது சதத்தினருடன் தங்கி வாழவேண்டும் என்ற நிபந்தனை உண்டு. இதனால் சர்வ தேச ஒற்றுமை உணர்ச்சி வளரும் அல்லவா.

மகாநாடு நடந்த நேரத்தில் வேனிற்கால விடுமுறை காலமாக இருந்தபோதிலும் இந்திய மாணவர்கள், தமிழகப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்காகவும், உபசரிப்பதற்காகவும் பாரீஸிலேயே தங்கி யிருந்தார்களாம். ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழர்கள் இங்கிலாந்திலிருந்து ஒரு பஸ்ஸையே அமர்த்திக்கொண்டு பாரீஸ் வந்திருந்தார்கள் இம் மாநாட்டுக்காக.

''இந்த மகாநாட்டில் தற்காலத் தமிழ் பற்றிக் கட்டுரைகள் சில படிக்கப்பட்டாலும் மகாநாடு என்னவோ புதைபொருள் ஆராய்ச்சிக்குத்தான் அதிக கவனம் செலுத்தியது என்று தோன்றியது. எந்த மொழியிலிருந்து எந்த மொழி பிறந்தது, எந்த மொழியிலிருந்து எந்த மொழி எந்த அளவுக்குக் கடன் வாங்கியது என்பன போன்ற ஆராய்ச்சிகளில் தான் அதிக நேரம் செலவிடப்பட்டதாக நான் நினைக்கிறேன். இத்தகைய விசாரணை இந்தக் காலத்துக்குத் தேவையா என்று சிந்திக்க வேண்டும்'' என்றார் சுந்தரவடிவேலு.

மொஹஞ்சதாரோ எழுத்துக்களைப்பற்றி விவாதிக்கும்போது ''இது திராவிட எழுத்தாக இருக்க வேண்டும்'' என்று ஃபின்னிஷ் நாட்டு ஆராய்ச்சியாளர் சொல்லவும் ''இப்போதைய நிலையில் இருக்கலாம் என்று சொல்லலாமே தவிர உறுதியாகச் சொல்ல முடியாது'' என்று கமில் ஸ்வலபின் சொல்லவும் ''அவை திராவிட எழுத்துக்கள் என்ற எண்ணத்தை நோக்கித்தான் ஆராய்ச்சிகள் நம்மை இழுத்துச் செல்கின்றன'' என்று ஐ. மகாதேவன் வற்புறுத்தவும், ஆராய்ச்சி நேரம் பல நூற்றாண்டுகளுக்கு முந்திய காலத்திலேயே தங்கி யிருந்தது.

இதற்கு முற்றிலும் மாறாக இருந்தது லயோலா கல்லூரியைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் வாசித்த கட்டுரை.

கடந்த இருபது ஆண்டுகளில் தமிழ்நாட்டில் வெளியான வார, மாதமிருமுறை, மாத தமிழ் சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்த கட்டுரை, கதைகளை ஆராய்ந்து அவர் புள்ளி விவரங்களுடன் பேசினார். கடவுளை நேராக உதவி கோரிய கதைகள், கடவுளை மறைமுகமாக உதவி வேண்டிய கதைகள், தற்கொலையில் முடிந்த கதைகள், ஏமாற்றத்தில் முடிந்த கதைகள் என்று விரிவாக ஆராய்ந்து பேசினார். தற்காலத் தமிழ் வளர்ச்சி பற்றிய கட்டுரை இது.

இந்த மகாநாட்டில் பங்கு கொண்ட மேலை நாட்டுக் கல்விமான்களில் சிலர் தமிழ் அறிந்தவர்கள். பலர் அறியத் துடிப்பவர்கள். பெரும்பாலோர் ஆசிய மொழி — கலைத் துறையில் ஆர்வம் காட்டுபவர்கள்.

யுனெஸ்கோ, ஆக்டிங் டைரக்டர் மால்காம் ஆதிசேஷய்யாவும், ஃபிலியோசா அவர்களும் வந்திருந்த பிரதிநிதிகளை நன்கு உபசரித்து அவர்களுடைய பாராட்டுதல்களுக்குப் பாத்திரமானார்கள். — பட்டினத்தார்

கண்ணாடி உடைகிறது...



பிரைட் பிளாஸ்டிக் சாமான்கள் உடையாது





கண்ணாடியின் எழில், உலோகத்தின் உறுதி, ஆனால் இவற்றின் குறைபாடுகளற்றது—அதுதான் உங்களுக்கான பிளாஸ்டிக். இலேசு, நீடித்த உழைப்பு, வண்ணங்கள், சுத்தம், வசதி, இவையனைத்தையும் உங்களுக்கென அற்புதமாக இணைத்து வழங்குகிறது பிரைட் பிளாஸ்டிக்.

பிரைட் பிளாஸ்டிக்கில் விதவிதமான வகைகள், வகை வகையான பொருட்கள், அளவிலாப் பயனளிக்கும் ஏராளமான சாமான்கள், சீப்புகள், தட்டுகள், சோப்புப் பெட்டிகள், குவளைகள், ஜாடிகள், சாமான் கூடைகள், வாளிகள், பேஸின்கள், டிரேக்கள், இன்னும் பலப்பல.

பிரைட் தான் உங்கள் சரியான தேர்ந்தெடுப்பு!

பிரைட் பிரதர்ஸ் பிரைவேட் லிட்.,
156A, ஜே. தாதாஜி ரோடு,
பம்பாய்-34.

BB.G.116 TM

ராமாயணம்

ராஜாஜி

பிரலாபித்துக் கொண்டிருந்த தாரையினிடம் ராமன் மெள்ளச் சென்றான். பயந்தே சென்றான்.

தாரையானவள் தன் முகத்தில் கோபக் குறிகள் ஏதும் காட்டாமல், ''வீரனே, எந்தப் பாணத்தால் என் புருஷனைக் கொன்றாயோ அதே பாணத்தைக் கொண்டு என்னையும் கொன்று என் பர்த்தாவை நான் சேரும்படி செய்வாயாக. என்னைவிட்டு அவர் சுவர்க்கத்திலும் சந்தோஷப்பட மாட்டார். பெண்ணைக் கொன்ற பாவம் உனக்கு உண்டாகும் என்று பயப்படாதே! புருஷனையும் மனைவியையும் ஒன்றுசேர்த்த புண்ணியமே உனதாகும். என் புருஷனை அதர்ம முறையில் கொன்றதற்கு இதுவே உனக்குப் பிராயச்சித்தமாகும். வாலி இறந்த பிறகு நான் பிழைத்திருக்க முடியாது!'' என்று மகாவீரனுடைய பட்டமகிஷிக்கு உரித்தான மொழிகளைப் பேசிப் புலம்பினாள்.

* * *

இவ்விடத்தில் தாரை ராமனுடைய அவதார உண்மையை அறிந்து ராமனை மகாவிஷ்ணுவாகவே கண்டாள் என்று வால்மீகி ராமாயணத்தில் சொல்லப்படுகிறது.

லக்ஷ்மணன் தாயாகிய சுமத்திரையைப் பற்றி வழங்கி வருவது போலவே, வாலியின் மனைவி தாரையும் மகா அறிவாளி, ஞானி என்பது பரம்பரையாக வந்த அபிப்பிராயம். ஆனபடியால் அவள் தன் புருஷனை அதர்ம முறையில் கொன்றவன் மேல் கோபமும் வெறுப்பும் முதலில் கொண்டிருந்தாலும் நேரில் தரிசனம் அடைந்ததும் ராமனுடைய உண்மைச் சொரூபத்தைக் கண்டாள் என்று சொல்லப்படுகிறது.

வெறும் கதையாகப் படித்தால் இது ரஸமாகத் தோன்றாது. பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இது அசம்பாவிதமாகத் தோன்றாது. துளஸிதாசருடைய ராமாயணத்தில் இந்தச் சந்தர்ப்பத்தில் பரமசிவன் பார்வதிக்குச் சொல்வதாகப் பாடுகிறார்:

''உமையே, பார்த்தாயா! சுவாமியாகிய ராமன் எல்லோரையும் எப்படிப் பொம்மையாட்டம் ஆடச் செய்கிறான் என்று.''

பக்திக் கண்களால் பார்த்தால்தான் பழைய புராணங்களின் சாரம் நன்றாகக் காண முடியும்.

சாதாரணமாக விமரிசனம் செய்தாலும் தாரை மிகச் சாமர்த்தியசாலி. ராஜரீதியில் தேர்ச்சி பெற்றவள். பின்னால் நடக்கப் போவதை ஊகித்து அறியும் சக்தி அவளுக்கு இருந்ததை வாலியே முன்பு சொல்லியிருக்கிறான். நடந்தது நடந்துவிட்டது; சுக்ரீவன் தன்னுடைய சாமர்த்தியத்தாலும், தெய்வச் செயலாலும் ராமனுடைய துணையைச் சம்பாதித்து விட்டான். வாலி இறந்துவிட்டான்; இனி அங்கதனுடைய க்ஷேமத்தைத் தானே பார்த்துக்கொள்ள வேண்டும்? அங்கதன் சுக்ரீவனோடு விரோதம் செய்து கொண்டு சண்டை பிடிக்க முடியுமா? சுக்ரீவனுக்கு வில்லேந்திய ராம லக்ஷ்மணர்கள் சகாயமாக ஏற்பட்டு விட்டார்கள். ஆனபடியால் நீதி சாஸ்திரப்படி இந்தச் சமயத்தில் சாமோபாயமே மேல் என்பதைத் தாரை கண்டாள். ஆனபடியால் ராமனிடம் தன் கோபத்தை மறைத்துப் பொறுமையுடன் நடந்து கொண்டாள். அங்கதனுடைய வாழ்க்கை பாழாகப் போகாமல் காக்கும் வழியைத் தேடினாள்.

வாலிக்கு உத்தரக்கிரியை விமரிசையாக நடத்தப்பட்டு முடிந்தது. மங்கள ஸ்நானம் செய்வித்து, சுக்ரீவனுக்கும் அங்கதனுக்கும் முறையே ராஜ்யாபிஷேகமும் யுவராஜ்ய பட்டாபிஷேகமும் செய்யப்பட்டன.

* * *

மழை காலம் ஆரம்பித்தது. சுக்ரீவன் முதலியவர்கள் கிஷ்கிந்தா புரத்தில் சுகமாகக் காலம் கழித்தார்கள். ராம லக்ஷ்மணர்கள் பக்கத்திலிருந்த ஒரு மலைக் குகையில் காலங் கழித்தார்கள். மழையால் வெள்ளப் பெருக்கெடுத்து, காட்டுப் பாதைகள் எல்லாம் நீரோட்டமாக ஓடி, போக்குவரத்துத் தடைப்பட்டுக் கிடந்தது. சீதையைத் தேடும்

காரியம் அதனால் தடைப்பட்டது. சீதையின் நிலையை எண்ணி எண்ணி ராமன் மிகவும் துக்கப்பட்டான். மாரி காலம் முடிவாகும் வரையில் பொறுமையோடு இருக்க வேண்டும் என்று லக்ஷ்மணன் ராமனுக்குச் சொல்லிச் சமாதானப் படுத்தி வந்தான். ராமனும் அப்படியே பொறுத்திருந்தான்.

எத்தனை பெரிய துக்கம் நேர்ந்தாலும் காலக்கிரமத்தில் உள்ளத்தில் நாம் பெற்றிருக்கும் மறதி என்ற சக்தியினால், துக்கம் வர வர மறைந்து போய்,



வாழ்க்கையில் கவனம் செலுத்தி அமைதி அடைகிறோம். ஈசுவரன் அமைத்திருக்கும் இந்த மறதி என்னும் சக்தி நமக்கு மிகப் பெருஞ் செல்வமாகும். இது இல்லையேல் இந்த உலகம் துயரத்துக்கு மேல் துயரமாகக் குவிந்து நரகமேயாகி விடும். இந்த நியதியின் படி சுக்ரீவனும் அவன் பந்துக்களும் தாரையும் உள்பட எல்லாரும் வாலியை இழந்த துக்கத்தை மறந்து சீரும் சிறப்பும் நிறைந்த கிஷ்கிந்தையில் சந்தோஷமாக இருந்தார்கள்.

ஹனுமான் மட்டும் கவலைப்பட்டான். அவன் ராமனுடைய காரியத்தை மறக்க வில்லை. பிரதிக்ஞை செய்து கொடுத்ததைப் பற்றி அரசனிடம் மெதுவாகப் பேசுவதற்குத் தகுந்த சமயம் பார்த்துக் கொண்டிருந்தான்.

மழை காலம் முடிந்தது. ஆகாயம் மேகமும் மின்னலும் இல்லாமல் வெண்மையாகி விட்டது. பறவைகளும் பறந்து விளையாட ஆரம்பித்துவிட்டன. மகாபுத்திசாலியும் தர்மத்தினின்று என்றும் பிறழாத உள்ளத்தைப் பெற்றவனுமான ஹனுமான் தன் அரசனிடம் சென்றான்.

ராஜ காரியங்களையெல்லாம் மந்திரிகளிடத்தில் ஒப்புவித்து விட்டு, அந்தப் புரப் போகத்தில் மூழ்கிக் கிடந்த சுக்ரீவனிடம் சென்று விநயமாகப் பேசலானான். எத்தனை அறிவாளிகளும் நல்லவர்களுமானாலும் சுகபோகத்தில் மூழ்கிவிட்டால் கடமைகளை மறந்து விடுவது இயற்கை என்பது ஹனுமானுக்குத் தெரிந்த விஷயம்.

60. கோபம் தணிந்தது

"முன்னோர்கள் அனுபவித்த ராஜ்யத்தை அடைந்து விட்டீர். புகழும் பெற்று விட்டீர். உம்முடைய அதிகாரம் ஸ்திரமாகி விட்டது. ஆனால் மித்திரர்களுக்குச் செய்ய வேண்டியதைச் செய்து அவர்களுடைய சிநேகத்தைப் பலப்படுத்திக்கொள்வது எஞ்சி நிற்கிறது. அதைச் செய்தால் அல்லவோ உம்முடைய புகழ் இன்னும் பெருகும். ராஜ்யமும் பலப்படும். தன் காரியங்களையும் சுகங்களையும் புறக்கணித்தும்கூடத் தன்னுடைய நண்பர்களின் காரியத்தை வாக்களித்த படி செய்ய வேண்டும். அப்படிச் செய்து தீர்த்தால் அரசனுடைய பலமும் கீர்த்தியும் விருத்தியடையும். பிரதிக்ஞை செய்து கொடுத்த வாக்குறுதிப்படி சொன்ன காலத்துக்கு முன்னாலேயே அதைச் செய்து தருவது விசேஷம். கால தாமதம் கூடாது. செய்ய வேண்டியதைக் கால தாமதம் செய்து விட்டு, பின்னால் செய்தாலும் கூட அது பயன் தராது. மித்திரர்களுக்குச் செய்ய வேண்டியதை அவர்கள் அதைப் பற்றி ஞாபகப்படுத்துவதற்கு முன்பே செய்வது புத்திசாலித்தனம். தாமதப்பட்டுச் செய்வதில், குணக் குறைவு. இது உமக்குத் தெரிந்த விஷயமே. ராமன் நமக்குச் செய்த உதவியை நாம் நினைவில் வைத்து அவனுக்காக நாம் செய்ய வேண்டியதை அவன் நமக்கு நினைவூட்டுவதற்கு முன்னதாகவே நாம் ஆரம்பிக்க வேண்டும். மாரி காலம் முடிந்து விட்டது. இனித் தாமதிக்கக் காரணமில்லை. சீதையைத் தேட வேண்டிய பெருங் காரியத்தை இனி ஒத்தி வைப்பது தகாது. ராமன் அதைப் பற்றி மிகப் பொறுமையாகவே இருந்து வருகிறான். ஆனாலும் இனிக் கொஞ்சமேனும் தாமதிக்கலாகாது. ராமன் உன்னுடைய சத்துருவைக் கொன்றதை யோசித்துப் பார்க்கவேண்டும். அதில் உள்ள பெரிய அபாயத்தையும் பழியையும் கருதாமல் எவ்வளவு துரிதமாகச் சொன்னபடியே செய்துவிட்டான். நாமும் அவ்வாறே வாக்குறுதியைச் சீக்கிரமாக நிறைவேற்ற வேண்டும். காலதாமதம் செய்வது கூடாது."

* * *

இவ்வாறு மிக விநயமாக நீதி முறையை எடுத்துக் காட்டி மாருதி சுக்ரீவனுக்கு யோசனை சொன்னான். சுக்ரீவனும் அது சரி என்று ஒப்புக் கொண்டு, சரியான காலத்தில் யோசனை சொன்னதற்காக ஹனுமானுக்கு நன்றி செலுத்தி வானர சேனையைத் திரட்டச் சொல்லி நீலனுக்கு உத்தரவிட்டான்.

"பூமி முழுதும் சுற்றித் தேடிப் பார்த்துச் சீதையைக் கண்டு பிடிக்க வேண்டும். திறமை வாய்ந்த வானரர்களை உடனே வந்து சேரக் கண்டிப்பாக உத்தரவிடுவாய். வந்து சேராதவர்களுக்கு மறு விசாரணை யின்றித் தண்டனை விதிக்கப்படும்" என்று சொல்லி விட்டுச் சுக்ரீவன் தன் அந்தப்புரத்துக்குள் சென்றான்.

ராமனும் லக்ஷ்மணனும் தங்களுடைய குகையில் காலம் கழித்து வந்தார்கள். எப்போது மாரி காலம் முடிவடைந்து வானர ராஜன் தன்னுடைய பணியைச் செய்வான் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

(தொடரும்)




EYETEX
EYETEX BINDI
EYETEX
5 IN 1

பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

பதினான்காம் அத்தியாயம்

கனவு பலிக்குமா?

நந்தினி மணிமேகலையின் முகவாயைச் சற்று நிமிர்த்திப் பிடித்துக் கொண்டு அவளுடைய மலர்ந்த கண்களை ஊடுருவி நோக்கினாள்.

"என் கண்மணி! உன் அந்தரங்கத்தை நீ என்னிடம் சொல்லாமல் வைத்துக்கொள்வதே நல்லது. பார்க்கப் போனால், உனக்கு நான் பழக்கமாகி முழுமையாக ஒரு நாள்கூட ஆகவில்லை. நெடுநாள் பழகிய தோழிகளிடந்தான் அந்தரங்கத்தைச் சொல்ல வேண்டும்" என்றாள்.

"இல்லை, அக்கா! உங்களைப் பார்த்தால் எனக்கு வெகுநாள் பழக்கமான தோழிமாதிரியே தோன்றுகிறது. யாரிடமும் சொல்லாத விஷயத்தைத் தங்களிடம் சொல்லும்படி என் உள்ளம் தூண்டுகிறது. யாரிடமும் கேட்கக் கூடாத காரியத்தைத் தங்களிடம் கேட்கும் தைரியமும் உண்டாகிறது..."

"அப்படியானால் கேளடி, கண்ணே!"

"உருவெளித் தோற்றம் என்று கதைகளில் சொல்லுகிறார்களே, அது உண்மையாக ஏற்படக்கூடுமா, அக்கா? நம் எதிரில் ஒருவர் இல்லாத போது அவர் இருப்பதுபோலவேதோன்றுமா?"

"சில சமயங்களில் அப்படித் தோன்றும். ஒருவரிடம் நாம் அதிகமான ஆசை வைத்திருந்தால், அவருடைய உருவம் எதிரில் இல்லாவிட்டாலும் இருப்பது போலத் தோன்றும். ஒருவரிடம் அதிகமான துவேஷம் வைத்திருந்தால் அவருடைய உருவமும் தோற்றம் அளிக்கும். மாயக் கண்ணனுடைய கதை நீ கேட்டதில்லையா, மணிமேகலை? ஏன்? நாடகம் கூடப் பார்த்திருப்பாயே? கம்ஸனுக்குக் கிருஷ்ணனின் பேரில் ரொம்பத் துவேஷம். ஆகையால் கண்ட இடமெல்லாம் கிருஷ்ணனைத் தோன்றியது; கத்தியை வீசி வீசி ஏமாந்து போனான். நப்பின்னை என்னும் கோபிகைக்குக் கண்ணன் மீது ரொம்ப ஆசை. அவளுக்கும் கண்ணன் உருவம் இல்லாத இடத்திலெல்லாம் தோன்றுமாம். தூணையும் மரத்தையும் நதியின் வெள்ளத்தையும் கண்ணன் என்று கட்டித் தழுவிக் கொள்ளப் போய் ஏமாற்றமடைவாளாம்! அடியே, மணிமேகலை! உன்னை அந்த மாதிரி மயக்கிவிட்ட மாயக் கண்ணன் யாரடி?"

" அக்கா! முதன் முதலாக நாலு மாதங்களுக்கு முன்னால்தான் அவரை நான் நேரில் பார்த்தேன். அதற்கு முன்னால் என் தமையன் கந்தமாறன் அவரைப் பற்றி அடிக்கடி சொல்லியிருந்தான். அப்போதெல்லாம் அவர் உருவம் என் கண்முன் தோன்றுவதில்லை. ஒரு தடவை பார்த்தபிறகு அடிக்கடி என் கனவில் அவர் தோன்றி வந்தார். பகலிலும் சில சமயம் எதிரில் அவருடைய உருவம் நிற்பது போலிருக்கும்...."

''நேற்றுக்கூட அந்த மாயாவியின் உருவெளித் தோற்றத்தை நீ கண்டாய் அல்லவா ?''

''ஆம், அக்கா! உங்களுக்கு எப்படித் தெரிந்தது ?''

''என்னிடம் மந்திர சக்தி உண்டு என்பதைப் பற்றி உனக்கு யாராவது சொல்லவில்லையா?....''

''ஆம் : சொன்னார்கள். அது உண்மைதானா, அக்கா ?''

''நீயே பரீட்சித்துத் தெரிந்துகொள். உன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அந்த யௌவன சுந்தர புருஷன் யார் என்று வேண்டுமானால், என் மந்திர சக்தியினால் கண்டு சொல்லட்டுமா?''

''சொல்லுங்கள், பார்க்கலாம். எனக்கும் அவர் பெயரைச் சொல்லக் கூச்சமாயிருக்கிறது.''

நந்தினி சிறிது நேரம் கண்ணிமைகளை மூடிக் கொண்டிருந்துவிட்டுத் திறந்து, ''உன் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட ஆசைக் காதலன் வாணர்குலத்தில் வந்த வல்லவரையன் வந்தியத்தேவன் இல்லையா?'' என்றாள்.

''அக்கா ! உங்களிடம் மந்திர சக்தி இருப்பது உண்மைதான் !'' என்றாள் மணிமேகலை.

''அடி, பெண்ணே! எப்போது உன் உள்ளத்தை அவ்வளவு தூரம் ஒருவருக்குப் பறி கொடுத்துவிட்டாயோ, அப்போது ஏன் உன் தமையனிடம் அதைப் பற்றிச் சொல்லவில்லை? மதுராந்தகருக்கு ஆசை காட்டுவானேன்? கரிகாலரை இங்கே தருவித்து வீண் பிரயத்தனம் செய்வானேன்? என்னை அநாவசியமாக இங்கே வரவழைப்பானேன்?''

'' அக்கா ! என் தமையன் கந்தமாறனுக்கு அவரைப் பிடிக்கவில்லை...''

''அழகாயிருக்கிறது! உன் தமையனை கலியாணம் செய்து கொள்ளப் போகிறான்? ஆனால் கந்தமாறன்தானே வந்தியத் தேவனைப் பற்றி உனக்குச் சொன்னான் என்கிறாய்? இங்கே அவனைக் கூட்டிக் கொண்டு வந்ததும் உன் தமையன்தானே ?''

'' ஆமாம் ; கந்தமாறன்தான் அவரைப் பற்றிச் சொன்னான். அந்தப்புரத்துக்கு ஒரு நாளைக்கு அழைத்துக்கொண்டும் வந்தான். ஆனால் பிற்பாடு அவன் மனம் மாறிவிட்டது. அதற்குக் காரணமும் இருக்கிறது. தஞ்சாவூரில் என் தமையனை அவர் கத்தியால் முதுகில் குத்திவிட்டாராம், அக்கா! உங்கள் அரண்மனையிலே என் தமையன் காயத்தோடு படுத்துக் கிடந்தானுமே? உங்கள் அன்பான பராமரிப்பினால்தான் அவன் உயிர் பிழைத்து எழுந்தானுமே ?''



''நான் செய்ததை உன் தமையன் அதிகப் படுத்திக் கூறுகிறான். அது போனால் போகட்டும். இப்போது நீ என்ன செய்வாய்? உன் மனத்தைக் கவர்ந்தவன் இப்படி உன் தமைய னுக்கு விரோதியாகி விட்டானே?''

''ஆனால் இவர் என்ன சொல்கிறார், தெரியுமா?....''

''இவர் என்றால், யார்?''

''அவர்தான்! நீங்கள் சற்றுமுன் பெயர் சொன்னீர்களே, அவர்தான்! கந்தமாறனை அவர் குத்தவேயில்லை என்று ஆணையிடுகிறார். வேறு யாரோ குத்தித் தஞ்சாவூர்க் கோட்டை மதிள் ஓரத்தில் போட்டிருந்தார்கள் என்றும், அவர் எடுத்துக் கொண்டு போய்க் காப் பாற்றியதாகவும் சொல்லுகிறார்...''

''இதை எப்போதடி அவர் உனக்குச் சொன்னார்?''

''நேற்றுத்தான்!....''

''நேற்று அந்த வந்தியத்தேவனை நீ நேரில் பார்த்தாயா, என்ன? அவ னுடைய உருவெளித் தோற்றத்தைக் கண்டதாக அல்லவா கூறினாய்?''

''அதுதான் அக்கா, எனக்கு ஒரே மனக் குழப்பமாயிருக்கிறது. நேற்று நான் பார்த்தது அவரா, அல்லது அவ ருடைய உருவெளித் தோற்றமா என்று தெரியவில்லை. நேற்று நடந்தவற்றை எண்ணினால், எல்லாம் ஒரு கனவு மாதிரி இருக்கிறது. அக்கா! சில சமயம் மனிதர்கள் செத்துப் போனால் அவர்களுடைய ஆவி வந்து பேசும் என்று சொல்கிறார்களே, அது உண்மையா?'' — இந்தக் கேள்வியைக் கேட்டபோது மணிமேகலையின் குரலில் அளவிலாத பீதி தொனித்தது.

நந்தினியின் உடலும் நடுங்கிற்று. எங்கேயோ உச்சிமோட்டைப் பார்த்த வண்ணம் ''ஆம்; அது உண்மைதான்! அற்பாயுளில் மாண்டவர்களின் ஆவி அப்படி உயிரோடிருப்பவர்களை வந்து சுற்றும். ஒருவருடைய தலையை வெட் டிக் கொன்று விட்டார்கள் என்றால், சில சமயம் தலை மட்டும் வரும். சில சமயம் உடம்பு மட்டும் தனியாக வரும். இன்னும் சில சமயம் இரண்டும் தனித் தனியாக வந்து 'பழி வாங்கினாயா?' என்று கேட்கும்!'' என்றாள்.



பிறகு மணிமேகலையைப் பார்த்து உரத்த குரலில், "அடி பெண்ணே! நீ எதற்காக இந்தக் கேள்வி கேட்டாய்? உன் காதலனுக்கு அப்படி ஏதாவது நேர்ந்திருக்கும் என்று பயப்படுகிறாயா? உன் மனத்தில் இந்தச் சந்தேகத்தை யார் கிளப்பி விட்டார்கள்?" என்றாள்.

"இந்த அரண்மனையின் ஆவேசக்காரன் ஒருவன் இருக்கிறான். அவனைக் கூப்பிட்டு அனுப்பினேன். அவனை யாரோ நேற்றிரவு அடித்துப் போட்டு விட்டார்களாம். அவனுக்குப் பதிலாக அவன் பெண்டாட்டி தேவராட்டி வந்தாள். அவள்தான் சொன்னாள்..."

"சீச்சீ! அதையெல்லாம் நீ நம்பாதே!"

"எனக்கும் நம்பிக்கைப்படவில்லை. வெறும் ஆவி வடிவமாயிருந்தால் தொட முடியாதல்லவா, அக்கா!"

"ஆவியையும் தொட முடியாது; உருவெளித் தோற்றத்தையும் தொட முடியாது. நீ ஏன் கேட்கிறாய்? உன் உள்ளத்தைக் கவர்ந்தவனை நீ நேற்றுத் தொட்டுப் பார்த்தாயா, என்ன?"

"அதுதான் ஒரே குழப்பமாயிருக்கிறது. தொட்டுப் பார்த்தது போலவும் இருக்கிறது; ஆனால் வேறு சில விஷயங்களை நினைத்துப் பார்த்தால் சந்தேகமாகவும் இருக்கிறது."

"நேற்று நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்லடி, பெண்ணே! நான் உன் சந்தேகத்தை நிவர்த்தி செய்கிறேன்!"

"ஆகட்டும், அக்கா! நான் ஏதாவது முன் பின்னாக உளறினால் கேள்வி கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்!" என்றாள் மணிமேகலை. பிறகு அவள் கூறினாள்: "நேற்று நான் கிட்டத்தட்ட இதே நேரத்தில் இங்கே இருந்தேன். என் தமையன் சொல்லிப் போயிருந்தபடி தங்களுக்கு இங்கே வேண்டிய சௌகரியம் எல்லாம் பணிப்பெண்கள் சரியாகச் செய்திருக்கிறார்களா என்று கவனிப்பதற்காக வந்தேன். ஒருமுறை, இதோ இருக்கும் கண்ணாடியில் என் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன்!...."

"உன் அழகை நீயே பார்த்துக் கொண்டிருந்தாயாக்கும்..."

"அப்படியொன்றும் இல்லை, அக்கா! என் முக இலட்சணம் எனக்குத் தெரியாதா, என்ன?"

"உன் முக லட்சணத்துக்கு என்ன குறைவு வந்தது? ரதியும் இந்திராணியும் மேனகையும் ஊர்வசியும் உன்னைப் பார்த்துப் பொறாமைப்பட மாட்டார்களா?"

"அவர்கள் எல்லாரும் உங்கள் கால் தூசி பெற மாட்டார்கள், அக்கா!"

"சரி, சரி! மேலே சொல்! கண்ணாடியில் உன் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாய்...."

"அப்போது திடீரென்று இன்னொரு முகம் கண்ணாடியில் தெரிந்தது. என் முகத்துக்கு அருகில் தெரிந்தது..."

"அது உன் காதலன் முகந்தானே?"

"ஆமாம்; எனக்குத் தூக்கிவாரிப் போட்டது......"

"எதற்காகத் தூக்கிவாரிப் போட வேண்டும்? நீதான் அடிக்கடி அவனுடைய முகத்தைக் கனவில் பார்ப்பதுண்டு என்று சொன்னாயே? உருவெளித் தோற்றத்தைக் காண்பதுண்டு என்றும் கூறினாயே?"

"அதற்கும் இதற்கும் கொஞ்சம் வித்தியாசம் இருந்தது. கனவில் வரும் போது எதிரே சற்றுத் தூரத்தில் தெரியும். உருவெளித் தோற்றத்திலும் அப்படித்தான். ஆனால் இங்கே பின்னாலிருந்து, — சொல்லக் கூச்சமாயிருக்கிறது....."

"பாதகமில்லை, சொல்லடி கள்ளி!"

"பின்னாலிருந்து கன்னத்தில் முத்தமிட வருகிறதைப் போல் இருந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். ஒருவரும் இல்லை. பிறகு கண்ணாடியிலும் அந்த முகம் தெரியவில்லை. எனக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. இந்த அறைக்குப் பக்கத்தில் உள்ள வேட்டை மண்டபத்தின் இரகசியக் கதவை உங்களுக்குத் திறந்து காட்டினேன் அல்லவா? நேற்று, கண்ணாடி அந்தக் கதவுக்கு நேரே வைத்திருந்தது. ஆகையால் அந்தக் கதவைத் திறந்து வேட்டை மண்டபத்திலிருந்து யாராவது எட்டிப் பார்த்திருப்பார்களோ என்று தோன்றியது. அப்படியிருக்க முடியாது என்றும் எண்ணினேன். அந்நிய புருஷன் ஒருவன் அந்த வேட்டை மண்டபத்தில் எப்படி வந்திருக்க முடியும்? ஆயினும் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்வதற்காகக் கதவைத் திறந்து வேட்டை மண்டபத்துக்குள் போய்ப் பார்த்தேன்...."

நந்தினி இதற்குள் ஆர்வத்துடன் கேட்கத் தொடங்கியிருந்தாள். "வேட்டை மண்டபத்தில் அந்தத் திருடன் ஒளிந்திருந்தானா? அகப்பட்டுக் கொண்டானா?" என்று கேட்டாள்.

"என்ன அக்கா, அவரைத் 'திருடன்' என்கிறீர்களே?"

"திருடன் என்றால், நிஜத் திருடனா? உன் மனத்தைக் கவர்ந்த திருடனைச் சொன்னேன் அடி! அவன் வேட்டை மண்டபத்தில் இருந்தானா?"

கீதைக் கதைகள்



'அந்தப் பானையை நானே வனைந்தேன்; வேக வைத்தேன். எனவே, அஃது என் சொத்தாயிற்று...'

2. விலை

அவனும் அவன் கருமமும்.

சக்கரம் சுழல்கிறது. அதிலிருக்கும் களிமண்ணில் அவன் விரல்கள் வித்துவம் பயில்கின்றன. அவன் பணியோராளுன். அருகில் வந்த சித்தரைக் கவனிக்கவில்லை.

தனக்குள்ள கௌரவத்தை அவன் தரவில்லை என்ற முனிவு சித்தரின் உள்ளத்தில் திரண்டு விளைந்தது. சந்தைக்குச் செல்லத் தயாராக இருந்த பானைகளுள் ஒன்றைக் காலால் இடறினார்.

பானை உடைந்தது. சித்தரின் சினமும் உடைந்தது.

குயவன் நிமிர்ந்தான். சக்கரம் தரித்தது. சித்தர் பானைமீது உரிமை பாராட்டியிருப்பதை உணர்ந்தான். கோபம் குயவன் மாட்டு இடம் பெயர்ந்தது.

'ஏன் பானையை உடைத்தாய்?'

'என்றாவது உடைந்து போகும் மட்பாண்டம். அதற்காக ஏன் இத்தனை கோபம்?' சித்தர் சிரித்தார்.

'இது என் பானை. விலை கொடுத்து வாங்கிய பிறகு நீ அதை உடைத்திருந்தால், எனக்குக் கவலையில்லை.'

'அப்படியா? மண்ணேயான பானைக்கு எப்படி விலை விளைந்தது?'

'அந்தப் பானையை நானே வனைந்தேன்; வேக வைத்தேன். எனவே, அஃது என் சொத்தாயிற்று. விலையைச் செலுத்துபவனுக்குப் பானையின் சொத்துரிமையை விற்கிறேன். அப்பொழுது பானையை உடைக்கும் அதிகாரம் வாங்கியவனைச் சார்கின்றது. இப்பொழுது செய்யத் தக்கது இதுதான்....'

'எது?'

'பானையை உடைத்தபடியினால், நீ பானையின் உரிமையை அநுபவித்தவனாகி விட்டாய். எனவே, நீ பானையின் விலையை எனக்குத் தருவதுதான் உகந்தது; அதுவே தர்மம்.'

குயவனின் கூற்றில் தொனித்த நெறி சித்தரின் அறிவுப் பிடிக்குட் சிக்கவில்லை. அகந்தையின் பசளை யுண்ட சித்தரின் முனிவு மீண்டும் மதாளித்தது.

'குயவா! பானை உன்னுடையது எனச் சொத்துரிமை பாராட்டுகின்றாய். நீ வனைந்திருந்தாலும், வேக வைத்திருந்தாலும் வந்தடைந்த அதிகாரம் என்னே! பானையை எதிலிருந்து செய்தாய்?'

'மண்ணிலிருந்து...'

'முதலில் நீ சூனியத்திலிருந்து மண்ணை உருவாக்கிக் காட்டு. அஃது உன்னால் சாலுமாயின், நீ கோரும் விலையை நான் தருகிறேன்....'

குயவன் ஒரு கணம் சிந்தனையில் ஆழ்ந்தான்.

அவனை மடக்கிவிட்டதான பூரிப்பில் சித்தரின் முகத்தில் ஏளனச் சிரிப்புகள் பூத்தன.

சக்கரம் சுழல்கின்றது. பானை வனையும் பணியின் தொடர்.

சித்தர் ஏமாப்புடன், 'நான் சொன்ன தத்துவம் புரிந்ததா?' எனக் கேட்டார்.

'நான் எப்படித்தான் வழக்குரைத்தாலும் நீ பானைக்குரிய விலையைத் தரப்போவதில்லை. குயுக்தி வாதத்திலே விரயமாகும் நேரத்தில் இன்னொரு பானையை வனைந்தெடுப்பேனேயாகில், நீ உடைத்த பானையை ஈடு செய்யலாம்' எனக் கூறிய குயவன், வனைதற் பணியில் ஒன்றலானுன்.

குயவன் ஏதோ மகா தத்துவம் பேசிவிட்டதான மலைப்பு சித்தரின் மனத்தினைக் குடையலாயிற்று!

- எஸ். பொன்னுத்துரை

''அதுதானே அதிசயம்! அவர் அங்கே இல்லை. அதற்குப் பதிலாக எங்கள் அரண்மனைப் பணியாள் இடும்பன்காரி அந்த அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். அவனுடைய முகம் அய்யனர் கோவில் வாசலில் உள்ள காடு வெட்டிக் கருப்பன் முகம் மாதிரி இருக்கும். 'இங்கே வேறு யாராவது வந்ததுண்டா?' என்று கேட்டேன். 'இல்லை' என்று சாதித்து விட்டான்...''

''அவன் பொய் சொல்லியிருப்பான் என்று கருதுகிருயா?''

''அது என்னமோ எனக்குத் தெரியாது. ஆனல் இன்னொரு ஆள் அந்த மண்டபத்தில் ஒளிந்திருப்பதாகத் தோன்றியது. 'திருட்டு, தானே வெளியாகட்டும்' என்று நான் இந்த அறைக்குத் திரும்பி வந்து விட்டேன்...''

''திருட்டு வெளியாயிற்று?''

''கேளுங்கள்! நான் இந்த அறைக்குள் வந்து வேட்டை மண்டபத்துக்குள் ஏதாவது பேச்சுக் குரல் கேட்கிறதா என்று கவனித்துக் கொண்டிருந்தேன். பேச்சுக் குரல் கேட்டது. தடபுடலாக ஏதோ விழுகிற சத்தமும் கேட்டது. நான் என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே இந்தக் கதவு அசைந்தது. நான் விளக்கை மறைத்து வைத்து விட்டுக் காத்துக் கொண்டிருந்தேன். இந்தக் கதவிலேயே வட்டமான ஒரு சிறிய உட்கதவு இருக்கிறது. அதைத் திறந்து கொண்டு ஓர் உருவம் இங்கே வரப் பார்த்தது. 'அபயம்! அபயம்! என்னைக் காப்பாற்று!' என்று குரல் கேட்டது. குரலும் உருவமும் அவரைப் போல் தோன்றியபடியால், அவர் இந்த அறை

யில் வருவதற்கு உதவி செய்து விட்டு விளக்கை மறைவிடத்திலிருந்து எடுத்து உயர்த்தினேன். பார்த்தால் அவரே தான்!''

''மணிமேகலை! இது என்ன அதிசய மடி! விக்கிரமாதித்யன் கதையைப் போல அல்லவா இருக்கிறது?''

''இன்னும் கேளுங்கள்! நாலு மாதங்களாகக் கனவில் கண்டு வந்தவரை நேரில் பார்த்ததும் என் உள்ளம் பூரித்தது; உடம்பு சிலிர்த்தது. ஆனால் கள்ளக் கோபத்துடன் அவரிடம் பேசினேன்.. 'பெண்கள் வசிக்கும் அந்தப்புரத்தில் எப்படி அவர் திருட்டுத்தனமாகப் பிரவேசிக்கலாம்?' என்று கேட்டேன். அவரைக் கொல்லுவதற்காக யாரோ சிலர் துரத்திக் கொண்டு வருவதாகக் கூறினர். 'உயிருக்குப் பயந்தோடும் பயங்கொள்ளி' என்று பரிகசித்தேன். அதற்குத் தம்மிடம் ஆயுதம் இல்லை என்று சமாதானம் கூறினர். பிறகு தான் என் தமையனை அவர் முதுகில் குத்தியதைப் பற்றிப் பிரஸ்தாபித்தேன். 'இல்லவே இல்லை' என்று சத்தியம் செய்தார் அக்கா!''

''நீயும் அதை நம்பி விட்டாயாக்கும்!''

''அப்போது நம்பும்படியாகத்தான் இருந்தது. ஆனால் பிறகு நடந்ததையெல்லாம் யோசிக்கும்போது எதை நம்புவது, எதை நம்பாமல் இருப்பது என்றே தெரியவில்லை...''

''பிறகு இன்னும் என்ன அதிசயம் நடந்தது?''

''அவருடன் பேசிக் கொண்டிருக்கும் போதே என் ஒரு காதினால் அடுத்த அறையில் ஏதாவது சத்தம் கேட்கிறதா என்று கவனித்துக் கொண்டிருந்தேன். பலபேர் நடமாடும் சத்தமும் பேச்சுக் குரல்களும் கேட்டன. ஆகையால் அவரைக் கொல்வதற்கு யாரோ தொடர்ந்து வருகிறார்கள் என்பது உண்மையாகவே இருக்கும் என்று எண்ணிக் கொண்டேன். கேளுங்கள், அக்கா! அந்தச் சமயத்தில் இந்தப் பேதை மனம் எப்படியாவது அவரைக் காப்பாற்ற வேண்டும் என்று உறுதி கொண்டது. அவரைக் கொல்ல வருகிறவர்கள் யார் என்றும் தெரிந்து கொள்ள விரும்பினேன். இடும்பன்காரி இதற்கெல்லாம் உட்கையா இருப்பானு? அப்படியானால் அவன் இவருக்கு உட்கையா? இவரைக் கொல்ல வருகிறவர்களுக்கு உட்கையா என்று அறிய விரும்பினேன். வேட்டை மண்டபத்துக்குள் வரும் இரகசியச் சுரங்க வழி இவ்வளவு பேருக்குத் தெரிந்திருப்பதை நினைத்துத் திகில் உண்டாயிற்று. அதிலும் நீங்கள் இங்கே தங்கப் போகிறீர்கள் என்பதை எண்ணியபோது கவலை அதிகமாயிற்று. தகப்பனாரைக் கூப்பிட்டனுப்பலாம் என்று நினைத்தால், அதற்கும் தைரியம் வரவில்லை. இவர் அந்தப்புரத்துக்குள் வந்திருப்பதைத் தகப்பனார் பார்த்தால், உடனே இவர் உயிருக்கே ஆபத்து வந்துவிடும். ஆகையால் இவரை இங்கேயே சற்று இருக்கும்படி சொல்லிவிட்டு வேட்டைமண்டபத்துக்குள் இருப்பவர்கள் யார் என்று பார்த்துவிட்டு வருவதற்காகக் கதவைத் திறந்து கொண்டு போனேன். உள்ளே ஐந்தாறு ஆட்கள் மூலைக்கு மூலை சுவர் ஓரமாக இருந்தார்கள். என்னைப் பார்த்து விட்டு அவர்கள் பிரமித்து நின்றதாகத் தோன்றியது. அவர்களை அவ்விதம் பார்த்ததில் என் மனத்திலும் சிறிது பயம் உண்டாயிற்று. அந்தப் பயத்தைப் போக்கிக் கொண்டு கடுங் கோபத்தை வரவழைத்துக் கொண்டு அவர்கள் யார் என்று கேட்பதற்காக வாய் எடுத்தேன். இதற்குள் இந்த அறையில் என் தோழி சந்திரமதி மற்றொரு கதவு வழியாகப் புகுந்து 'அம்மா! அம்மா!' என்று கூப்பிட்டுக் கொண்டு வந்தாள். இவர் இங்கே இருப்பது எனக்கு உடனே நினைவு வந்தது. சந்திரமதி இவரைப் பார்த்துவிட்டுக் கூச்சல் போடப் போகிறாளே என்று பயந்து போனேன். வேட்டை மண்டபத்துக்குள் இருப்பவர்களை மறுபடியும் பார்த்துக் கொள்ளலாம் என்று திரும்பினேன். சந்திரமதியையும் வழிமறித்து அழைத்துக்கொண்டு இந்த அறைக்குள் வந்து பார்த்தேன். இங்கே அவரைக் காணவில்லை. மாயமாய் மறைந்து போய்விட்டார். 'யாராவது இங்கே இருந்தார்களா?' என்று சந்திரமதியைக் கேட்டேன். தான் பார்க்கவில்லை என்றாள். இன்னும் சிறிது தேடிப் பார்த்துவிட்டு மறுபடியும் வேட்டை மண்டபத்துக்குள் போனேன். அங்கேயும் நான் சற்று முன் பார்த்தவர்கள் யாரும் இல்லை. இடும்பன்காரி மாத்திரம் முன்போலவே அறையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். 'சற்று முன்னால் இங்கே வந்திருந்தவர்கள் யார்? அவர்கள் இப்போது எங்கே?' என்று கேட்டேன். இடும்பன்காரி, 'இங்கே ஒருவருமே வரவில்லையே, அம்மா!' என்று ஒரே சாதிப்பாகச் சாதித்தான். அவன் வார்த்தையை என்னால் நம்ப முடியவில்லை. என் தோழி சந்திரமதியோ என்னைப் பரிகாசம் பண்ண ஆரம்பித்து விட்டாள். 'அம்மா! இன்றைக்கு உங்களுக்கு ஏதோ சித்தப் பிரமைதான் பிடித்திருக்கிறது! ஆள் இல்லாத இடங்களிலெல்லாம் ஆள்

மண்ணின் மாண்பு





உயிர் பெற்றார்!

கலிபோர்னியாவில் ஒவ்வொருவருடைய தாத்தாவும் இருநூறு வருஷங்கள் வாழ்வார்கள்! அவ்விதம் வயதான ஒருவருக்கு வாழ்க்கை அலுத்துக் கசப்பாகிறது. ஆனால் வியாதியுறவோ, மரணமடையவோ அவர் விரும்பவில்லை. கடைசியில் ஒரு நண்பர் யோசனைப்படி உயில் தயாரித்து வைத்து விட்டு உலகத்தின் மற்றப் பகுதிகளைப் பார்வையிடச் சென்றார். கலிபோர்னியாவை விட்டுச் சென்றதும் அவர் நோயுற்று மரணமடைந்தார்.

அவரது உயிலின்படி அவரது சொத்துக்குப் பாத்திரதை கோரும் வாரிசு அவரது சடலத்தைக் கலிபோர்னியா மண்ணில் புதைக்க வேண்டும் என்றிருந்தது. அவரது உடல் கொண்டுவரப்பட்டு மதச் சடங்குகள் முறைப்படி நிறைவேறின. ஆனால் அதிசய உடல் நலமும் உயிரும் தரும் கலிபோர்னியா மண் அவருக்கு உயிரூட்டி விட்டது! அவர் ஒன்றுமே நிகழாதது போல் எழுந்து நின்றார். அவரது வாரிசு இதைக் கண்டு துக்கப்பட்டான். அவரை மேலும் பிரயாணம் செய்யும்படி தூண்டினான். ஆனால் அவரோ 'காலம் வரட்டும்' என்று கலிபோர்னியா பூமியிலேயே இருக்கத் தீர்மானித்து விட்டார்!

(அமெரிக்க நாடோடிக் கதை) - பி. எஸ். மணி

இருப்பதாகத் தோன்றுகிறது!'' என்றாள். பிறகு நீங்கள் எல்லோரும் கோட்டை வாசலை நெருங்கி வந்து கொண்டிருப்பதாகத் தெரிவித்தாள். தங்களை வரவேற்பதற்காக என்னை என் தந்தை உடனே அழைத்து வரச் சொன்னதாகவும் கூறினாள். உடனே நான் அரண்மனை வாசலுக்குப் புறப்பட்டேன். சீக்கிரம் அங்கே வந்து விடுவதற்காகச் சந்திரமதி வந்த நடையில் சென்று இரண்டு கட்டுக்களைத் தாண்டி மச்சுப் படி வழியாக ஏறி மேல் மாடத்தில் நடந்து போனேன். அப்போது மறுபடியும் ஓர் அதிசயத்தைப் பார்க்க நேர்ந்தது. அந்த வாணர் குலத்து வீரர் நிலா முற்றத்தைக் கடந்து மதிள் சுவர் ஓரமாகப் போய்க் கொண்டிருந்தார். சுவரில் ஓர் மூங்கில் கழியை வைத்து ஏறி மதிள் சுவரைத் தாண்டிக் குதிப்பதையும் பார்த்தேன். என் கண்களுக்கு அவ்வாறு தோன்றியது. அவையெல்லாம் உண்மையாக நடந்தவையா அல்லது என் சித்தப் பிரமையா என்று இன்னமும் எனக்கு நிச்சயமாகவில்லை..''

நந்தினி சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். அந்த மாளிகை வாசலுக்குச் சற்றுத் தூரத்தில் அடர்ந்த மரங்களுக்கிடையே நேற்று மாலை அவள் பார்த்த இரு முகங்கள் அவள் மனக் கண் முன் தோன்றின. அவர்களைப் பிடிப்பதற்காகக் குதிரை ஆட்கள் ஏவப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் அவள் அறிந்திருந்தாள். அவர்கள் ஒருவேளை இதற்குள் பிடிபட்டிருப்பார்களோ? பிடிபட்டிருந்தால் இங்கே கொண்டு வரப்படுவார்களா?...

''அக்கா! உங்களுக்கு என்ன தோன்றுகிறது?'' என்று கேட்டு நந்தினியின் சிந்தனையைத் தடை செய்தாள் மணிமேகலை.

''எனக்கா? எனக்குத் தோன்றுகிறதையா கேட்கிறாய்? உனக்கு மோகப் பித்தம் நன்றாகத் தலைக்கு ஏறியிருக்கிறது என்று தோன்றுகிறது'' என்றாள் நந்தினி.

''சந்திரமதியைப் போல் நீங்களும் பரிகாசம் செய்கிறீர்களா?''

''நான் பரிகாசம் செய்யவில்லையடி.. நேரில் பார்த்துப் பேசிய உனக்கே உண்

மையா, கனவா, சித்தப் பிரமையா என்று தெரியவில்லையே? நான் எப்படிச் சொல்ல முடியும்? இந்த அறையிலிருந்து வெளியேறிப் போவதற்கு வேறு ஏதேனும் இரகசிய வழி இருக்கிறதா?''

''எனக்குத் தெரிந்தவரையில் வேறு இரகசிய வழி இல்லை, அக்கா!''

''நீயும் சந்திரமதியும் போன வழியில் அவனும் போய் மச்சுப் படி ஏறிப் போயிருக்கலாம் அல்லவா?''

''அங்கே வழியில் பல பணிப் பெண்கள் இருந்தார்கள், அக்கா! அவர்களுக்குத் தெரியாமல் போயிருக்க முடியாது.''

''அதிசயமாகத்தா னிருக்கிறது..... இதையெல்லாம் பற்றி உன் தகப்பனாரிடம் நீ தெரிவிக்கவில்லையா?''

''தெரிவிக்கவில்லை, அக்கா! தகப்பனாரிடம் சொல்லக் கூச்சமாகவும் இருக்கிறது; பயமாகவும் இருக்கிறது. ஒரு வேளை அவர் இங்கே வந்திருந்த தெல்லாம் உண்மையாக இருந்தால்...?''

''ஆமாம்; புருஷர்களிடம் இதைப் பற்றியெல்லாம் சொல்லாமலிருப்பதே நல்லது. அவர்களுக்குச் சொன்னாலும் புரியாது....''

'''என் தமையனிடம் சொல்லலாமா, வேண்டாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்...''

''அவனிடம் சொன்னால் கட்டாயம் ரகளையாக முடியும். உன் தமையனுக்கு இப்போது எப்படியாவது உன்னைக் கரிகாலனுக்குக் கலியாணம் பண்ணி வைத்துவிடவேண்டும் என்றிருக்கிறது.''

''அக்கா! நீங்கள்தான் எனக்கு உதவி செய்ய வேண்டும். கந்தமாறனுக்கு உங்களிடம் ரொம்ப விசுவாசம். நீங்கள் சொன்னால் கேட்பான்...''

''அடி பெண்ணே! நான் எந்த நோக்கத்துடன் இங்கே வந்தேனோ, அதற்கு விரோதமாக என்னுடைய உதவியையே கேட்கிறாயே? வெகு கெட்டிக்காரி நீ! அப்படியே கரிகாலனுக்கு உன்னை மணம் செய்து கொடுக்கும் யோசனையைக் கைவிட்டாலும் மற்றவனைப் பற்றி உனக்கு ஒன்றும் தெரியாதே? அவன் உன்னை விரும்புவான் என்பது என்ன நிச்சயம்?''

''அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை, அக்கா! அவர் என்னை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும்...''

''பெண்களின் தலையெழுத்தே அப்படித்தான் போலும்! புருஷர்கள் எப்படி நடந்து கொண்டாலும், பெண்கள் அவர்களுக்காக உயிரை விட வேண்டியதென்று ஏற்பட்டிருக்கிறது! ஏதோ உன் அதிருஷ்டம் எப்படி இருக்கிறதென்று பார்க்கலாம். மறுபடியும் நேற்று மாதிரி ஏதேனும் நேர்ந்தால் என்னிடம் சொல்வாயல்லவா?''

''உங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வது அக்கா! நேற்றிரவு ஒரு கனவு கண்டேன்; அதையும் சொல்லிவிட விரும்புகிறேன்...''

''பகற் கனவு கண்டது போதாது என்று, இரவிலும் வேறு கனவு கண்டாயா? அது என்ன? மறுபடியும் அவன் கனவில் வந்து உன்னை ஏமாற்றிவிட்டுப் போனானா?''

''இல்லை, இல்லை! இது வேறு விஷயம். நினைக்கவே பயங்கரமாக இருக்கிறது. காலை நேரத்தில் காணும் கனவு பலிக்கும் என்கிறார்களே? அது உண்மைதானா அக்கா?''

''கனவைச் சொல் கேட்கலாம்! வேறு விஷயம் என்றால், இன்னும் யாரையேனும் பற்றிக் கனவு கண்டாயா?''

''இவரைப் பற்றித்தான்! இவரை யாரோ ஒருவன் கத்தியால் குத்த வருகிறது போல் இருந்தது. இவர் கையில் ஆயுதம் ஒன்றும் இல்லை. ஆனால் தரையிலே ஒரு கத்தி பளபளவென்று மின்னிக்கொண்டு கிடந்தது. நான் அதைத் தாவி எடுத்துக் கொண்டு பாய்ந்தேன். இவரைக் குத்த வருகிறவனை நான் முதலில் குத்திவிடுவது என்ற எண்ணத்துடன் ஓடினேன். அருகில் சென்றதும் அவனுடைய முகம் மாறியது. அவன் என் தமையன் கந்தமாறன்!... 'ஓ!' என்று அலறிக் கொண்டு விழித்தெழுந்தேன். என் உடம்பெல்லாம் வியர்வையினால் சொட்ட நனைந்திருந்தது. வெகு நேரம் என் கை கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. கனவு அவ்வளவு நிஜம் போல் இருந்தது. இது ஒருவேளை பலித்து விடுமா, அக்கா!''

''அடி பெண்ணே! உன் மனம் உண்மையிலேயே குழம்பிப் போயிருக்கிறது. நிஜமாக நடந்தது பிரமை போலத் தோன்றுகிறது. கனவிலே கண்டது நிஜம் போலத் தோன்றுகிறது. நல்ல தோழி எனக்குக் கிடைத்தாய்! நான் தான் பைத்தியக்காரி என்றால், நீ என்னைவிட ஒரு படி மேலே போய்விட்டாய்!'' என்றாள் நந்தினி.

இந்தச் சமயத்தில் சந்திரமதி உள்ளே வந்தாள். ''அவர்கள் வந்துகொண்டிருக்கிறார்களாம்! வீர நாராயண ஏரியைத் தாண்டி வந்து விட்டார்களாம்!'' என்று தெரிவித்தாள். (தொடரும்)



ULKA TF 124 Tam

சிதம்பர ரகசியம்

கதை: கோமதிசுவாமிநாதன்
சித்திரம்: ராஜு

2




பட்டப்பா விடை பெற்றதும்...
இந்த ஆளோட பார்வை அவ்வளவு சரியானது என்று எனக்குத் தெரியலையே.
அது பார்வையில்லை விழற அரிசிப் பொறுத்தது. நீ இல்லை நிற்கறே!
இது காலிங்பெல் தானே? புது மாதிரியா இருக்கே! அழுத்தினால் யாரு வராங்க பார்க்கலாம்!
ஐயா! வந்துட்டேன்! காப்பி சாப்பிட்டீங்களா? ஐயா மாத்திரம் தான் வருவார்ன்னு யஜமான் சொல்லியிருந்தாரு! அம்மாவும் கூடப் புறப்பட்டுட்டாங்க போலிருக்கு!
நான் செல்வம்! இவள் என் தங்கை சிவகாமி. பெரியப்பா சிதம்பரத்தை முதல் தடவையாப் பார்க்க அவளுக்கும் ஆசை இருக்காதா என்ன?
அப்படிங்களா! ரொம்ப சந்தோஷம்! ரொம்ப சந்தோஷம்! எத்தனை பேர் வந்தாலும் சௌகரியமாகத் தங்கி யிருக்க யஜமான் ஆள் மூலமாகக் கடுதாசி போட்டிருக்காரு!
சரி சரி, போ! போய் வெந்நீருக்கு ஏற்பாடு பண்ணு!
டார்லிங் நான் குளிக்கப் போகட்டுமா?
அசடு! அந்த வேலைக்காரப் பயல் கிட்டயும் எச்சரிக்கை இருக்கு! ஜாக்கிரதை! அழைக்கும் போதெல்லாம் அண்ணா அண்ணான்னு கூப்பிட்டுத் தொலை!
ஆகட்டும் அண்ணா! சரிதானா?
அப்போது வாசலில் அரவம் கேட்கிறது.
சார்! சார்!... சிதம்பரமாமா!... மாமா!...மாமோவ்!
தொடரும்

ஹெலிகாப்டர்கள் கீழே இறங்கி விட்டன

இந்திரா பார்த்தசாரதி



பானுவின் வீட்டுக்கு அமிர்தம் போனது திலகத்துக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. ''உங்களுக்கு இப்படியா புத்தி தடுமாறிப் போகணும்?'' என்று சீறினாள் திலகம். அவனும் அவள் இப்படிச் சொல்லுவாள் என்பதை எதிர்பார்த்ததுபோல், கட்டிலருகே போய் நிதானமாக நின்றான்.

''அன்னிக்கு அவளைப் பார்க்கிறப் போவே தெரிஞ்சுது, குடிகேடின்னு...''

அவள் முகம் கோபத்தில் இன்னும் பெரிதாகத் தெரிந்தது. கண்களும், உதடுகளும் படபடத்தன. எல்லையற்ற சினத்தில், அவளுடைய சற்றுப் பெரிதான உடம்பு இலேசாக ஆடியது.

''எதுக்காக இப்போ வந்தீங்க? அங்கேயே இருக்கிறதுதானே ?''

''வந்தது தப்புன்னு இப்பொத்தான் தெரியறது....''

''வந்தது தப்பா?... என்ன சொன்னீங்க? வந்தது தப்பா....?'' அவள் கட்டிலிலிருந்து இறங்கி அவன் உடம்பை உலுக்கினாள்.

அவளுக்கு இவ்வளவு கோபம் ஏற்பட்டு அவன் பார்த்ததில்லை. தற்காப்புக்காகச் சீறும் மிருகத்தைப்போல் இருந்தது அவள் வெறி. கல்யாணமாகிப் பன்னிரண்டு வருஷங்களாகியும் குழந்தை இல்லாத ஏமாற்றம், இதனால் கணவனுக்குத் தன்மீது சலிப்பு ஏற்பட்டுவிடுமோ என்று உள்மனத்தில் ஏற்பட்ட அச்சத்தின் காரணமாகப் பரபரப்பு, அவள் என்ன பயந்தாளோ அது நடந்தேறி, அதையும் கணவன் நிர்த்தாட்சண்யமாக ஒப்புக் கொண்டதால் ஏற்பட்ட ஆவேசம்... ஆகிய எல்லா உணர்ச்சிகளும் குரலில் தொனித்தன. அவள் அவனை வேகமாக உலுக்கிய பிறகு, முகத்தை இரு கைகளாலும் மூடிக்கொண்டாள். அதே நிலையில் வேகமாகச் சென்று இன்னோர் அறைக்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக் கொண்டாள்.

ஒரு பெரிய புயல் அடித்து ஓய்ந்தது. இதுவரை சலனமற்றிருந்த வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த இயக்கம், இருவருக்கும் நல்லதுதான். கணவன்—மனைவி என்ற நிர்ப்பந்தத்தினால் வரையறுத்துக்கொண்ட போலி மதிப்புக்களின் அடிப்படையில்லாமல், ஒருவரையொருவர் சரிவர நேராகப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பு.

அவள் தன்னைத் தீவிரமாக ஆராய்ந்து கொண்டால், அவளுக்கும் புரியலாம், தனக்கு அவன் மீது எவ்வளவு சலிப்பு இருக்கிறதென்று. அவள் அவ்வாறு ஆராய மாட்டாள்; ஆராய்ந்தாலும் புரியாது. புரிந்தாலும், ஒப்புக் கொள்ள மாட்டாள். ஒப்புக் கொண்டுவிட்டால், பாரதப் பண்பாடு என்னாவது ?

அவன் அவளிடம் உண்மையைச் சொல்லாமல் இருந்திருக்கலாம். அவளைத் தவிர வேறு யாரையுமே நினைத்ததில்லை என்ற பொய்க்குப் பண்பாட்டு அந்தஸ்து அளித்து, அவளை ஏமாற்றலாம். அவன் சொல்வது பொய் என்று தெரிந்தாலும், மனச் சமாதானம் அடைந்து, அவன் தோளில் ஆறுதலை நாடி அவள் வரலாம்... ஆனால்...... எதற்காகப் பொய் சொல்லவேண்டும்?



அவன் 'ஷூ'க்களைக் கழற்றிவிட்டு, உடையை மாற்றாமல், அப்படியே கட்டிலில் படுத்துக் கொண்டான்.

பானுவிடம் தனக்கு இவ்வளவு ஈடுபாடு ஏற்படக் காரணம் என்ன ?—நித்யாவை நினைவுறுத்துகின்றாள் என்பதினாலா? அல்லது அவ்வாறு நினைவுறுத்துவதினால், நித்யா என்ற இனிய கனவு, கடந்து போன இளமைப் பருவத்தின் நினைவுச் சின்னமாய், சிந்தனையில் மொக்கவிழ்ந்து மணம் வீசுகின்றது என்பதினாலா?....

தன்னால் மீண்டும் அந்தப் பருவத்தில் வாழ்ந்தது போல் வாழ முடியுமா? அதே கற்பனை, அதே செயல் துடிப்பு, அதே வேகம், தன்னுடைய எண்ணங்களும், உணர்ச்சிகளும் தனக்கே பிரத்தியேகமானவை என்று நினைக்கும் மனோபாவம்.... எல்லாவற்றையும் பெற முடியுமா? அந்தந்த நிமிஷத்தில், அந்தந்த நிமிஷத்துக்காக வாழ்கின்ற அசாத்தியத் துணிச்சல் தன்னிடம் இருக்கிறதா?....

.....ஒரு சமயம், நித்யாவுடன் அவன் ஹுமாயூன் சமாதிக்குச் சென்றிருந்தான். மார்ச் மாதம். இதம் தரும் வெயிலில், இனிய காற்று உடம்பில் பட, இருவரும் சமாதியைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தார்கள். ஒரு கையினால், காற்றில் பறந்த புடைவைத் தலைப்பைப் பரிவுடன் அணைத்துக் கொண்டு, இன்னொரு கையினால் நெற்றியில் விழுந்து கண்ணுடன் உறவாடிய குழல் கற்றையைப் பின்புறம் தள்ளியவாறு, நித்யா வந்தாள்.

● "இந்த முஸ்லிம் ராஜாக்களுக்குத்தான், சரித்திரத்தில் வாழணும்னு எவ்வளவு பிடிவாதம்?" என்றாள் நித்யா.

"அந்தப் பிடிவாதந்தான் இங்கே கலையா மாறியிருக்குது....." என்றான் அமிர்தம்.

"ஹுமாயூன் ஒரு 'கலர்லெஸ் கிங்' அவனுக்கு எவ்வளவு அழகான சமாதி" என்றாள் நித்யா.

"நீங்க என்ன சொல்றீங்க?..... ஹுமாயூன் 'கலர்லெஸ் கிங்கா'? சாகக் கிடந்து மறுபடியும் பொழைச்சுக்கிட்டு, ராஜாவாய், தோத்துப் போய், மறுபடியும் ஜெயிச்சு... அவன் வாழ்க்கை பரபரப்பான ஒரு நாடகம்



போன்றதாச்சே! தன்னை நிலைநாட்டிக் கொள்ற சித்தம் அவன் கிட்டே இருந்த மாதிரி, வேறே யாருக்கும் இருந்ததில்லே...''

''தன்னை நிலைநாட்டிக் கொள்ற சித்தம், ஹுமாயூன் கிட்டே என்ன, எல்லார்கிட்டேயுந்தான், எல்லாத்திலேயும் தான் இருக்கு... அது..... பையலாஜிகல் ஃபாக்ட்...''


'' 'பையலாஜிகல்'னு உடனே ஞாபகம் வரது, உன்னைக் காதலிக்கிறேன், நித்யா....''

''வாயை மூடுங்கள்!'' என்று செல்லமாகக் கடிந்து கொண்டாள் நித்யா.

பெரிய சமாதிக்குக் கீழே சுற்றிலும் சிறிய சிறிய அறைகளில் சில்லறைச் சமாதிகள் இருந்தன. ஒவ்வோர் அறையாகப் புகுந்து புகுந்து அவர்கள் வெளியே வந்தார்கள்.

''இந்தச் சமாதிகளெல்லாம் யாருக்காக இருக்கும்?'' என்று கேட்டாள் நித்யா.

''இதென்ன கேள்வி? மொகலாய மன்னன். அந்தப்புரத்திலிருந்த அவனுடை அறுநூத்திச் சொச்சம் ராணிகளுக்காகஇருக்கும்.''



''உங்க குரல்லே இலேசாப் பொறுமை தெரியறது.....'' என்று சொல்லிவிட்டு அவன் காதைப் பிடித்தாள் நித்யா.

அவன் சிரித்தான்.

ஓர் அறைக்குள் முதலில் நுழைந்த நித்யா, திடுக்கிட்டவளாகிப் பின்னால் வந்த அவனைத் தள்ளிக் கொண்டே வெளியே வந்தாள்.

''ஏன், என்ன விஷயம்? இவ்வளவு அவசரம் ஏன்?'' என்று கேட்டான் அமிர்தம்.

''இந்தச் சின்ன அறைகளோட உபயோகம் என்னன்னு இப்பொதான் புரியறது....'' என்றாள் நித்யா.

''என்ன உபயோகம்....?''

''உள்ளே ஒரு பையனும், பெண்ணும் இருக்கா, போய்க் கேளுங்க....''

அமிர்தம் புன்னகை செய்தான்.

அவர்கள் இன்னோர் அறைக்குள் நுழைந்த போது, அமிர்தம் சொன்னான்: ''நாம தனியாயிருக்கோம்னு நினைக்கிறேன்!''

நித்யா அவனைப் பொய்க் கோபத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

சிவப்புப் பூப்போட்ட வெண்ணிறப் பட்டுப் புடவையில் கைகளை இறுகப் பற்றிய சிவப்புச் சோளி அணிந்து, அவனை வரவேற்கும் பொய்க் கோபத்துடன், அவள் அவனை நோக்கியது, அவன் கனவுகளை வண்ணத்துப் பூச்சிகளாய் விரித்தது. அவன் சுற்றுப்புறத்தை மறந்தான். இந்த நிமிஷத்தைக் காட்டிலும் சத்தியம் வேறொன்றுமில்லை. அவன் அவள் கைகளைப் பற்றினான்.

''சாஹப்....''

''சாஹப்....''

எங்கிருந்தோ பல ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து இக்குரல் கேட்டது..... இல்லை, சரித்திரந்தான் பேசுகிறதோ?... முஸ்லிம் பணியாள் ஒருவன் நின்று கொண்டிருந்தான்....! தான் ஹுமாயூனாக மாறி விட்டோமா? ....அப்படியானால்....

நித்யா திடீரென்று விலகி நின்றாள்.

''அட கடவுளே! என்ன முட்டாள்தனம்! இது புனித ஸ்தலமாக்கும்!''

அமிர்தத்துக்குத் தான் ஹுமாயூனாக மாறவில்லை என்று புரிந்தது. அரசாங்க விதிகளின்படி அவன் குற்றம் புரிந்து விட்டான். புனித இடங்களை அவமதித்த குற்றம். முஸ்லிம் பணியாள், காவல்காரன்.... அவன்.... 'ரிபோர்ட்' செய்தானானால், அவமானம், அபராதம்....

''அவனுக்கு ஏதாவது கொடுங்கோ'' என்றாள் நித்யா.

''வாங்கிப்பானா?''

''ஏன் வாங்கிக்க மாட்டான்? பக்கத்து அறையிலே நான் பார்க்கலியா? அது இவனுக்குத் தெரியாமலா நடந்திருக்கும்....?''

''உன்னுடைய வாதம் நூற்றுக்கு நூறு உண்மை!'' என்றான் அமிர்தம்.

அவன் ஓர் ஐந்து ரூபாயை எடுத்து அந்தக் காவல்காரனிடம் கொடுத்தான்.

''ஆப்கா பீபி ஹை?'' என்று கேட்டான் காவல்காரன் நித்யாவைப் பார்த்துக் கொண்டே.

''ஹா(ங்) ஜீ....''

காவல்காரனின் மனச்சாட்சி அதிகமாகத் தொந்தரவு செய்யவில்லை. ஐந்து ரூபாயை அவன் வாங்கிக் கொண்டான்.

''அட, தெய்வமே! சமாதிக்கிட்டேயா, உங்களுக்குக் காதல் சிந்தனை உதிக்கணும்?'' என்றாள் நித்யா, அவ்வறையை விட்டு வெளியே வந்தவுடன்.

''சமாதியைப் பார்த்தவுடனே எல்லாருக்கும் ஏற்படற முடிவு இதுதாங்கிற நினைவு வரது.... அப்பொ உடம்பு அவசரப்படறது.... இதிலே என்ன தப்பு?'' என்றான் அமிர்தம்.......

அது துணிச்சலாக இருக்கலாம் — அன்று. இச்சமயம் அதை நினைக்கும் போது, தான் அப்பொழுது செய்தது ஓர் அசட்டுத்தனமாகப் பட்டது. இப்பொழுது அதுபோல் ஒரு காவல்காரனிடம் அகப்பட்டுக் கொண்டால், கூசி மறுகாமல் தன்னால் பேச முடியுமா? உடம்புக்கு வயதாவதால் சிந்தனைக்கு வயதாகின்றதா? அல்லது சிந்தனைக்கு வயதாவதின் காரணமாக உடம்புக்கு வயதாகின்றதா? —

'கா'லிங் பெல்' அழுத்தப்படும் சத்தம் அப்பொழுது கேட்டது. அமிர்தம் எழுந்து போய்க் கதவைத் திறந்தான்.

''திலகம் இருக்காளா?''

பக்கத்து 'ப்ளாக்கி'லிருந்து மிஸஸ் ஐயர் கேட்டாள்.

''இல்லே'' என்று சொல்லலாமா வென்று ஒரு கணம் நினைத்தான் அமிர்தம். வேண்டாம், மிஸஸ் ஐயர் வருகையினால் வீட்டை வியாபித்திருந்த வேதனைச் சூழ்நிலை மாறக்கூடும்.

''உட்காருங்க... கூப்பிடறேன்...'' அவன் கூடத்து விளக்கைப் போட்டான்.

திலகம் தாளிட்டுக் கொண்டிருந்த கதவைப் போய் அவன் தட்டினான்.

பதிலில்லே.

''திலகம்! மிஸஸ் ஐயர் வந்திருக்காங்க....'' இதைச் சொல்லி விட்டு அவன் கூடத்தில் போய் உட்கார்ந்து கொண்டான்.

''என்ன அதுக்குள்ளேயும் படுத்துண்டுட்டீங்களா?'' என்று கேட்டாள் மிஸஸ் ஐயர்.

அமிர்தம் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. ''என்ன மிஸ்டர் ஐயரை இப்பொ கண்ணிலேயே காணறதில்லே ?'' என்று கேட்டான்.

''ஆபீஸ் வேலே அதிகம். வீட்டுக்கு வரபோதே மணி எட்டாயிடறது....''

மிஸஸ் ஐயர் இதைச் சொல்லும் போதே அவள் குரலில் பெருமை தொனித்தது. ஐயர் இல்லாவிட்டால் மத்திய அரசாங்கமே ஸ்தம்பித்து விடும் என்று தான் நினைப்பது போல் பதில் சொன்னாள்.

'''ஃபியட்' காரைக் கொடுத்துட்டு, 'அம்பாஸிடர்' வாங்கிட்டீங்க போல் இருக்கே?'' திலகம் சீக்கிரம் வந்து தொலையக் கூடாது? என்னென்ன அற்பமான விஷயங்களைப் பற்றியெல்லாம் அவளிடம் பேச வேண்டியிருக்கிறது?

''ஆமாம்.... அம்பாஸிடர் குடும்பக் காராச்சே ? நாலு பசங்களாச்சு... ஃபியட் போறல்லே.....''

''வாங்க, மாமி....

நல்ல வேளை, திலகம் வந்துவிட்டாள்.

''அதுக்குள்ளேயா, தூங்கிட்டேள்?''

''உடம்பு சரியில்லே... என்ன விஷயம் இந்நேரத்திலே ?''

''வரப்படாதா ?'' என்று சிரித்தாள் மிஸஸ் ஐயர்.

''சே... சே... அதுக்கில்லே, சாதாரணமா வரமாட்டீங்களேன்னு கேட்டேன்......''

''ஒண்ணுமில்லே.... நாளைக் கார்த்தாலே, 'ரீகல்'லே ஒரு தமிழ்ப் படம். அவர் வரேன்னார் முதல்லே, இப்பொ வரல்லேங்கிறார்..... ஒரு டிக்கெட் இருக்கு, நீங்க வரேளான்னு கேட்க வந்தேன்....''

திலகம் அமிர்தத்தைப் பார்த்தாள். அவன் பேசாமல் இருந்தான்.

'' அனுமதி கொடுங்க, என்ன பேசாமெ இருக்கேளே ?'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் மிஸஸ் ஐயர்.


''நான் பர்மிஷன் கொடுக்கணுமா, அவ இஷ்டம்....'' என்றான் அமிர்தம்.

''நான் வரேன்...'' என்றாள் திலகம்.

''சரி, அப்பொ, எட்டு மணிக்கு எங்க வீட்டுக்கு வந்துடுங்க...'' என்று கூறிக் கொண்டே எழுந்தாள் மிஸஸ் ஐயர்.

'' நான் கொண்டு விடட்டுமா ?'' என்று கேட்டான் அமிர்தம்.

''வேண்டாம்... எனக்கு 'ட்ரைவிங் லைசென்ஸ்' கிடைச்சுடுத்து. இப்பொல்லாம் நானே 'ட்ரைவ்' பண்றேன்....



உடம்பும் காரும் !

''உடம்பை உயிர் செலுத்துகின்றது; உயிரை இறைவன் செலுத்துகிறான்.

காரை டிரைவர் செலுத்துகின்றான்; டிரைவரை எஜமான் செலுத்துகின்றான்.

உடம்புக்குள் உயிர்; உயிருக்குள் இறை.

டயருக்குள் ட்யூப்; ட்யூப்புக்குள் காற்று.''

சொன்னவர்: வாரியார் - தகவல்: ரூபி

ஏன், திலகத்துக்கும் 'ட்ரைவிங்' கத்துக் கொடுங்களேன்.....''

''அவருக்கு இதுக்கெல்லாம் நேரம் கிடைக்காது....'' என்றாள் திலகம்.

'' அவர்தான் எனக்குக் கத்துக் கொடுத்தார்.....'' என்றாள் மிஸஸ் ஐயர் பெருமையுடன்.

மிஸஸ் ஐயர் ஒரு புதுப் பிரச்னையை எழுப்பி விட்டுப் போகிறாள் என்பதை அமிர்தம் உணராமலில்லை. திலகம் அவனை அடிக்கடி வற்புறுத்தி வந்தாள், தனக்குக் காரோட்டக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று.

''உனக்கு வராது.....''

''ஏன் இப்படிச் சொல்றீங்க ?''

''உனக்கு முன்ஜாக்கிரதை போதாது. நீ உயிரோடு இருக்கணுங்கிறதுதான் என் ஆசை.....''

திலகத்தின் எளிமையான சுபாவம் இப்பதிலை ஏற்றுக் கொண்டு விட்டது.

ஆனால் மிஸஸ் ஐயர்கூட கார் விடக் கற்றுக் கொண்டு விட்டாள் என்றால் திலகம் தன்னை மன்னிக்கப் போவதில்லை.

....நித்யா பிரமாதமாகக் கார் ஓட்டுவாள். அவளுடைய மாமா கார் ஓட்டக் கற்றுக் கொடுத்தார் என்று அவள் சொன்னாள். அவளுக்கு மெதுவாகவே போகத் தெரியாது. ஆனால் எவ்வளவு வேகமாகப் போனாலும், நல்ல 'கன்ட்ரோல்'.

ஒரு சமயம் அவனுடைய நண்பன் நாகராஜனிடமிருந்து காரை வாங்கிக் கொண்டு நித்யாவுடன் அலிகாருக்குச் சென்றான் அமிர்தம். நித்யாவின் அம்மாவுக்கு அலிகார் பல்கலைக் கழகத்தில் வேலை இருந்தது. நித்யாதான் காரை ஓட்டிக் கொண்டு வந்தாள்.

''ஏய், மெதுவாகப் போ, மெதுவாகப் போ....'' என்று சொல்லிக் கொண்டே வந்தாள் அவள் தாயார்.

''இந்த வேதாந்தந்தான் நம் நாட்டை உருப்படாமெ அடிச்சிருக்கு....'' என்று

சொல்லிக்கொண்டே 'ஆக்ஸிலேடரை' இன்னும் வேகமாக அழுத்தினுள் நித்யா.

அலிகார் பல்கலைக் கழகத்தில் அவள் அம்மாவை இறக்கிவிட்டு, நித்யா அமிர்தத்திடம் சொன்னுள்: ''அலிகாரைச் சுற்றிப் பார்க்கலாம், வாங்கோ....''

''சாயந்திரம் ஏழு மணிக்கெல்லாம் என் வேலை முடிஞ்சுடும்.... அதுக்குள்ளே வந்துடுங்கோ....'' என்ருள் அவள் அம்மா.

''இங்கே பக்கத்திலே ஒரு கிராமத்திலே போன மாசம் ஓய்வுபெற்ற எங்க ஆபீஸ் பியூன் இருக்கான், போய்ப் பார்க்கலாமா?'' என்று கேட்டாள் நித்யா, அலிகாரின் குறுகிய தெருவின் வழியாகப் போகும் போது.

''ஓ.... பேஷா !''

அந்தக் கிராமத்துக்கு வயல் வரப்பைத் தாண்டிச் செல்ல வேண்டும் என்றும், கார் அங்கு போக முடியாது என்றும் அங்கிருந்தவர்கள் சொன்னுர்கள்.

'' அப்படியாவது போகணுமா ?'' என்று கேட்டான் அமிர்தம்.

''நீங்க வரவேண்டாம். நீங்க அலிகார் பூட்டு வாங்கிண்டு இருங்கோ... நான் போய்ப் பார்த்துட்டு வரேன்....'' என்ருள் நித்யா.

'பூட்டு வாங்கிண்டு இருங்கோ' என்பதில் காணப்பட்ட ஏளனத்தை அவன் கவனிக்காமல் இல்லை.

''எப்படிப் போகப் போறே?'' என்று கேட்டான் அமிர்தம்.

இரண்டு நூற்ருண்டுகளுக்கு முன்னுல் போய் விட்டோமோ என்று நினைக்கும் படியாக, சதுரமான வடிவில் மூங்கில் தட்டித் தடுப்புக்களுடன் கூடிய குதிரை வண்டி அந்தப் பக்கம் போயிற்று.

''இதில் போனுல் என்ன?'' என்று கேட்டாள் நித்யா. அவள் கட்டிக் காட்டியதினுல் குதிரை வண்டியும் நின்றது.

''இதிலேயா?'' அமிர்தத்தின் குரலில் கண்ட திகைப்பு அவளைச் சிரிக்கச் செய்தது.

''ஒண்ணுத்துக்கும் பிரயோஜனமில்லாத ஆசாமி நீங்க!'' என்ருள் நித்யா.

''சரி ! நானும் வரேன்....''

கிராமத்துக்குப் போய் வர ஐந்து ரூபாய் கேட்டான் வண்டிக்காரன். நித்யா வண்டியில் ஏறி உட்கார்ந்தாள். நித்யா ஏறி உட்கார்ந்த லாகவம் அமிர்தத்துக்குச் சற்று ஆச்சரியத்தைத் தந்தது. அவனுல் அவ்வளவு சுலபமாக உட்கார முடியவில்லை.

''உன்னுடைய சாமர்த்தியத்தைப் பார்க்கிறப்போ, எனக்குச் சில சமயம் பயமா இருக்கு...'' என்ருன் அமிர்தம்.

நித்யா சிரித்தாள்.

நடந்துகூடப் போக முடியாத அளவுக்கு அவ்வளவு பள்ளங்களும் வெடிப்புக்களும் நிறைந்த பாதை. எங்கெங்கு பள்ளங்கள் இருக்கின்றன என்று மனப்பாடம் செய்திருப்பது போல், அலட்சியமாகச் சென்றது குதிரை.

''நான் ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதவன் இல்லேன்னு உனக்கு நிரூபிக்கிறதுக்கு இன்னும் எவ்வளவு தியாகம் செய்யணுமோ தெரியலே...'' என்ருன்.

''எனக்கு இந்தக் குதிரை வண்டிப் பயணம் ரொம்பப் பிடிச்சிருக்கு !'' என்ருள் நித்யா.

அவள் உண்மையாகவே அநுபவிக்கிருள் என்று அவள் முகத்திலிருந்து தெரிந்தது. தலையைச் சற்று உயரத் தூக்கி அவள் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். பாதிக் கண்கள் மூடியிருந்தன. முகத்தில் புன்னகை. தான் ஓர் ஓவியனுக இல்லையே என்று வருத்தப்பட்டான் அமிர்தம்.

மாலை ஐந்து மணியானுலும், வெள்ளியை நிறமாக உருக்கி எங்கும் பூசியது போலிருந்தது. வானத்தில் பறந்து கொண்டிருந்த ஓரிரண்டு பறவைகள் வெள்ளைப் புள்ளிகளாகத் தெரிந்தன. அமிர்தத்தின் மனம் சந்தோஷத்தால் நிறைந்தது.

''தியாகம்னு சொன்னதை வாபஸ் வாங்கிக்கறேன்..... இப்பொத்தான் புரியுது, எவ்வளவு ரம்மியமான இடம் இதுன்னு.....''

''உங்களுக்கு எதிலுமே ஆவேசம் !'' என்ருள் நித்யா.

கிராமம் வந்துவிட்டது. இருபதாம் நூற்ருண்டு நாகரிகத்தால் எந்தவிதத்திலும் பாதிக்கப்படாத கிராமம். சுற்றிலும் எழுப்பிய மண் கோட்டைக்குள்ளே சுமார் நாற்பது வீடுகள் இருக்கலாம்.

நித்யா தேடி வந்த, அவளுடைய ஆபீஸிலிருந்து ஒய்வு பெற்ற பியூனின் பெயர் அப்துல். அவன் பெயரைச் சொன்னதும் ஐந்தாறு வாண்டுகள் நான்கு திக்குகளிலும் அவனை அழைத்து வருவதற்காக ஓடிச் சென்றன. அந்தக் கிராமத்தில் அவன் பிரபலமானவன் என்று தெரிந்தது.

தலையில் பெரிய முண்டாசு கட்டிய ஒரு வயதான சௌத்ரி அவர்கள் இருவரையும் ஒரு கயிற்றுக் கட்டிலில் உட்காரும்படியாகச் சொன்னுர். அவரைச் சுற்றி உட்கார்ந்திருந்த ஐந்தாறு கிழவர்கள் ஹுக்காவைப் பகிர்ந்துகொண்டிருந்தார்கள். (தொடரும்)

இவருக்கு இதுவும் தெரியும்

இவரது முழுப்பெயர் ஜஹாங்கீர் ரத்தன் தாதாபாய் டாட்டா. சுருக்கமாக, ஜே. ஆர். டி. டாட்டாவாகியது.

அறுபத்தாறு வயதானாலும், இளமைத் தோற்றத்துடன், வெகு சுறுசுறுப்பாகச் செயல்படுகிறார் ஸ்ரீ டாட்டா. ஒற்றைநாடியான உருவம். எதையும் கூர்ந்து நோக்கும் பார்வை.

எஃகுத் தொழில், துணி நெசவாலைகள், மின்சார உற்பத்தி விநியோகம், ரசாயனப் பொருள்கள் உற்பத்தி, ரயில்வே எஞ்சின்களை உருவாக்குதல், லாரி வாகனங்களுக்கு 'சேஸிஸ்' தயாரித்தல், சோப்பு வகைகள், கூந்தல் எண்ணெய் முதலான அலங்காரப் பொருள்கள் உற்பத்தி — விநியோகம், விஞ்ஞான ஆராய்ச்சிக்கூடங்கள் — இவை போன்ற இன்னும் பல டாட்டா நிறுவனங்கள் முழுதும் நிரம்பச் செயல் புரிகின்றன.

இந் நிறுவனங்களுக்குத் தலைமை நிர்வாகியாக இருப்பவரும், இந்திய மகாராஜா சின்னத்தைக் கொண்ட ஏர் இந்தியா நிறுவனத்தின் சேர்மனாக இருப்பவரும் ஜே. ஆர். டி. டாட்டாதான்.

இந்திய நாட்டில் மிகப் பெரும் தொழிலதிபராக விளங்கும் ஸ்ரீ டாட்டா, விமானம் ஓட்டத் தெரிந்தவர்!



ஜே. ஆர். டி. டாட்டா

விமானம் ஓட்டும் டாட்டா

இந்தியாவில் முதன் முதலாக ஆகாய விமானத் தபால் போக்குவரத்தைத் தொடங்கி வைத்த பெருமையும் கூட அவருக்கு உண்டு. 1932ல் நடந்த நிகழ்ச்சி அது.

இன்று பாகிஸ்தான் பகுதியாகிவிட்ட கராச்சி நகரிலிருந்து (15-10-1932ல்) புஸ்மாத் (Pussmoth) எனும் வகையைச் சேர்ந்த விமானம் மேலே மேலே கிளம்பிப் பறந்தது.

அந்தப் புஸ்மாத் விமானம், ஆமதாபாத் வழியாக பம்பாய் வந்தடைய வேண்டும்.

அக்காலத்தில் ரேடியோத் தொடர்பு வசதிகள் இல்லை; கண்கவர் எழில் கொண்ட ஏர் — ஹோஸ்டஸ் நங்கையர் இல்லை; விமானத்தளத்தில் நவீன சாதனங்களுடன் கூடிய கட்டடங்கள் இல்லை; பயிற்சி பெற்ற விமானச் சிப்பந்திகளும் இல்லை.

ஆனாலும் —

அந்தப் புஸ்மாத் விமானம், கம்பீரமாக வான வீதியில் வந்துகொண்டிருந்தது. விமானத்தினுள் மரியாதைக்குரிய பிரயாணி ஒருவர் கூட இல்லை! விமான ஓட்டியைத் தவிர விமானத்தில் இடத்தைப் பிடித்துக் கொண்டிருந்தவை — தபால் பைகளே!


பார்ப்பதற்கு ஒரு பட்டுப்பூச்சியைப் போன்ற அமைப்புக் கொண்ட அந்தச் சிறிய விமானத்தில் அஞ்சல் பைகள் முழு ஆக்கிரமிப்பு பெற்றுவிட்டன!

தபால் பைகளைக் கொண்ட அந்தப் புஸ்மாத் விமானம், வெகு பத்திரமாக, பம்பாய் ஜுஹூ வின் அருகில், மரகதப் பசும் புல் தரையில் இறங்கி — ஓடி வந்து நின்றது!

விமானியாக அமர்ந்திருந்த ஜே. ஆர். டி. டாட்டா விமானத்தை விட்டுக் கீழே இறங்கி வந்து நின்றார் கம்பீரமாக.

இந்தச் சரித்திர நிகழ்ச்சியைச் சில ஆண்டுகளுக்குமுன் மீண்டும் நிகழ்த்திக் காட்டினார் டாட்டா. விமானத் தபால் போக்குவரத்தின் முப்பதாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிய போது டாட்டா அதே பழங்காலத்திய புஸ்மாத் விமானத்தில் பறந்து வந்தார். தபால்காரர் திரு லக்ஷ்மண் சகாராம் சிம்பிவிடம் ஜுஹூ விமான நிலையத்தில் தபால் பைகளை ஒப்படைத்தார். (படம்)


— ஏ. சுவாமிநாதன்




70ல் மாற்றம்
எழில்மிகு தோற்றம்
சேலைகளின் சோலை கலா மந்திர். உங்கள் எண்ணங்கள். சேலைகளின் வண்ணங்கள். சரிகையிலிருந்து "ச்சா ச்சா" புடவைகள் உட்பட. கவர்ச்சியான 70. உங்கள முகமலர்ச்சிகு ஏற்ற எண்ணற்ற வகை புடவைகள். கிடைக்குமிடம் கலாமந்திர்.
கலா மந்திர்
175/1 மவுண்ட் ரோடு.
சென்னை-2.
Criterion KM 2435TH

2. பேராசிரியரும், பத்திரிகை ஆசிரியரும்

ஹெரால்ட் கார் மெதுவாக ஓடிக் கொண்டிருந்தது. அதன் ஓட்டத்துக்குத் தகுந்தவாறு மந்த கதியில் சென்று கொண்டிருந்தது, முரளியின் சிந்தனை. ஒரு வாரமாகவே அவன் மனத்தில் சஞ்சலம். பாரதமணிக்குப் போட்டியாகக் 'காலைக் குரல்' என்னும் பெயரில் ஒரு பத்திரிகை வெளிவரத் தொடங்கியிருந்தது. அந்தப் பத்திரிகையின் அதிபர் ஆதிமூலம் ஒரு கோடீசுவரர். அதைப் பற்றி முரளிக்குப் பயமில்லை. பாரதமணி ஆரம்பமாகி இரண்டு ஆண்டுக்குள் மக்களிடையே நல்ல மதிப்பையும் ஆதரவையும் பெற்று விட்டது. பாரதமணி



பத்திரிகையின் கண்ணியமும், செய்திகளைத் தருவதில் அது கடைப்பிடிக்கும் கொள்கையும் மக்களின் அபிமானத்தைப் பெற்றுவிட்டன.

பாரதமணியின் தலையங்கம், சட்டசபையில் சலசலப்பை உண்டு பண்ணும் அளவுக்குச் செல்வாக்கையும் பெற்றுவிட்டது. பாரதமணியில் வெளியாகும் மக்களுடைய கடிதங்களை அரசாங்க உயர் அதிகாரிகளும், மந்திரிகளும் உன்னிப்பாகக் கவனிக்கத் தொடங்கி விட்டனர்!

'கோமாளி' என்னும் புனைபெயரில் முரளி வரையும் கேலிச் சித்திரங்கள் எல்லாரையும் கவர்ந்து விட்டன. கேலிச் சித்திரத்தின் ஆழ்ந்த கருத்தும், ஊழல்காரர்களைத் தேள் கொடுக்கு மாதிரி கொட்டும் தன்மையும், உள்ளடங்கிய கேலியும், கொள்கையை அழுத்தமாக வெளிப்படுத்தும் துணிவும் தாம் 'கோமாளி'யின் கேலிச் சித்திரத்துக்குப் புகழைத் தேடிக் கொடுத்தன. தினமும் காலையில் பாரதமணியைப் பிரிக்கும்போது அன்றையக் கேலிச் சித்திரம் என்ன என்பதை முதலில் பார்க்கத் தூண்டும் அளவுக்குப் புகழடைந்து விட்டது. மொத்தத்தில், பாரதமணியைக் குறித்து ஆட்சியாளரிடையேயும், அரசியல்வாதிகளிடையேயும் ஒரு பயம் கலந்த மரியாதையும், கற்றவர்களிடையே மிகுந்த மதிப்பும் இருந்தன. ஆனால் 'காலைக் குரலின்' விற்பனைக்காக அதன் அதிபர் ஆதிமூலம் கையாளும் உத்திகள்தாம் முரளியைக் கவலைக்குள்ளாக்கிவிட்டன.

ஒரு வாரத்துக்குள் பாரதமணியின் விற்பனை குறையத் தொடங்கிவிட்டது! ஐம்பதினாயிரம் பிரதிகளுக்கு மேல் விற்பனையை எட்டிப் பிடித்திருந்தது. காலைக் குரல் வந்த பிறகு பாரதமணியின் விற்பனை குறையத் தொடங்கிவிட்டது.

முரளி, மனம் தளர்ந்து விடவில்லை. கண்ணியமான பத்திரிகைக்கு அழிவு ஏற்படாது என்று திட்டமாக நம்பினான்.

சிந்தனையிலிருந்து திடீரென்று விடுபட்டுத் தன் உணர்வை அடைந்தபோது கார் மிகவும் மெதுவாக ஓடிக்கொண்டிருப்பதையும், நடைபாதையில் நின்றுகொண்டு பலர் அவனை வேடிக்கை பார்ப்பதையும் கண்டு திகைத்தான்.

மற்றவர்கள் கவனிக்கும் அளவுக்குக் காரின் வேகம் குறைந்து ஊர்வலம் போவது போல் போய்க் கொண்டிருக்கிறோம் என்பதை நினைத்தபோது

வெட்கமாகக்கூட இருந்தது. அவனை வேகமாகக் கடந்து சென்ற இரண்டு மூன்று கார்களிலிருந்து சிலர் தலையை வெளியில் நீட்டி அவனைப் பார்த்துவிட்டுச் சென்றதையும் கவனித்தான். தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டான். காரின் வேகம் கூடியது. கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி ஐந்தரை ஆகியிருந்தது.

சாரதா அவனைத் தேடி வந்ததாக டைப்பிஸ்ட் சொன்ன நினைவு வந்தது. அந்த நினைவு காரின் வேகத்தை அதிகப்படுத்தியது. அதைவிட வேகமாகச் சாரதாவை நாடியது, அவன் நினைவு.

வந்தவள் கொஞ்ச நேரம் காத்திருக்கக்கூடாதா? அதற்குக்கூடப் பொறுமை இல்லை. என்னதான் அவசரமோ? எதை எடுத்தாலும் இப்படியா அவசரப்படுவது? கமலசாமியின் பொறுமைக்கும் நிதானத்துக்கும் இவளுடைய பரபரப்புக்கும் எவ்வளவு தூரம்! எப்போதும் இவள் இப்படித்தான். படிக்கிற காலத்திலேயும் இப்படித்தானிருந்தாள், இப்போதும் இப்படித்தான் இருக்கிறாள்....

முரளி திடுக்கிட்டான். மீண்டும் கார் ஊர்வலம் மாதிரி ஊர்ந்துகொண்டிருந்தது. அவனை வேகமாகக் கடந்து சென்ற காரைச் செலுத்திக் கொண்டிருந்த ஒரு பெண்மணி, அவனைத் திரும்பிப் பார்த்து எரிச்சலுடன் முறைத்துவிட்டுச் சென்றதைக் கண்டு சிரித்தான்.

ஆக்ஸிலேட்டரைப் பலமாக அழுத்தினான். கார் குபுக்கென்று பாய்ந்து விரைந்தது.

பேராசிரியர் கமலசாமியின் வீட்டுப் போர்டிகோவில் காரை நிறுத்திவிட்டுக் கீழே இறங்கியபோது, ''ஓ, எடிட்டர் வந்தாச்சு!'' என்ற குரலைக் கேட்டு நிமிர்ந்தான்.

வராந்தாவில் வாயில் கருட்டுடன் கமலசாமி நின்று கொண்டிருந்தார். அவருடைய கம்பீரமான தோற்றத்தையும், அவருடைய முகத்தில் பொலிந்த அறிவுக் களையையும், பார்வையில் பொங்கிய பாசத்தையும் பயபக்தியோடு பார்த்துக் கொண்டே அவரை நெருங்கினான். பக்கத்தில் வந்ததும் ஒரு கையை அவன் தோள் மீது போட்டு அணைத்துக் கொண்டு வராந்தாவில் கிடந்த சோபாக்களை நோக்கி நடந்தார்.

''என்னப்பா, உன்னைக் காணவே இல்லை!'' என்று பேராசிரியர் கேட்டார். ஆராய்ச்சிகள் செய்து டாக்டர் பட்டமும் பெற்ற அறிஞர் அவர்.

''கொஞ்சம் வேலை அதிகம்... வர முடியவில்லை.''

''கொஞ்ச நேரத்துக்கு முந்தித்தான் உனக்கு போன் செய்யும்படி சாரதாவிடம் சொன்னேன். நீ ஆபீசிலிருந்து போய்விட்டதாகப் பதில் வந்தது. பத்திரிகை எப்படி ஓடுகிறது?'' என்று கேட்டுக் கொண்டே சோபாவில் அமர்ந்து,



மற்ளுெரு சோபாவில் அவனே அமரச் செய்தார்.

''பரவாயில்லே. ஆனல் போன வாரத்திலிருந்து 'காலேக் குரல்' என்று ஒரு பத்திரிகையும் வருகிறது...''

''உம்.. அதையும் பார்த்தேன். குப்பை. ஆனல் வியாபார தந்திரம் தெரிந்தவன் ஆதிமூலம். எதைக்காட்டித் துட்டைப் பிடுங்கலாம் என்ற இரகசியம் தெரிந்தவன்...''

''இதையும் மக்கள் விரும்புகிருர்கள்'' என்ருன் முரளி கவலேயுடன்.

''மனிதனுடைய அடிப்படைக் குணமே அதுதான். முரளி, நம்முடைய படிப்பும், பண்பும், நாகரிகமும் பிறந்து வளர்ந்த குலத்தின் ஆசாரச் சூழ்நிலேயும் தாம் நம்மை இப்படி அடிப்படைக் குணத்திலிருந்து மாற்றி யிருக்கின்றனவே தவிர வேறென்ன? மனிதனிடம் மறைந்து கிடக்கும் மட்டமான உணர்வு களேத் தட்டி எழுப்பத் தெரிந்தவன் ஆதிமூலம். அதை முழு மூச்சில் செய்து கொண்டிருக்கிருன். பணமும் கிடைக்கிறது.... ஆபத்தான பேர்வழி'' என்ருர் பேராசிரியர் கமலசாமி.

''பாரதமணியின் விற்பனேயை அது கொஞ்சம் பாதித்திருக்கிறது.''

''அதைக் கண்டு அதைரியப்பட்டு விடாதே. போகப் போகச் சரியாகி விடும்'' என்று கூறிவிட்டு வாயிலிருந்த சுருட்டை எடுத்து மேஜை மீதிருந்த 'ஆஷ்டிரே'யில் அணேத்துப் போட்டார் கமலசாமி.

''நீ இந்தத் தொழிலுக்கு வந்தது தான் ஆச்சரியமாக இருக்கிறது. உன்னுடைய 'டேஸ்டு'க்குத் தகுந்த தொழில் தான். ஆனல் நீ நினேத்தபடி முதல் வகுப்பில் தேறியிருந்தால், இந்தத் துறைக்கே வந்திருக்க மாட்டாயோ?'' என்று கேட்டார்.



''எங்காவது ஒரு கல்லூரிக்குள் ஆசிரியராக நுழைந்திருப்பேன்....'' என்றான் முரளி. பிறகு சொன்னான்: ''கல்லூரியில் ஆசிரியராக இருப்பதைவிடச் சுதந்திரமாக ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராக இருப்பதையே நான் விரும்புகிறேன்.''

''நீ எம். ஏ.யில் ஃபெயிலாகிப்போனதும் நல்லதுக்குத்தான்... முரளி, நீ எப்படி ஃபெயிலாகிப் போனாய்? அதைத்தான் என்னால் நம்ப முடியவில்லை. ஆ! அந்தச் சமயத்தில் நான் உன்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தேன்...! உன்னால் எப்படிப் பரீட்சையில் தோல்வியடைய முடிந்தது?'' என்று வியப்புடன் கேட்டார் கமலசாமி.

முரளி, அவரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் இதழ்களில் புன்னகை பூத்திருந்தது. கமலசாமி பழைய நினைவுகளில் ஆழ்ந்திருந்தார். மூக்குக் கண்ணாடியைக் கழற்றித் துடைத்துக் கொண்டார்.

''இப்போது நினைத்தாலும் ஆச்சரியமாக இருக்கிறது. மாகாணத்திலேயே முதல்வனாகத் தேறுவாய் என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்தபோது, நீ ஃபெயிலாகி விட்ட செய்தி என்னை மட்டுமா, கல்லூரியையே திகைக்க வைத்தது.''

''அந்த மதிப்பைச் சாரதா பெற்றுக் கொண்டாளே. யார் அதைப் பெற்றால் என்ன?''

''நோ நோ... அவள் உன்னை மிஞ்சுவாள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் உன்னை மிஞ்சிவிட வேண்டும் என்று அவள் இரவும் பகலும் பட்ட பாடு....! நான் அப்போது கூட அவளுக்குச் சொன்னேன். 'நீ என்னதான் முயன்றாலும் முரளியை மிஞ்ச முடியாது; அவனுடைய எழுத்தில் ஒரு தனித்தன்மை உண்டு, நடையில் ஒரு வேகமும் உண்டு என்று. ஆனால் ஒன்று, அவள் மட்டும் உன்னைப் போல் ஃபெயில் ஆகியிருந்தால் அவளுக்குப் பைத்தியமே பிடித்திருக்கும். மாகாணத்திலேயே, அவள்தான் முதன்மையாகத் தேறினாள் என்ற செய்தி வந்ததும் எப்படிக் குதித்தாள்! பாவம், அவள் அம்மா இல்லை, இதைப் பார்த்துச் சந்தோஷப்பட.''

கமலசாமியின் சிந்தனையில் கடந்த காலம் புகுந்து கலக்கியது. பெருமூச்சு விட்டார். முரளி, அவரையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். பேராசிரியரின் கண்கள் கலங்குவதாக நினைத்தான்.

மீண்டும் ஒரு சுருட்டுப் பற்ற வைத்துக் கொண்டார் கமலசாமி. சிறிது நேரம் சூழ்நிலையை மறந்து இருந்தார். ஏதாவது ஆழ்ந்து சிந்திக்கிறார் என்றால் இப்படித்தான் கண்களை மூடிக் கொண்டு சுருட்டை ஊதிக் கொண்டிருப்பார். முரளி, அவருடைய மேதா விலாசத்திலும் இலக்கியத்தைப் பற்றிய தெளிவான சிந்தனையிலும் எதைப் பற்றிப் பேசினாலும் கேட்பவரின் சிந்தனையைத் தூண்டும் முறையில் ஆழ்ந்த கருத்தோடு பேசும் தன்மையிலும் எப்போதும் அந்த முகத்தில் குடிகொண்டிருக்கும் மந்தகாசத்திலும் தன் மனத்தைப் பறி கொடுத்து விடுவான். அவருடைய தோற்றத்தின் கம்பீரத்தை மிகுதிப் படுத்தியவை, கறுப்பு நிறத்தில் அமைந்த பெரிய பிரேமுடன் உள்ள மூக்குக் கண்ணாடியும், சதா வாயில் காட்சியளித்த பெரிய சுருட்டும்.

''நீ எப்படித்தான் உன்னுடைய தோல்வியைத் தாங்கிக் கொண்டாயோ? ரொம்பத் தைரியசாலிதான். எங்கே மனம் உடைந்து போய் ஒய்ந்து விடுவாயோ என்று பயந்தேன். பார்ப்பதற்கு ஒரு மாதிரியாக இருக்கிறாயே ஒழிய உன் மனசு ரொம்பக் கெட்டி'' என்று கூறியவாறே கமலசாமி மிகுந்த வியப்புடன் முரளியின் முகத்தைப் பார்த்தார். அவருடைய பார்வையில் கலந்திருக்கும் அன்பையும், பாசத்தையும் அவன் இன்று நேற்றா உணர்கிறான்!

''முரளி! உனக்கு அது ஒரு பெரிய அதிர்ச்சிதான் இல்லையா...?'' என்றார்.

''நான் அதைப் பொருட்படுத்தவே இல்லையே?'' என்றான் முரளி.

''யோசிக்க யோசிக்க அவநம்பிக்கைதான் அதிகமாகிறது. நீ எப்படி ஃபெயிலாகியிருக்க முடியும்? எங்கோ எப்படியோ தவறு நடந்து விட்டது... நீ மீண்டும் பரீட்சைக்கு உட்கார்ந்திருக்கலாம். மறுத்து விட்டாயே?''

''பட்டம் வாங்கி என்ன செய்யப் போகிறேன்?''

''கரெக்ட். பட்டத்தை வாங்கிக் கொண்டு குமாஸ்தாவாகத்தானே மாறுகிறார்கள்!''

''சாரதா படித்து முடித்து இரண்டு வருஷங்கள் ஆகிவிட்டதே, என்ன செய்யப் போகிறாளாம்?''

''என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?'' என்று எதிர்க் கேள்வி போட்டார் கமலசாமி.

''ஒரு நல்ல மனைவியாவதற்கு வேண்டிய பயிற்சியைப் பெற வேண்டும்'' என்றான் முரளி.

பேராசிரியர், வியப்புடன் அவனை உற்றுப் பார்த்தார். தாம் அதுவரையில் சிந்திக்கத் தவறிய ஒன்றைச் சுட்டிக் காட்டி விட்டானே என்று பிரமித்தார்.

இது நாள்வரை சாரதாவைச் செல்லமாக வளர்த்து விட்டார். அவளுக்கு என்ன தெரியும்? பள்ளிக்கூடப் பாடம்

தான் தெரியும். ஒரு குடும்பத்தைப் பொறுப்பாக நடத்தும் திறமையோ, வாய்க்கும் கணவனுக்கு ஏற்ற மனைவியாக வாழும் பாங்கோ ஏதாவது அவளுக்குத் தெரியுமா? வெறும் விளையாட்டுப் பிள்ளை மாதிரி காலத்தை ஓட்டி விட்டாளே! ஒரு தந்தை எவ்வளவுதான் கருத்தோடு பெண்ணை வளர்த்தாலும், ஒரு தாயின் இடத்தைப் பூர்த்தி செய்துவிட முடியுமா? ஒருகணம் கடந்த காலம், கமலசாமியின் நினைவில் வட்டமிட்டது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே மறைந்துவிட்ட மனைவியின் முகத்தை நினைவில் நிறுத்திப் பெருமூச்சு விட்டார்.

"நம் நாட்டுப் பெண்களுக்குக் குடும்பக் கலை, சொல்லி வரவேண்டியதில்லை" என்றார் கமலசாமி.

"அந்தப் பண்பாடெல்லாம் மறைந்து கொண்டு வருகிறதே. ஒரு வெளிநாட்டான், இன்று நம் நாட்டுக்குள் வந்து பார்த்து விட்டு ஹிந்துப் பண்பாடுகளைப் பற்றிக் குறிப்பு ஏதாவது எழுதுவானேயானால், 'ஹிந்துப் பண்பாடு, நாகரிகம், கலாசாரம் என்ற உயர்ந்த விஷயங்கள், பல ஆண்டுகளுக்குமுன் இந்தியாவில் இருந்திருக்க வேண்டும் என்பதற்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன; இன்று அவை சிதைந்த நிலையில் ஆங்காங்கே சிதறிக் காணப்படுகின்றன' என்றுதான் எழுதி வைப்பான்" என்றான் முரளி.

பேராசிரியர் சிரித்தார்.

"சும்மாதானே இருக்கிறாள். பாரத மணிக்கு ஓர் உதவி ஆசிரியர் வேண்டியிருக்கிறது. சாரதா சம்மதிப்பாளா? இவள் ஒப்புக் கொண்டால் எனக்கு எவ்வளவோ உதவியா யிருக்கும்" என்றான் முரளி.

"அவளிடமே கேளேன். உதவி ஆசிரியர் வேலை அவளுக்குப் பொருத்தமான வேலைதான்..... நீ கேட்டால் ஒரு வேளை சம்மதிக்கலாம்...." என்றார் பேராசிரியர்.

"ஓ... எடிட்டரா...? ஏது அத்தி பூத்தது போலிருக்கிறதே...!" குரலைக் கேட்டு இருவரும் திரும்பினர். சாரதா வந்து கொண்டிருந்தாள்.

"உன்னைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருக்கிறோம்" என்றார் கமலசாமி.

"என்னைப் பற்றியா....?" என்று கேட்டுக் கொண்டே பக்கத்தில் இருந்த சோபாவில் அமர்ந்தாள் சாரதா.

"இரண்டு வருஷங்களாகச் சும்மா இருக்கிறாளே! என்ன செய்யப் போகிறாள் என்று கேட்டான் முரளி."

தெரியுமா?



மஹாராஷ்டிர மாநிலத்தில் விளையாட்டுத் துறைக்காக ஓர் அமைச்சர் இருக்கிறார்! தகவல்: 'ஜெயந்தி'

"நீங்கள் என்ன சொன்னீர்கள்?"

"அவனே சொல்லி விட்டான்."

"என்னவென்று?"

"நல்ல மனைவியாவதற்குள்ள பயிற்சியைப் பெறவேண்டும் என்று."

"ஓ....! வீட்டுக்குள் அடைந்து கிடக்க வேண்டும் என்கிறாராக்கும்!" இப்படி கேட்டுவிட்டு முரளியைப் பார்த்தாள் சாரதா.

சாரதாவின் கேள்வி முரளியைத் தட்டி எழுப்பியது. அதுவரை தன்னை மறந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்ததை நினைத்துத் தனக்குள்ளேயே வெட்கினான் முரளி. ஒருவாறு சமாளித்துக் கொண்டான்.

"மனைவி என்றால் அடைந்து கிடப்பது என்றுதான் அர்த்தமா?" என்று கேட்டான் முரளி.

"உங்களுடைய பத்தாம் பசலிக் கொள்கைப்படி அப்படித்தான் அர்த்தம்" என்றாள் சாரதா வெடுக்கென்று.

முரளி பதில் கூறாமல் சிரித்தபடி இருந்தான்.

"உங்களைப் போல் பத்தாம்பசலிக் கொள்கைக்காரர்களால்தான் நாடு சீரழிகிறது" என்றாள் சாரதா. இதற்கும் பதில் சொல்லாமல் இருந்தான்.

"என்ன முரளி, மௌனமாகிவிட்டாய்....?" என்று தூண்டினார் பேராசிரியர்.

"தர்க்கத்தினால் எந்த உண்மையையும் நிலைநாட்டிவிட முடியாது. உண்மை என்பது உணரப்பட வேண்டிய ஒன்று. வெறுமனே பேசி என்ன பயன்?" என்றான் முரளி.

"ஓஹோஹோ" என்று உரக்கச் சிரித்தார் கமலசாமி.

"பேசி என்ன பயனா? இன்று மைதானத்தில் வேதமூர்த்தி பேசுகிறார். கேளுங்கள். அப்போது தெரியும், பேச்சுக்குள்ள சக்தி என்னவென்று" என்றாள் சாரதா.

''நீ பேச்சுக் கேட்கப் போக வேண்டும் என்றுயே, சாரதா!'' என்றார் கமலசாமி.

''அதற்குத்தான் புறப்பட்டுக் கொண்டிருக்கிறேன். அப்பா, நீங்களும் வாருங்களேன்'' என்றாள் சாரதா.

''நான் வரவில்லை. நீ மட்டும் போய் விட்டு வாயேன்.''

''துணைக்கு ஆள் இல்லையே?'' என்றாள்.

''துணை எதற்கு? பெண் ஒரு துணையோடு வெளியே செல்வது பத்தாம் பசலித்தனமாயிற்றே!'' என்றான் முரளி குறுக்கிட்டு.

''இருட்டுகிற நேரத்தில் பெண் எப்படித் தனியே வெளியே போவது?'' என்றாள் சாரதா.

''ஏன் போனால் என்னவாம்? நம்முடைய பண்பாடுதான் பத்தாம்பசலியாயிற்றே. ஒரு பெண் துணையோடு வெளியே வருவது பழைய நாகரிகம். அதை ஏன் நீ பின்பற்ற வேண்டும்? ஆணும் பெண்ணும் சமம். எங்கே பார்த்தாலும் சமத்துவத்தைப் பற்றிப் பேசும் யுகம் இது'' என்றான் முரளி.

பேராசிரியர் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார்.

''தெருவில் காவாலிகள் திரிகிறார்களே!'' என்றாள் சாரதா கோபத்துடன்.

''திரிந்தால் என்ன? பெண்களும் பதிலுக்குக் காவாலிகளைப் போல் நடந்தால் போகிறது'' என்றான் முரளி.

''நான் குதர்க்கம் பேச வரவில்லை'' என்று வெடுக்கெனக் கூறிவிட்டு, ''அப்பா, புறப்படுங்கள்'' என்றாள் கமலசாமியைப் பார்த்து.

''என்னால் இன்று ஒரு பக்கமும் வர முடியாது. முரளியை அழைத்துப் போயேன்'' என்றார் கமலசாமி.

''அவர் வர மாட்டார். அவருக்கு இந்த மேடைப் பேச்செல்லாம் பிடிக்காது'' என்று சிணுங்கினாள்.

''முரளி, துணைக்குப் போய்விட்டு வாயேன்'' என்றார் கமலசாமி. தலையை ஆட்டினான் முரளி.

அரை மணி நேரத்தில் சாரதா வெளியே புறப்படத் தயாராக அலங்கரித்துக் கொண்டு வந்தாள். அவளை ஒருகணம் உற்றுப் பார்த்தான் முரளி.

''எல்லாம் பேச்சில்தான், புரட்சியும் புதுமையும். நடைமுறையில் காணோமே?'' என்றான்.

''என்ன?'' — வியப்புடன் கேட்டாள் சாரதா.

''உன் உடையும், பின்னலை நீளமாகத் தொங்க விட்டுப் பூ அணிந்திருக்கும் பாணியும், நெற்றியிலிருக்கும் பொட்டும் பழைய பண்பாடாயிற்றே?'' என்றான்.

''உங்களுக்கு ஏதாவது குதர்க்கம் பண்ணிக் கொண்டே இருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு நடையிலிருந்து கீழே இறங்கினாள் சாரதா.

''வழியெல்லாம் தர்க்கம் செய்து கொண்டிருக்காதீர்கள்'' என்று சிரித்துக் கொண்டே கூறினார் கமலசாமி.

முரளி காருக்குள் உட்கார்ந்ததும் கார் கிளம்ப மறுத்தது. ஏதோ கோளாறு. எவ்வளவு முயன்றும் காரைக் கிளப்ப முடியவில்லை. காரை அங்கேயே விட்டு விட்டு இருவரும் பஸ்ஸில் போக முடிவு செய்து புறப்பட்டார்கள்.

அவர்கள் போவதை வராந்தாவில் இருந்தவாறே பார்த்து ரசித்தார் பேராசிரியர். வாயிலிருந்த சுருட்டு கனிந்து கொண்டிருந்தது.

முரளியிடம் அவருக்கு அலாதியான பாசம். இலக்கியத்தில் எம். ஏ. படிக்க அவன் கல்லூரியில் சேர்ந்த போது அவனுக்குக் கமலசாமிதான் பேராசிரியராக இருந்தார். அவனுடைய அறிவுக் கூர்மையும், சாந்தமான போக்கும் அவரைக் கவர்ந்தன.

அவனோடு பேசிக் கொண்டிருப்பதில் அவருக்குத் தனிப்பட்ட ஆர்வம் உண்டு. உலகத்தில் உள்ள எல்லா விஷயங்களைப் பற்றியும் பேசுவான். அவனுக்குத் தெரியாத விஷயமே இல்லையோ என்று தோன்றும். சிந்தனையில் தெளிவு இருக்கும். பேச்சில் உறுதி இருக்கும். உடற்கட்டு வஸ்தாது போல் வாளிப்பாக இல்லாவிட்டாலும், குச்சி போல் ஒடிந்து விழுவது மாதிரியும் இருக்கமாட்டான். தோற்றத்தில் கம்பீரம் இருக்காது. நளினமான கவர்ச்சி இருக்கும். அவனிடம் இயல்பாக அமைந்துவிட்ட நாணமும், அடக்கமும் அவனை ஒதுங்கியே இருக்கும்படி செய்து விட்டன. யாரிடத்திலும் வலியப் போய்ப் பேச மாட்டான். முகம், ஒரு பெண்ணைப் போல் இருந்தாலும், அதில் அறிவின் முதிர்ச்சியும், சிந்தனையின் தெளிவும் சுடர்விடும். பரந்த நெற்றியும், ஒளி வீசும் கண்களும், அமைதியான புன்சிரிப்பும் அவனை ஒரு சிந்தனையாளன், ஆழ்ந்த அறிவையும் அடக்கத்தையும் பெற்றவன் என்பதைக் காட்டிக்கொண்டிருந்தன. மெள்ள மெள்ளக் கமலசாமியின் இதயத்திலே ஒரு நீங்காத இடத்தையும் பெற்று விட்டான்.

அவனைப் பற்றிய நினைவில் லயித்தவாறே சோபாவில் சாய்ந்து கிடந்தார் பேராசிரியர்.

(தொடரும்)

பைந்தமிழ்ப் பணியில் பரிதிமாற் கலைஞர்

டாக்டர் ந. சஞ்சீவி

இந்த ஆண்டு (1970) இரு பெருந் தமிழ் அறிஞர்களின் நூற்றாண்டு விழா ஆண்டு. அவர்களுள் ஒருவர் எழுபத்தெட்டு ஆண்டுகள் வாழ்ந்தவர்; மற்றொருவர் 33 ஆண்டுகளே வாழ்ந்தவர். (1870 – 1903) முன்னவர் திரு ரா. ராகவ அய்யங்கார். பின்னவர் பரிதிமாற் கலைஞராகிய சூரியநாராயண சாஸ்திரியார். முப்பத்து மூன்று ஆண்டுகளே வாழ்ந்த போதிலும் இப்பெரியார் முத்தமிழ் நலங்கருதி ஆற்றிய தனிப் பெருந் தொண்டுகள் தன்னிகர் இல்லாத் தொண்டுகள் — நன்றியோடு நினைத்துப் போற்றத் தக்கன.

பரிதிமாற் கலைஞர் மதுரையை அடுத்த விளாச்சேரியில் கோவிந்த சிவனார் என்ற வடமொழி வல்ல வேத வித்தகருக்குத் திருமகனாய்த் தோன்றினார். தென்மொழியிலும், வடமொழியிலும் ஆங்கிலத்திலும் வல்லவரும் கணித நூல், அளவை நூல், அறிவியல் நூல் ஆகியவற்றில் புலமை பெற்றவரும் ஆகிய மதுரை [மகாவித்துவான் சபாபதி முதலியாரிடம் தமிழ் கற்றார் பரிதிமாற் கலைஞர். அதன் பயனே பல துறைகளிலும் பளிச்சிட்ட பரிதிமாற் கலைஞரின் பைந்தமிழ்ப் பணி.

பரிதிமாற் கலைஞர் முன்னிலை வகுப்பு (எப். ஏ.) வரையிலும்



வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.
(பரிதிமாற் கலைஞர்)

மதுரைக் கல்லூரியில் கல்வி கற்றார்; பின்னர் இளங்கலை (பி. ஏ.) வகுப்பு படிக்க சென்னை — கிறித்துவக் கல்லூரியில் சேர்ந்தார். அந்நாளில் அக்கல்லூரி 'மில்லர் கல்லூரி' என்றே வழங்கப்படும் அளவுக்குத் தவத்திரு மில்லர் தலைமையில் தனிச் சிறப்புடன் திகழ்ந்து வந்தது. இளங்கலை வகுப்பில் தமிழிலும் தத்துவத்திலும் மாநிலத்திலேயே முதல்வராய்த் தேர்ச்சி பெற்ற பரிதிமாற் கலைஞர் தவத்திரு மில்லரின் தனி அன்பையும் தனி மதிப்பையும் பெற்றார்.

தவத்திரு மில்லர் தம் கல்லூரியிலேயே பரிதிமாற் கலைஞருக்குத் தத்துவ ஆசிரியர் பதவி தர விழைந்தார். ஆனால் தமிழ் செய்த தவப் பயன் பரிதிமாற் கலைஞர் தமக்குத் தமிழாசிரியர் பதவியே வேண்டும் என்று வேண்டினார். என்னே அவர் தன்னல மறுப்பும் தமிழ்ப் பற்றும்!

'பிறர் சொன்னதையே சொல்லும் கிளிப் பிள்ளை' மேதை ஆகான்; 'அரைத்த மாவையே அரைப்பவன்' ஆராய்ச்சி அறிஞன் ஆகான். இவ்வுண்மைகட்கு உரை கல்லாக விளங்கிய உரவோர் பரிதிமாற் கலைஞர். புதுமையும் புலமையும் கலக்கும் போதே மேதை பிறக்கிறான். அத்தகு நிலையை அடைந்தார் பரிதிமாற் கலைஞர். அதற்குத் தூண்டுகோலாய் விளங்கியது அவர் பெற்ற ஆங்கிலக் கல்வியும் அவர் வாழ்ந்த காலமும். எனவே, அவரைக் காலம் படைத்தது; ஒரு பொற்காலத்தை அவரும் படைத்தார். தாய் — மகள்—பேத்தி உறவே இது!

பரிதிமாற்கலைஞரின் உள்ளத்தை ஒரு கருவேல முள் பெரிதும் உறுத்திக் கொண்டிருந்ததாய்த் தெரிகிறது. அது வடமொழியைச் சமய மொழியாகக் கொண்ட அந்தணர் அருந்தமிழ் ஆர்வம் அற்றவர் என்ற குற்றச்சாட்டே ஆகும். இத்திட்டு பற்றி அவரே சுட்டுகிறார். இவ்வசை நீங்கவே அவர் தம் வாழ்வையே வேள்வி செய்தார் எனலாம். ஆம். வேதியர் குடியில் தோன்றிய பரிதிமாற் கலைஞர் செய்த பெரு வேள்வி தமிழ் வேள்வியே — மறுமலர்ச்சித் தமிழ் வேள்வியே — ஆகும். இந்த வேள்வியில் அவர் எந்த அளவுக்கு ஈடுபட்டிருந்தார் என்பதற்கு அவரே ஒரு நிகழ்ச்சி பற்றி உணர்ச்சியோடு கூறும் சொற்களை நினைவுபடுத்திக் கொள்வதே பொருத்தமாகும். அது வருமாறு:

"ஒரு காலத்தில் யாம் வடமொழிப் புலவர் ஒருவரோடு சல்லாபஞ் செய்து கொண்டிருந்த போது, அவர் இடைரென்று 'மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறியாலும் சிறந்து விளங்கி யாக்கை நலம் வாய்ந்த தமிழ் மகள், தான் சமஸ்கிருத நாயகனை எதிர்ப்பட்டு மணக்குங்காலும் முகம் காட்டாது தலை கவிழ்ந்து நின்றனள்! இஃதென்னே!' என்று கூறிப்

புன்னகை செய்தனர். அஃதுணர்ந்த யாமும் காலந் தாழ்த்தலின்றி அவர் எதிர்பாராத வண்ணமாய், 'எல்லாவற்றினுலும் யாக்கை நலம் வாய்த்தோனிரும் தமிழ் மகன் தம்மை மணக்குமாறு போந்த வடமொழி நாயகன் மூங்கையாய் வாய் திறத்தலின்றி முகத் திறற் பல சைகைகள் செய்து நின்றமை கண்டு, முகஞ் செய்யாது புறக்கணித்து நின்றனள்! இஃதென்ன கொலோ!' என்று கூறி இளநகை அரும்பினம். இச்சம்பாஷணையின் பொருளாவது, அவர் தமிழில் முகத்துக்குத் தக்க சொல்லில்லை என்ருர். யாம் 'முகம்' தமிழ்ச் சொல்லே என்பாரோடிணங்கி, அதனை வலியுறுத்திச் சொல்லு முகத்தால் வடமொழியில் முகத்தின் சொற்களைத் தவிர்த்து வாய்க்குத் தக்க சொல்லின்மை காட்டி, அது பேச்சு வழக்கற்ற பாஷை யென்று குறித்தனம். இச்சல்லாபத்தை அறிவுடையோர் விநோதார்த்தமாகக் கொண்டு எம்மைக் கடைக் கணிப்பாராக''.

* * *

பரிதிமாற் கலைஞர் படைத்த முதல் நூல் 'ரூபாவதி' அல்லது 'காணுமல்போன மகள்'. இந்த நாடக நூல் வெளி வந்தது 1895ம் ஆண்டு. தமிழாசிரியராய் இருந்து நாடகம், கதை நூல் எழுதியோரில் முதல்வர் பரிதிமாற்கலைஞர்.

இந்நூல் எழுதிய இரண்டே ஆண்டுகளில் பரிதிமாற்கலைஞர் 'நாடகவியல்' என்ற நாடக இலக்கண நூலை வெளியிட்டார்கள். இந்நூலே இன்றளவும் நாடகத் தமிழ் இலக்கண நன்னூலாய்த் திகழ்ந்து வருகிறது. இந்நூல் வெளிவந்த மறு ஆண்டே, 'கலாவதி' என்னும் இன்னும் 'ஒரு புதிய நாடகம்' பரிதிமாற் கலைஞரால் பெற்றெடுக்கப்பட்டது. இதை அடுத்துப் பிறந்த இலக்கியச் செய்யுள் நாடகமே 'மான விஜயம்'. 'கலாவதி'க்கும் 'மான விஜயத்துக்கும் இடையே பிறந்த 'புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க் கதை' தான் மதிவாணன். இது ஒன்றே ஆசிரியரால் இயற்றப் பெற்ற கதை நூல்.

இவரது 'தனிப்பாசுரத் தொகை'யின் பெரும்பாலான பாடல்கள் போப்பையராலே மொழிபெயர்க்கப் பெற்றன. பரிதிமாற் கலைஞர் பாடல்களே போப்பையர் மொழிபெயர்த்த புதுத் தமிழ்ப் பாக்கள்.

பரிதிமாற் கலைஞர் தம் வாழ்நாளின் இறுதி ஆண்டில் (1903) வெளியிட்ட மணிமுடியான நூல் 'தமிழ் மொழியின் வரலாறு'. இது வரை 12 பதிப்புகள் பெற்றிருக்கும் இந்நூலே ஆசிரியர் நூல்களுள் எல்லாம் மிகுதியாகப் படித்துப் பயன்படுத்தப்படுவது. இந்நூலும் இப்பொருள் பற்றிய முதல் நூலாகும்.

பரிதிமாற் கலைஞரைப் பற்றிக் குறிப்பிடத் தக்க இன்னொரு சுவையான செய்தி அவர் நாடகங்கள் எழுதியதோடு நில்லாமல், வேடங்கள் — சிறப்பாகப் பெண் வேடங்கள்— புனைந்து நாடகமாடினர் என்பதேயாகும். ஆம். கிறித்துவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் — தெய்வ பக்தி நிறைந்த திருமறையாளர் — நாடகமாடினர்! — இருபதாம் நூற்றாண்டு எழுவதற்கு முன்பே! என்ன துணிவு! எவ்வளவு புரட்சி! புதுமை புரிந்த புலவர் கூட்டத்தின் புரவலர் பரிதிமாற் கலைஞர்!

ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர் பதவியைப் போப்பையருக்குப் பின் ஏற்கத் தக்கவர் பரிதிமாற் கலைஞரே என்று கருதப்பட்டு அழைப்பும் வந்தது. ஆனால் தமிழர்க்கே உரிய தீவினை காரணமாகப் பரிதிமாற் கலைஞர் கடல் கடந்து சென்று கன்னித் தமிழ் வளர்ப்பதைப் பொறுது கண் கெட்ட காலன் அவரை நோய்வாய்ப்படுத்தி மென்று தின்றுவிட்டான்! ஆம்; அந்தோ! தமிழர் புகழ்காக்க இரவு பகலாய் உழைத்த பெரியார் எலும்புருக்கி நோயால் இற்று இறுதியில் உயிர் துறந்தார்; சாவோடும் போராடியே சாய்ந்தார்.

பரிதிமாற் கலைஞரின் பண்பு நலன்களுள் எல்லாம் உள்ளத்தைக் கொள்ளை கொள்வது இரண்டு எனலாம். ஒன்று பகைவர்க்கும் அன்பு பாராட்டியது. இவ்வுண்மைக்கு ஒப்புயர்வற்ற சான்றாய் விளங்குவது பரிதிமாற் கலைஞர் தமது 'மான விஜயம்' என்ற அரிய இலக்கியச் செய்யுள் நாடகத்தை 'நண்பரல்லாதார் நூலினிடத்துக் குற்றம் காணும் நோக்குடையரேனும், நூலினைத் துருவி ஆராய்குநர் ஆதலின், அன்னர்க்கு இதனை உரிமை செய்கின்றேம்' என்று அரியதொரு உரிமையுரை செய்திருப்பதே ஆகும். அடுத்து அவருடைய பண்பு நலன்களுள் சிறந்ததாய் எண்ணத் தக்கது இளம் வாலிபர்களிடம் இரக்கம் கொண்டு இலக்கியத் தமிழ்ப் பெருமை குறையாத எளிமைத் தமிழ் ஆக்க எண்ணியமையே ஆகும். இதற்குச் சான்றாக விளங்குவது உரை நூல்கள் தோன்ற இவர் காட்டிய ஊக்கமும் சந்தி பிரித்தல், குறியீடுகள் இடுதல் ஆகியவற்றில் இவர் காட்டிய பரந்த மனப்பான்மையுமே ஆகும்.

தீயன தீய்ப்பதிலும் நல்லன நாட்டுவதிலும் ஆண்டில் மட்டுமே இளைஞராய் இருந்த இவர்க்கு இருந்த ஆற்றல் வியந்து பின்பற்றற்குரியது. கர்சான் பிரபு காலத்தில் மத்திய சட்ட சபையில் சுதேசத் தாய் மொழிகளை எல்லாம் பல்கலைக் கழகப் பாடப் பகுதிகளினின்றும் நீக்கிவிட வேண்டும் என்பதாக ஒரு தீர்மானம் வந்தபோது பேராசிரியர் பூரணலிங்கம் பிள்ளையோடு ஆசிரிய சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தினரையும் வாடகை வண்டியமர்த்திக் கொண்டு சென்று கண்டு அவர்களுக்கு உண்மை நிலைமையை விளக்கி முடிவாகத் தமிழ் கட்டாய பாடமாகவே நிலைக்கச் செய்தார். இவ்வாறு தீயோர் முயற்சிகளைத் தீய்த்த பரிதிமாற் கலைஞர் நம் காலத்தும் மதுரையில் தமிழ்ச் சங்கம் விளங்க நான்காவது தமிழ்ச் சங்கத்தை நண்பர்களோடு முயன்று உருவாக்கினர்.

ஒரு நூற்றாண்டு முன் தோன்றி 33 ஆண்டுகளே வாழ்ந்தும் முத்தமிழும் சிறக்கப் பணி புரிந்து தமிழிலக்கிய வரலாற்றில் தனிப் புகழ் பெற்றுவிட்டவர் பரிதிமாற் கலைஞர்.

காணக்கிடைக்காத தங்கம்

அத்தியாயம் பதினெட்டு

நீலாம்பாள் சொன்னதையெல்லாம் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அருணகிரியின் மனம் பரிதாப உணர்ச்சியால் இளகிப் பசபசத்தது. இன்னும் கொஞ்ச நேரம் அவள் தன் சோகக் கதையைத் தொடர்ந்து சொல்லியிருந்தாளானால் அவன் கண்ணீர் சிந்தி அழுதே விட்டிருப்பான் போல் தோன்றியது. ஆயினும் அவனது உள் மனம் 'என்ன இது சோதனே! நானே எனக்கு நேர்ந்துள்ள இக்கட்டுக்களி லிருந்தும் தொல்லே துயரங்களிலிருந்தும் எப்படி மீள்வது என வழி தெரியாமல் குழம்பிக் குமைந்து கொண்டு இங்கே உட்கார்ந்திருக்கிறேன்; இவள் வேறு வலிய வந்து தன் சோகக் கதையை அவிழ்த்துக் கொட்டி என்னிடமுள்ள கொஞ்ச நஞ்சம் அமைதியையும் தைரியத்தையும் சிதறடிக்க ஆரம்பித்து விட்டாளே!' என்று சலிப்படைந்தது. 'சரி; இனிமேலும் இங்கே இருக்கக் கூடாது. இவளிடம் ஏதாவது சொல்லி நழுவிக் கொண்டு வேறு இடம் பார்த்துப் போய் விட வேண்டியதுதான்' என்று எண்ணி எழுந்திருப்பதற்காக அப்படியும் இப்படியும் அசைந்தான்.

''நான் ஒரு கூறுகெட்ட ஜென்மம்! என்னுடைய பதங்குலேஞ்ச வாழ்க்கையைச் சொல்றதனுலே எனக்கோ, அதைக் கேட்கிறவங்களுக்கோ ஒரு பைசா பிரயோசன மாகுமா? வீண் வெட்டிப் பிளுத்தல்! பாவம், தம்பி மனசை ரொம்பக் கஸ்டப்பட வைச்சுட்டேன்; விட்டுத் தள்ளுங்க தம்பி!'' என்று ஒரு போலியான அநுதாப விரக்தியுடன் சொல்லிச் சிரித்தாள் நீலாம்பாள்.

எழுந்து செல்லக் காலேத் தரையில் ஊன்றிய அருணகிரி இதைக் கேட்டுச் சற்றே தயக்கமடைந்தவனுய் அவளேப் பட்டும் படாமலும் பார்த்தான்.

இந்நேரம் நேத்திரானந்தக் காட்சியாய் வர்ண ஜாலம் காட்டிக்கொண்டிருந்த நீரூற்று சட்டென்று சரிந்து வழிந்து பின் அடங்கியது. இரவு எட்டு மணிவாக்கில் அக்காட்சி நிறுத்தப்பட்டு விடுவது வழக்கம்.

''ஏங்க 'தம்பி! உங்ககிட்ட ஒண்ணு கேட்டால் கோபிச்சுக்க மாட்டீங்களே?'' என்று தணிந்த குரலில் ஒரு மயக்குப் புன்னகையுடன் வினவியவாறு சற்றே முன்னுல் நகர்ந்து உட்கார்ந்தாள் நீலாம்பாள்.

நேரமாகி!விட்டதை உணர்ந்து அவளிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட எண்ணிய அருணகிரி தயக்கத்துடன், ''என்ன விஷயம்?... சும்மா கேளுங்க!'' என்ருன் சிரித்துக் கொண்டே.

''ஒண்ணுமில்லே!... வந்து... நீங்க இதுவரையில் எத்தனே சினிமாப் பார்த்திருப்பீங்க?''

அருணகிரி இதைக் கேட்டு வாய் விட்டுச் சிரித்தான். சிரித்துக்கொண்டே, ''நானு?'' என்று இழுத்தபடி ஒரு கணம் யோசித்தான். பிறகு ''நான் அதிகம் சினிமாப் பார்க்கிறதில்லேம்மா! பார்க்கப் பிடிக்காதுன்னு இதுக்கு அர்த்தம் இல்லே; வசதி இல்லே, அவ்வளவுதான்! சின்ன வயசிலே ஒரு பத்துப் பதினேஞ்சு படம் பார்த்திருப்பேன். இப்ப நாலேஞ்சு வருஷமா சினிமாவே பார்த்ததில்லே. அதுவும் இந்த ஊருக்கு வந்து ஒரு படம் கூடப் பார்க்கலே'' என்ருன் நாணம் கலந்த குரலில்.

''அப்ப, உங்களுக்குச் சொந்த ஊர் எது தம்பி?''

''சிதம்பரம். இப்ப என் அம்மா மெட்ராசிலே இருக்குது.''

''இங்கே?''

''என் அக்கா வீட்டிலிருக்கிறேன்.''

''ஓகோ!'' என்று அளவுக்கு மீறிய உற்சாகத்துடன் தலேயாட்டிக்கொண்ட நீலாம்பாள் சில விநாடிகளுக்குப் பின் பருவப் பெண்ணேப் போல் நாணிக் கோணிச் சிரித்தபடி, ''நான் எதுக்கு அப்படிக் கேட்டேன்னு தம்பி?...'' என்று இழுத்து நிறுத்தினுள்.

''நான் சினிமாப் பார்க்கிறது உண்டான்னுதானே?''

''ஆமாம்!... நான் இதுவரை ஒரு சினிமாக் கூடப் பார்த்ததில்லேன்னு சொன்னுல் நீங்க நம்புவீங்களா?''

''அப்படியா?'' என்று அவசரமாகக் கேட்டபடி அவளே ஆச்சரியத்துடன் பார்த்தான் அருணகிரி.

ஜெகசிற்பியன்



அவள் சொன்னதை அவனால் நம்பவே முடியவில்லை. இந்தக் காலத்தில் ஒரு பெண் — அதிலும் பெங்களூர் நகரில் சுயேச்சையாக வாழ்ந்து வரும் நீலாம்பாள் — சினிமாவே பார்த்ததில்லை என்றால் அதை எப்படி நம்புவது? மேலும், கணவனை இழந்து, படிப்பறிவோ, பொருளாதார வசதிகளோ இன்றி, நடுத்தர வயதையும் கடந்து விட்ட நிலையில் — கண்ணுக்கு மை, நெற்றிக்குச் சாந்துப் பொட்டு, முகத்தில் பவுடர் பூச்சு, கழுத்தில் (அது அசலோ போலியோ) செயின், கையில் வளையல், நாகரிகக் கொண்டை, பாதி வயிறு தெரியும்படியான டூ-பை-டூ ஜாக்கட், நைலக்ஸ் சேலை — என்றிப்படியெல்லாம் நவநாகரிக மோஸ்தர் அலங்காரம் பண்ணிக் கொண்டிருக்கும் அவள், இத்தகைய அலங்காரங்கள் பண்ணிக் கொள்ள எங்கிருந்து கற்றாள்? இன்றைய சினிமாக்கள் பெண்களுக்கு முதல்படியாகக் கற்றுத் தருவது இம்மாதிரி அலங்காரம்தானே? எனினும் சினிமாப் படம் பார்க்காமலே அது போதிக்கும்

அந்த அலங்காரக் கலையைப் பயில, காமசூத்திர நூலின் இறந்த ஏடுகள் போல் மினிரும் இன்றைய சினிமா விளம்பரப் போஸ்டர்களே போது மானவை என்று இவள் விஷயத்துக்குத் தீர்வு காண வேண்டியதுதானே?...

''ஆமாம் தம்பி, நான் சொல்றது நிசந்தான்!'' என்றவாறு அவனை ஓரக் கண்ணால் பார்த்துக் குறுநகை பூத்தாள் நீலாம்பாள். ''எத்தனையோ பேர் எத் தனையோ தடவை சினிமாப் பார்க்க என்னைக் கூப்பிட்டு இருக்காங்க; ஏனோ அந்த விஷயத்தில் ஒரே குருட்டுப் பிடி வாதமா இருந்துட்டேன்'' என்றவள் சற்றுப் பொறுத்து, ''நீங்க இது பற்றி என்ன நினைக்கிறீங்க தம்பி?'' என்று மிகவும் அக்கறையாகக் கேட்டாள்.

இந்தக் கேள்விக்கு என்ன பதில் கூறு வது என்று தெரியாமல் ஒரு கணம் விழித்தான் அருணகிரி. 'ரொம்பப் பாராட்ட வேண்டிய விஷயம்மா இது' என்று கூற வாயெடுத்தான். ஆனால் அவனையறியாமலே, ''சினிமாப் பார்க் கிறது அப்படி ஒண்ணும் தப்பு இல் லேம்மா! சும்மா பொழுதுபோக்குக்குப் பார்க்கிறதுதானே?'' என்று சொல்லி விட்டான்.

நீலாம்பாள் இதை உடனே ஆமோ திப்பவள் போல் பலமாகத் தலை யசைத்து, ''நல்லாச் சொன்னீங்க, தம்பி! இப்ப நானும் அப்படித்தான் நினைக்கிறேன்'' என்றாள் ஒரு குலுக்குச் சிரிப்புடன். பிறகு அவனை நிமிர்ந்து பார்க்க வெட்கப்படுகிறவள் மாதிரி தலையை ஒரு பக்கமாகச் சாய்த்துக் கொண்டு தணிந்த குரலில், ''ஆமா தம்பி!... இன்னைக்கு என் மனசு என் னவோ போல இருக்குது. ஏதேதோ கவலை. எதையும் வாய் விட்டுச் சொல் லிக்கொள்ளுறப்பலே இல்லே. எப்படி யெப்படியோ சமாளிச்சுப் பார்க்கிறேன். நிம்மதி கிடைக்க மாட்டேங்குது. அது தான் ஒரு சினிமாவுக்காச்சும் போக லாமான்னு நினைக்கிறேன். இங்கே, சௌத் பெரேட்லே ஒரு நல்ல படம் ஆடுதாம். ஊரெல்லாம் பேசிக்கி றாங்க...'' என்று வாக்கியத்தை முடிக் காமல் வெட்டி நிறுத்தினாள்.

அருணகிரி அவளை வியப்புடன் பார்த் துக்கொண்டு மௌனமாய் உட்கார்ந் திருந்தான்.

''என்ன தம்பி இப்படிப் பார்க்கி றீங்க? நான் சொல்றது உங்களுக்குக் கேலியாக இருக்குதா?''

''ஐயையே! அப்படி யெல்லாம் ஒண்ணு மில்லேம்மா!'' என்று பட படத்தான் அருணகிரி.

இசைத்தட்டைப் போட்டுக் கேட்கலாமா? ஏன், பார்க்கவும் செய்யலாமே!



புதுமாதிரியான இந்த இசைத்தட்டில் பாட்டு கேட் கும். அதேசமயம் கிராமஃபோனுடன் இணைக்கப்பட் டுள்ள டெலிவிஷனில் பாடுபவரையும் பார்க்கலாம்!

ஒளிப்பதிவு ஒலிப்பதிவு இரண்டையும் உள்ளடக்கி யுள்ளது இந்த ரிகார்டு. ஐந்து நிமிஷ நேரம் நீடிக் கும். இசைத் தட்டின் ஒரு பக்கத்தை மட்டுமே பயன் படுத்த முடியும். இத்தகைய இசைத் தட்டுக்களை டெலிஃபன்கென் என்னும் ஜெர்மானிய ஸ்தாபனம் வெற்றிகரமாகத் தயாரித்திருக்கிறது. ஆயிரம் தடவை போட்டுக் கேட்டபின்னர்தான் இசைத்தட்டு தேய ஆரம் பித்ததின் அறிகுறிகள் தோன்றுமாம்! கலர் டெலி விஷனில் வண்ணப் படமாகப் பாடகர் தோற்றமளிக்க வும் இப்போது இந்த இசைத்தட்டில் தேவையான முன்னேற்றங்களைச் செய்து வருகிறார்கள்.

1972ல் ஜெர்மானிய இல்லங்களில் சர்வ சாதாரண மாக இத்தகைய இசைத் தட்டுக்கள் காணப்படும் என் றும், விலை இன்றைய நீண்ட நேரம் பாடும் இசைத் தட்டின் விலையைவிட அதிகமிராது என்றும் கூறு கிறார்கள்.

- ஜெர்மன் ட்ரிப்யூன்

''அதுக்கு ஏன் இப்படி அலறுறீங்க? நல்ல பிள்ளைதான் போங்க!'' என்று கூறிக் கலீரெனச் சிரித்தாள் நீலாம்பாள். ''நான் என்ன சொல்றேன்னு தம்பி! சினிமாப் பார்க்கணும்னு நெனைச்சுட் டேனே தவிர அதுக்குப் போகத் தைரி யம் வரலே. எப்பவாச்சும் போய் இருந் தாத்தானே? எப்படிப் போறதுன்னு பயம்மா இருக்குது! எங்கே டிக்கட் வாங்கி, எந்த வழியாக் கொட்டாய்க் குள்ளே நுழைஞ்சு, எவ்விடத்திலே உட் கார்ந்து படம் பார்க்கிறதுன்னு கூடத் தெரியாது! என்னைப் பார்த்தா இப்படி இருக்கிறேனே கண்டி, எதுக்கும் துப்பு இல்லாத சென்மம் நான்!'' என்றாள் தன்னையே வெறுத்துக் கொள்கிறவள் போல.

சற்றைக்குப் பின் மீண்டும் அவள் தொடர்ந்து, ''அதான் உங்களைக் கேட்

கலாம்னு இங்கே வந்தேன் தம்பீ...'' என்று வெட்கக் குழைவுடன் தயங்கி இழுத்தாள்.

''என்னம்மா சொன்னீங்க? என்னைக் கேட்கலாம்னு?'' என்றான் அருணகிரி ஒன்றும் புரியாமல்.

''ஆமாம், தம்பி! அதாவது... எனக்குத் துணையா என்கூட இப்ப...''

''சினிமாவுக்கா?''

''உக்கும்!''

''நான்...வந்து...என்கிட்டே...''

''பணம் இல்லேங்கிறீங்களா?....சே என்ன தம்பி இப்படிப் பேசறீங்க! என்னே இனிமேல் அந்நிய மனுஷியா நினைக்காதீங்க. உங்க சொந்தக்காரியாகவே வைச்சுக்குங்க. என்னமோ உங்களை எனக்கு ரொம்பப் புடிச்சுப் போச்சு. இல்லேன்னு இவ்வளவு நேரம் இதையெல்லாம் பேச மாட்டேன்.''

தர்மசங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டவன்போல் தவிதவித்தான், அருணகிரி.

''சொல்லுங்க, தம்பீ?.... பாதி ஆட்டத்திலேகூட எழுந்திருச்சு வந்துடலாம். இப்பக்கூட எனக்குப் படம் பார்க்கணும்னு ஆசை இல்லே. இந்தப் பாழாய்ப்போன மனசுக்குக் கொஞ்சம் ஆறுதல் தேடித் தரணும். அதுக்குத்தான் பிரியமில்லாமலே உங்களைக் கேட்கிறேன். தப்பா ஒண்ணும் எடுத்துக்காதீங்க....''

அருணகிரி யோசனையில் ஆழ்ந்தான். மணி இப்போது எட்டுக்கு மேல் ஆகிவிட்டது. இந்நேரம் அவன் வீட்டுக்குப் புறப்பட்டு விடுவது வழக்கம். ஆனல் இன்று இன்னும் கொஞ்சம் தாமதமாகப் போக வேண்டும் என்று ஏற்கனவே திட்டமிட்டிருந்தான். உண்மையில் வீட்டுக்குச் செல்லவே அவனுக்கு விருப்பமில்லை. விருப்பமில்லை என்பதைவிடப் பயமாயிருந்தது என்றும் சொல்லலாம். காரணம், அந்தப் பெண் நிர்மலா ஏதோ கடிதத்துடன் இன்றிரவு அவனைச் சந்திக்கப் போவதாக நேற்றிரவே சொல்லி விட்டுப் போயிருக்கிறாள் அல்லவா?

அந்தச் சந்திப்பை எப்படியும் தவிர்த்துவிட வேண்டும் என்று அவன் நினைத்தான். ஆனல் அதற்கான வழிவகைதான் இதுகாறும் புலப்படாமல் இருந்தது. இந்நிலையில் இப்போது நீலாம்பாள் அவனைச் சினிமாவுக்குக் கூப்பிடவே, மதில்மேல் பூனையாக மனம் பேதலிக்கலானான்.

''இன்னும் என்ன யோசனை பண்ணறீங்க?'' என்றவாறு எழுந்து அவன் அருகில் வந்த நீலாம்பாள், ''வாங்க, தம்பீ! நேரமாகுதில்லே?'' என்று கொஞ்சல் குரலில் சிணுங்கினாள்.

அவளுடன் சினிமாவுக்குப் போவது என்ற முடிவுக்குத் திடீரென்று வந்து விட்ட அருணகிரி சட்டென்று எழுந்து, ''அப்ப சரி; வாங்கம்மா போகலாம்!'' என்று கூச்சப் புன்னகையுடன் கூறியவாறு மெல்ல நடக்கலானான்.

நீலாம்பாளின் முகம் வெற்றிப் பெருமிதத்தால் மலர்ந்தது. உடனே அவள் இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களை எடுத்து, ''இந்தாங்க, தம்பீ! இதை டிக்கெட் வாங்கறதுக்கு வைச்சுக்குங்க!'' என்று சொல்லிக் கொண்டே அவனது சட்டை ஜேபியில் திணித்து விட்டுப் பதினறே முக்கால் வயதுப் பருவப் பெண்ணைப்போல் ஒல்கி ஒசிந்து ஒய்யார நடைபயின்று அவன் பின்னல் சென்றாள்.

இரவு மணி ஒன்று. இருவரும் தியேட்டரை விட்டு வெளியே வந்தனர்.

நீலாம்பாள் மிகவும் உற்சாகத்துடன் காணப்பட்டாள். அவள் சினிமா பார்த்த விதத்தைப் பக்கத்தில் அமர்ந்து ஜாடைமாடையாகக் கவனித்துக் கொண்டிருந்த அருணகிரிக்கு, அவளை இன்றுதான் புதிதாக — முதன் முறையாக — சினிமா பார்க்க வந்தவள் என்று நம்பவே முடியவில்லை. ஆனலும் அது குறித்து அவளிடம் பூடகமாகக் கேட்டு அறியக்கூடிய மன நிலையில் அவன் இல்லை. ஒருவித பீதியால் குழம்பிப் போயிருந்தான். இருவரும் சற்றுத் தூரம் மௌனமாய் நடந்தனர்.

''என்னம்மா, நீங்க எந்த வழியாப் போகணும்?'' என்று கேட்டான் அருணகிரி.

''நீங்க?'' என்று திருப்பிக் கேட்டாள் நீலாம்பாள்.

''நான் இப்படியே இந்தக் கப்பன் ரோடு வழியாப் போயிடறேன். கேவல்ரி ரோட்லே என் வீடு இருக்குது.''

''ஐயையோ! என்னைத் தனியாவா விட்டுட்டுப் போறேங்கிறீங்க?'' என்று திடுக்குற்றவள் போல் வினவிய நீலாம்பாள், ''ஆத்தாடீ! இந்த நடு சாமத்திலே எப்படி ஒண்டியா வீட்டுக்குப் போவேன்? எட்டு மணிக்கு மேலே நான் வெளியே தலை காட்டிப் பழக்கமே இல்லையே! அதுவும் ஜிலோன்னு கெடக்கிற இந்த ரோட்லே போறதுன்னு?... நினைக்கிறப்பவே என் குலை நடுங்குது!'' என்றாள் பயந்த குரலில். மீண்டும் அவள் கெஞ்சுவது போல் கையை நீட்டி, ''உங்களுக்குப் புண்ணியமாப் போவும் தம்பீ! தயவுபண்ணி என் வீடு வரையில் எனக்குத் துணையா வந்து விட்டுப் போய்விடுங்க! கஷ்டம் கொடுக்

லிப்டன் ரூபி டஸ்ட்

தூள் தேயிலைகளில்

ஒப்புயர்வற்ற மன்னன்

போட்ட கணமே கெட்டியாகக் கிட்டிடும் தேநீர்.
நல்ல நிறத்துடன் நிறைந்த ருசி—இதுவே ரூபி டஸ்ட்;
தூள் தேயிலைகளில் ஒப்புயர்வற்ற மன்னன்.
ரூபி டஸ்ட் சிக்கனமானதும் கூட. மற்றெந்த தூள் தேயிலையையும்
விட அதிக அளவு கோப்பைகளைக் கொடுக்கிறது.
இன்றே ரூபி டஸ்ட் பாக்கெட் ஒன்று வாங்குங்கள்.



லிப்டன் என்றாலே நல்ல டீ

LRDC-2 TAM

றேதா நினைக்காதீங்க!'' என்று சிணுங்கினாள்.

அருணகிரி குழம்பித் தவித்தான். அவளின் வேண்டுகோளை நிர்த்தாட்சிண்யமாக மறுத்துவிட்டுப் போய் விடவும் மனம் இடம் தரவில்லை. ''சரி, வாங்கம்மா!'' என்றவாறு கால்களை வீசிப் போட்டு நடந்தான்.

''அடேயங்கப்பா! இவ்வளவு விரைசா நடந்தா நான் எப்படி வருவேனும், பொம்பளை?'' என்று சிணுங்கிக் குலுங்கி நகைத்த நீலாம்பாள், நடைக்கு நூறு நொடி நொடித்தபடி அவனைப் பின் தொடர்ந்தாள்.

டாஸ்கர் டவுனைச் சார்ந்த பிளாக் பள்ளி வட்டாரம். ஒரு குறுகலான தெருவில் நடந்துகொண்டிருந்த நீலாம்பாள் சட்டென்று நின்றாள்.

''அதோ, அந்த விளக்குக் கம்பத்துக்குப் பக்கத்திலே சிமை ஓடு போட்ட லைன் ஒண்ணு தெரியுதே, அதில் கடைசி விடுதான் என்னது.''

தயங்கி நின்று அவ்வீட்டை நிமிர்ந்து பார்த்த அருணகிரி, ''அப்ப, இனிமேல் நீங்க போய் விடுவீங்க?'' என்றான் புன்முறுவலுடன்.

''நீங்க போறேங்கிறீங்களா? சரிதான்! இவ்வளவு தூரம் வந்து, என் விட்டுக்கு வராமப் போறதாவது! வாங்க தம்பீ!'' என்று ஒருவித கண்டிப்புடன் சொன்னாள் நீலாம்பாள்.

''வேண்டாம்மா! இன்னொரு நாள் வரேன்.''

''சும்மா வீம்பு பண்ணாதீங்க! இப்ப மணி என்ன தெரியுமா? ரெண்டு ஆகப் போகுது. இதுக்கு மேலே வீட்டுக்குப் போனால் உங்களுக்குச் சாப்பாடு இருக்குமா? அது இருந்தாலும் அக்கா, அத்தானை எழுப்பித் தொந்தரவு கொடுக்கணும். அதுக்குப் பயந்துக்கிட்டு வெறும் வயத்தோட படுத்தாலும் படுத்து விடுவீங்க. அப்புறம் இந்தப் பாவிப் பொம்பளையாலே பட்டினி கிடக்க வேண்டியதாய்ப் போச்சேன்னு என்னை மனசுக்குள்ளாற நிந்திப்பீங்க இல்லையா? அதெல்லாம் வேணும். பேசாமல் வந்து ஒரு பிடி சாப்பிட்டுவிட்டுப் போயிடுங்க. இண்ணைக்கு நான் நல்ல சமையல் பண்ணி வைச்சுட்டுத்தான் கிளம்பினேன்'' என்று பல்வேறு அபிநயங்களுடன் சொன்னாள் நீலாம்பாள்.

அருணகிரி தயங்கினான். ஆனாலும் அவள் சொன்ன காரணங்கள் சரியென்றே அவனுக்குப் பட்டன. இந்த நள்ளிரவு கடந்த நேரத்தில் வீட்டுக்குப் போய்க் கதவைத் தட்டி முத்தம்மாவை எழுப்ப வேண்டும். அவளுடைய குணம் இன்று எப்படி இருக்குமோ? தன் கணவனிடம் சண்டை போட்டுக் கொண்டிருந்தாளானால் அந்தக் கோபத்தை யெல்லாம் இவன் மீது திருப்பிவிட ஆரம்பிப்பாள். அதனால் அத்தான் ரத்தினவேலுவும் எரிச்சலடைவார். வீண் கலாட்டா நடக்கும். மேலும் இவன் இதுகாறும் ஒரு நாள் கூட இப்படி நேரம் கழித்துப் போனதில்லை. எனவே, இன்று நேரங்கடந்து வந்ததற்குக் காரணம் சொல்லியாக வேண்டும். சினிமாவுக்குப் போய் வந்த இந்தக் காரணத்தைச் சொன்னால் அதைத் தொடர்ந்து வேறு பல கேள்விகளும் பிறக்கும். அநாவசியச் சந்தேகங்கள் தலைதூக்கும். இவையெல்லாம் ஒருபுறமிருந்தாலும், இந்த நடுச்சாமத்துக்குப் பிறகுதான் அவள் — அந்த நிர்மலா — பார்க்க வருவதாகச் சொல்லி இருக்கிறாள். இப்போது போனால் எப்படியும் அவளைப் பார்த்தே ஆக வேண்டியிருக்கும். அதன் விளைவு?...


'' சத்தியமாச் சொல்றேன் சார்! அடுத்த மாசம் எனக்குக் கல்யாணம். கழுத்து அளவு பார்த்துத் தாலிக் கயிறுக்கு முடிச்சுப் போடப் பழகினேன்! அவ்வளவுதான் சார்!''

ஒரேயடியாக மனம் கலங்கியவனைத் திருதிருவென விழித்துக் கொண்டு நின்றான் அருணகிரி.

''ஒண்ணும் சங்கோசப்படாதீங்க, தம்பீ! இன்னுமா என்னை அந்நியம் மாதிரி நினைக்கிறீங்க? வாங்க, நடுத் தெருவிலே நிற்க வேணும்'' என்று கூறிக் கொண்டே முன்னால் நடந்தாள் நீலாம்பாள்.

மந்திரத்தால் மயக்கப்பட்டவன் போல் மறுபேச்சின்றி அவளைப் பின் தொடர்ந்தான் அருணகிரி.

அது ரொம்பச் சின்ன வீடு. முன்னால் ஓர் அறை. அதற்குப் பக்கத்தில் அடுப்பங்கரை. பின்னால் குறுகலான

ஒரு நீண்ட வராந்தா. அந்தப் பக்கமாக வும் தெருவுக்கு வர வழி இருந்தது.

கூச்சமும் திகிலுமாக வீட்டுக்குள் வந்து ஒதுங்கி நின்ருன் அருணகிரி.

''இந்தாங்க, தம்பி! முகம் கைகால் கழுவிக்கிட்டு வாங்க'' என்றவாறு ஒரு செம்பில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள் நீலாம்பாள்.

முகம் கழுவ வாசலுக்குப் போய்த் திரும்பி வந்தான்.

அருணகிரிக்கு அகோரமான பசி. காலையில் சாப்பிட்டவன்தானே? நீலாம்பாள் உடை மாற்றிக் கொண்டு வந்து அவனுக்குச் சாப்பிட இலை போட்டு விட்டிருந்தாள். அவன் இலைக்கு எதிரில் அமர்ந்தான். அவள் உணவு பரிமாறிஞள். கருவாட்டுக் குழம்பு, வேக வைத்த முட்டை, கோசுக் கீரை பொரியல், மிளகு ரசம் — வாய்க்கு வயணமாக இருக்கவே தன் வெட்கச் சுணக்கம் எல்லாவற்றையும் விட்டுச் சகஜமாகச் சாப்பிடலாஞன்.

''நானும் இப்படி உட்கார்ந்து சாப்பிடலாமில்லே 'தம்பீ ?'' என்று நாணக் குழைவுடன் கேட்டாள் நீலாம்பாள்.

''சாப்பிடுங்கம்மா! உங்களுக்கு மட்டும் பசிக்காதா என்ன?'' என்று சற்று உத்சாகத்துடன் அவசரத்துடன் கூறிஞன் அருணகிரி.

நீலாம்பாளும் தட்டத்தை வைத்துக் கொண்டு சாப்பிடத் தொடங்கிஞள்.

சுவைத்து உண்டு கொண்டிருந்த அருணகிரிக்குச் சட்டென்று ஓர் எண்ணம் தோன்றியது. 'ஆமாம்; இந்த அம்மாளுக்கு ஒரு மகள் இருப்பதாகச் சொன்ஞளே, அவள் எங்கே ? நான் வந்தது முதல் என் கண்ணிலேயே படவில்லையே ?' —

இதுபற்றி நீலாம்பாளிடம் கேட்கலாமா, வேண்டாமா என்று யோசித்தான். கேட்பதற்குத் தயக்கமாயிருந்தது. இரண்டொரு முறை துணிந்து கேட்க வாயும் திறந்து பிறகு பேசாமல் இருந்து விட்டான். 'சரி, கேட்டுத்தான் பார்க்கலாமே?' என்று தீர்மானித்தவஞய், ''ஏம்மா!... உங்க... உங்களுக்கு வந்து....'' என்று இழுத்து மேலே கேட்க வார்த்தைகள் கிடைக்காமல் தயங்கிஞன்.

நீலாம்பாள் மிகவும் கூர்ந்த மதி படைத்தவளாய் இருக்க வேண்டும். அவனுடைய கேள்வியை உடனே புரிந்து கொண்டவளாய், ''என்ன தம்பி, உன் பொண்ணு எங்கேன்னு கேட்கிறீங்களா?.... அந்தத் திம்மாக்குப் பொண்ணு தூங்குது. நாம் வரும் போதுகூட நல்ல தூக்கம். பட்டணம் பறி போஞலும் தெரியாது. எழுப்பிப் பார்த்தேன். எழுந்திருக்க மாட்டேங்கிறுள். எப்பவும் இப்படித்தான் விடியா மூஞ்சி.! தூங்கறதிலே கும்பகர்ணனுக்குத் தங்கச்சி !'' என்று எரிச்சலும் சலிப்புமாகப் பொரிந்து நிறுத்திஞள்.

அருணகிரிக்கு 'அந்தக் கேள்வியை ஏன் கேட்டோம்' என்று ஆகிவிட்டது. அவன் சாப்பிட்டு முடித்த சமயம், நீலாம்பாள் அவசரமாக எழுந்து உள்ளே போய் ஒரு கண்ணுடித் தம்ளரில் என்னவோ கொண்டு வந்து அவன் எதிரில் வைத்தாள்.

''என்னம்மா இது, தக்காளி ரசமா?''

''ரசம்தான்! எடுத்துக் குடியுங்க ; உடம்புக்கு நல்லது!'' என்று கூறிக் களுக்கென்று சிரித்தாள் நீலாம்பாள். பிறகு அவளும் சமையல் அறைக்குப் போய்ச் சில நிமிடங்களுக்குப் பின் திரும்பி வந்தாள்.

தக்காளி ரசம் என்ருல் அருணகிரிக்கு ரொம்பவும் பிடிக்கும். அதஞல் அவன் ஆவலோடு பருகத் தம்ளரை எடுத்து வாயருகே கொண்டு போஞன். மறுகணம் ஒரு வெகுட்டல் சிலிர்ப்புடன் பின்ஞல் தலையை இழுத்தபடி தம்ளரைக் கீழே வைத்து விட்டான்.

சுவரில் சாய்ந்தவாறு ஒய்யார ஒயிலுடன் நின்றிருந்த நீலாம்பாள் இதைக் கண்டு சின்னப் பெண்ணைப் போல் தலை குனிந்து வாயை முன்ருனையால் மூடிக் கொண்டு ஓசைப் படாமல் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள். அருணகிரியோ அலங்கமலங்க விழித்தபடி அவளை ஏறிட்டுப் பார்த்தான்.

''ஏனும்? இதெல்லாம் பழக்கமில்லையா?'' என்று அசிங்கமாகக் கண் சிமிட்டிக் கேலிக் குரலில் கேட்டாள் நீலாம்பாள்.

அந்தத் தம்ளரையும் அவளையும் திகிலுடன் மாறிமாறிப் பார்த்த அருணகிரி, ''இது... இது...'' என்று குழறிஞன்.

''ரொம்ப ஒஸ்தி! மூஞு கிரீடமார்க்கு — ரம்மு! உங்களுக்குன்னுதான் ஸ்பெஷலா வாங்கி வைச்சேன்; குளிருக்கு சம்முன்னு இருக்கும்!''

நீலாம்பாளா இப்படிச் சொல்கிருள்? அவனுடைய கண்கள் செருகிச் சுழன்றன. உதடுகள் துடிதுடித்துக் கோணின.

அருணகிரியின் உடல் நடுங்க ஆரம்பித்து விட்டது. அவன் மெல்ல எழுந்து நின்று, ''இல்லேம்மா! இதெல்லாம் எனக்குப் பழக்கமில்லே....'' என்று உளறிஞன்.

''அட, என்னய்யா நீ ஆம்பிளே?'' என்று கூறி அலட்சியமாக ஒரு சிரிப்புச் சிரித்தாள் நீலாம்பாள். (தொடரும்)

மனமகிழும் காலைப் புத்துணர்வு மணிக்கணக்கில் நிலைத்திருக்க...

குளித்த பிறகு பாண்ட்ஸ் ட்ரீம்ஃபிளவர் டால்க்! பாண்ட்ஸ் ட்ரீம்ஃபிளவர் டால்க்கின் நீங்காத நறுமணம்... ஈரத்தை இழுக்கும் தன்மை... நாள் முழுவதும் காலைப் புத்துணர்வின் சுகம். இவை யாவரையும் உங்களிடம் ஈர்க்கும்.

கோடையானாலும் இறுக்க மானாலும் நறுமணத்துடன் புதுமைப் பொலிவில், குளுமை உணர்வில் உங்களை திகழ வைக்கும். எக்காலத்துக்கும் ஏற்ற பாண்ட்ஸ் ட்ரீம்ஃபிளவர் டால்க். இந்தியாவிலேயே அதிக விற்பனையாகும் டால்க்.

மூன்று அளவுகளில் கிடைக்கிறது. ஃபாமிலி, பெரியது, மத்திமம்.




பாண்ட்ஸ்

ட்ரீம்ஃபிளவர் டால்க்

சொகுசான சுகமளிக்கும் மிருதுவான டால்க்

சீஸ்ப்ரோ பாண்ட்ஸ் இன்கார்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏயில் இணைக்கப்பட்டது)

P/5482



Sunsilk cares –
with 3 special shampoos

Pick the one that's perfect for you

Sunsilk Lemon Shampoo
For Greasy Hair: Gently washes out excess grease... gives you days of clean, bouncing, silken hair.

Sunsilk Tonic Shampoo
For Dry Hair: Contains Allantoin to nourish your hair...revives that silken lustre, leaves hair softly glowing.

Sunsilk Beauty Shampoo
For Normal Hair: Perfectly balanced to keep your hair in beautiful condition, weaving silk into every strand.



Sunsilk - more than a shampoo, a cosmetic for your hair

Quality Products by HINDUSTAN LEVER

LINTAS-SS. 11-140

மகாத்மா காந்தி 40 தமிழாக்கம்: ராஜாஜி

ஒரு சமயத்தைப் பிரசாரம் செய்ய வேண்டுமானால் அதற்கு ஒரு வழிதான் உண்டு. அந்தச் சமயத்தின்படி தன் வாழ்க்கையை நடத்தி அதன் மேன்மையைக் காட்டுவதே வழியாகும். வாய்மொழிப் பிரசாரம் எனக்குப் பிடிக்கவே இல்லை. சொற்பொழிவுகள் செய்யும் உபதேசிகளைக் கண்டால் எனக்கு எப்போதும் சந்தேகம். தங்கள் அறிவுக்கு எட்டின வகையில் சமயக் கொள்கைகளின்படி வாழ்க்கை நடத்துகிறவர்களை அவர்கள் எந்தச் சமயத்தினராயினும் நான் மிகவும் பாராட்டுவேன். மௌனமாகத் தங்கள் சமயங்களைப் பிரசாரம் செய்யும் இத்தகையவர்களை நான் வணங்குவேன். எளிய வாழ்க்கை நடத்தி ஏழைகளுக்கும் மற்றவர்களுக்கும் பணி செய்வதே உத்தமப் பிரசாரம். ஒரு மல்லிகைப் புஷ்பம் தன்னுடைய சுவாசனையைப் பற்றிப் பேசுவதில்லை. வாசனையை வீசி மௌனமாக இருக்கிறது. அதன் சுவாசனையே அதன் உபந்நியாசமாகும். ஆட்களை வைத்து உபதேசகர்களைச் சம்பளம் கொடுத்து அமைத்து யாராவது ஏற்பாடு செய்தாலும்மல்லிகைப் புஷ்பம் வாங்குபவர்களின் எண்ணிக்கை வளராது. அதன் வாசனையைக் கண்டு வாங்குபவர்கள்தான் வாங்குவார்கள். ஒரு சமயத்தில் பக்தி வைத்து வாழ்க்கை நடத்துகிறவனுடைய பரிமளமும் பூவின் மணத்தைப் போன்றதேயாகும். அது பூவின் மணத்தைப் போலவே வீசிப் பரவும். பூவின் மணத்தைக் காட்டிலும் அதிக வேகமாகவும் கூடப் பரவும். (ஹரிஜன் 29-3-35)

என்னுடைய மதத்தை நான் விட்டுவிட விரும்பவில்லை. அவ்வாறே ஒரு கிறிஸ்துவனையாவது முஸல்மானையாவது, பார்ஸி அல்லது யூதனையாவது அவனுடைய மதத்தை விட்டுவிட்டு என் மதத்தை ஏற்றுக் கொள்ளும்படி கேட்க மாட்டேன். அவரவர்கள் சமயத்தின்படி அந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்கள் நடப்பதில்லை. இந்தக் குறை ஹிந்துக்கள் உட்பட எல்லா மதத்தினரையும் பாதிக்கிறது. என் மதத்தைச் சேர்ந்தவர்களை என்னால் சீர்திருத்த முடியவில்லை. ஏன், என் மதத்தின்படி முற்றிலும் சரியாக நான் நடந்து கொள்வதே மிகச் சிரமமாக இருக்கிறது. இப்படியிருக்க நான் பிற மதத்தினர்களுக்கு உபதேசப் பிரசாரம் செய்ய முயல்வேனு? கனவிலும் எண்ணமாட்டேன். பிறர் குற்றம் கண்டு பிடிப்பதற்குமுன் ஒருவன் தன்னுடைய குற்றங்களைக் கண்டு மற்றவர்களைக் குறை சொல்லாமலிருக்க வேண்டும். என்னுடைய உறுதியான முடிவு என்னவென்றால், செல்வமும் செல்வாக்கும் படைத்த கிறிஸ்தவ சங்கங்கள் இந்தியாவுக்குச் சேவை செய்ய விரும்பினால் மதத்தை மாற்றும் கருத்தை விட்டுவிட்டு மக்களுக்கு வறு வழிகளில் பணி செய்து உதவ வேண்டும். படித்த மக்களையாவது அல்லது கிராமங்களிலுள்ள பாமரர்களையாவது கிறிஸ்தவர்களாக்க வேண்டும் என்ற நோக்கத்தை முற்றிலும் விட்டு விட்டு அவர்களுக்குப் பணி செய்ய வேண்டும். பழக்க வழக்கங்களில் எவ்வளவு குற்றம் குறைகள் இருந்த போதிலும் அவை இவ்வளவு காலமும் சமூகத்துக்குக் காப்பாக இருந்து வந்தன. பாதிரிமார்கள் என்ன விரும்பிய போதிலும் நாமே என்ன விரும்பிய போதிலும் ஹிந்து சமயத்தில் எது உண்மையோ அது நிற்கும். எது பொய்யோ அது கழிந்துவிடும். இதைப் பற்றிச் சந்தேகமில்லை. சமயங்கள் உயிர் கொண்டிருப்பதும் மறைந்து போவதும் அவற்றுள் இருக்கும் ஜீவ சக்தியைப் பொறுத்தது. (ஹரிஜன் 28-9-25)

என்னுடைய அபிப்பிராயத்தில் கிறிஸ்தவ மதத்தில் இருப்பது போல் ஹிந்து சமயக் கோட்பாடுகளில் மத மாற்றத்துக்கு இடம் கிடையாது. இஸ்லாம் மதத்தில் ஓரளவு இடம் உண்டு என்று சொல்லலாம். ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்கள் இந்த விஷயத்தில் கிறிஸ்தவக் கோட்பாட்டைப் புதிதாக அனுசரித்து வருகிறார்கள். கிறிஸ்தவர்களைப் பார்த்து நாமும் ஏன் இவ்வாறு செய்யலாகாது என்று ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இந்தப் புது முறை எனக்குப் பிடிக்கவில்லை. இதனால் நன்மை ஒன்றுமில்லை. தீமையே அதிகம். ஆன்மாவை ஒட்டியது மதக் கொள்கை. ஆண்டவனை அணுகும்வழி சமயம். அதை மறந்து லௌகிக லாபத்தை அனுசரித்து மத மாற்றங்கள் நடைபெறுகின்றன. ஹிந்து சம்பிரதாயத்தில் அடங்கியுள்ள தத்துவம், எல்லா மதங்களுமே உண்மை என்று போதிக்கிறது. எல்லா மதங்களுமே ஆண்டவனைப் போய்ச் சேரும் வழிகள். அவை எல்லாமே ஆண்டவன் காட்டிய வழிகள். ஆனால் மனிதனுடைய வாக்கின் வழியாக வந்த ஞானத்தில் மனிதனுடைய குறைகள் ஓரளவு கலந்து இருக்கின்றன. அவ்வளவே. நியாயமாக நடத்தவேண்டிய 'சுத்தி' இயக்கம், அவரவர் தத்தம் சமயாசாரங்களைத் திருத்திக் கொள்வதேயாகும். பிறருடைய சமயத்தைத் திருத்துவது அல்ல. தத்தம் குணங்களைத் திருத்திக் கொள்ள வேண்டும். ஓர் அறையை விட்டு இன்னோர் அறைக்குப் போவதில் என்ன பிரயோசனம்? என் மதத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் கடவுளை மறந்து நடந்து கொண்டிருக்கும்போது, மற்றவர்களை நான் எப்படித் திருத்த முடியும்? என் வியாதியை நான் தீர்த்துக்கொள்ள முடியவில்லை. மற்றவர்களிடம் சென்று, ''நான் வைத்தியன். உங்கள் வியாதியைத் தீர்ப்பேன்'' என்று சொன்னால் அது செல்லுமா? செல்லாது. சரீர வியாதி விஷயத்தில் செல்லாதது ஆன்ம விஷயத்தில் செல்லுமா?

(யங் இந்தியா 29-5-24)



நிகர லாபம்



எஸ். வைத்யநாதன்

அழகான குடும்பக் கதைகளைப் படைத்துத் தமிழ் இலக்கிய உலகில் தமக்கென்று ஓர் இடத்தைத் தேடிக்கொண்டவர் திருப்பாதிரிப்புலியூரைச் சேர்ந்த ஸ்ரீ எஸ். வைத்தியநாதன். இசைப் பயிற்சி அளித்தும், எழுத்துத் தொழில் மேற்கொண்டும் குடும்பத்தை நடத்தி வந்தவர் இம்மாதம் இறைவனடி சேர்ந்துவிட்டார். இகவாழ்க்கைக்குத் தம் குடும்பத்துக்கென்று எதுவுமே சேர்த்து வைக்காமல். அவர் அண்மையில் எழுதிய கதை ஒன்றை வெளியிட்டுக் 'கல்கி' குடும்பம் மறைந்த சிறுகதை ஆசிரியருக்கு அஞ்சலியும் அவர் குடும்பத்துக்கு ஆழ்ந்த அநுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகிறது.

- ஆசிரியர்

தெருவில் ''வெள்ளரிப்பிஞ்சு, வெள்ளரிப் பிஞ்சு!'' என்று கூடைக்காரியின் குரல் கேட்டது. அருணகிரிக்கு உடனே முதல் நாள் பார்த்த சினிமாவின் ஞாபகம் வந்தது. குடுகுடு என்று வாசலுக்கு ஓடினான்.

''ஏ, வெள்ளரிப் பிஞ்சு! இங்கே கொண்டு வா!'' என்று குரல் கொடுத்தான்!

வெள்ளரிப் பிஞ்சுக்காரி வந்து கூடையை இறக்கினாள். சின்னதாக நாலு பிஞ்சுகளை எடுத்து ''என்ன விலை?'' என்று கேட்டான் அருணகிரி.

''நாற்பது பைஸா!'' என்றாள் அவள், கால் ரூபாய்கூடப் பெறாத அந்தப் பிஞ்சுகளுக்கு.

பேரம் பேசாமல் அவைகளை உள்ளே எடுத்துக் கொண்டு போய் விட்டான் அவன்.

அவனுக்கிருந்த உற்சாகத்திலும், உள்ளக் கிளர்ச்சியிலும் அவள் ஒரு ரூபாய் கேட்டிருந்தாலும் மறுக்காமல் கொடுத்திருப்பான்!

காசைக் கொடுத்துக் கூடைக்காரியை அனுப்பிய பிறகு களி துள்ளும் குரலில், ''கருணா! கருணா!'' என்று மனைவியை அழைத்தவாறு சமையலறைக்கு விரைந்தான்.

''என்ன, ஒரேயடியாக ஆனந்தம் பொங்குகிறது?'' என்று கேட்டாள் கருணா. அவன் உற்சாகத்தையும் முக மலர்ச்சியையும் கண்ணுற்று.

''இதோ பார்த்தாயா?'' என்று வெள்ளரிப் பிஞ்சுகளைக் காட்டினான் அருணகிரி.

''வெள்ளரிப் பிஞ்சு வாங்கினால் இவ்வளவு சந்தோஷம் பொங்கணுமா, என்ன?''

அதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், ''இந்தா, உனக்கு இரண்டு, எனக்கு இரண்டு'' என்று அவைகளை அவளிடம் கொடுத்தான்.

''சரி, அப்புறமாகத் தின்போம். நீங்கள் முதலில் சாப்பிட வாருங்கள். மணி பதினொன்றாகிறது!'' என்று நகர்ந்தாள் கருணா.

''இரு!'' என்றான் அவன்.

அவள் நின்றாள்.

''இப்பவே வெள்ளரிப் பிஞ்சைத் தின்று விடுவோம். தின்று விட்டுச் சாப்பிடலாம்!''

''சரி, தின்கிறேன். நீங்கள் முதலில் தின்னுங்கள்!'' என்று மீண்டும் பிஞ்சுகளை நீட்டினாள்.

அவன் வாங்கிக் கொள்ளவில்லை. ''முதலில் நீ தின்று விட்டுக் கொடு. அப்புறம் நான் தின்கிறேன்!'' என்றான்.

''எதற்காக இந்த வீண் பிடிவாதம்?... நீங்கள் தின்னாமல் முதலில் நான் தின்பதா?''

''ஆம், நீதான் முதலில் தின்னவேண்டும்.''

''சொன்னால் கேட்க மாட்டீர்கள்.... சரி, நானே முதலில் தின்கிறேன். இந்தாருங்கள், உங்கள் வெள்ளரிப் பிஞ்சுகள்!''

''நான் சொல்வதைப் புரிந்து கொள்ளவே இல்லையே நீ... நாலு பிஞ்சுகளையும் நீயே வைத்துக் கொள்ளணும், ஒரு பிஞ்சைக் கடித்துப் பாதி தின்று விட்டு என்னிடம் தரணும். அதை நான் தின்பேன். நீ அதற்குள் இன்னொரு பிஞ்சைப் பாதி கடித்துத் தின்றுவிட்டுத் தரணும். இப்படியே நாலு பிஞ்சையும் பாதிப் பாதி நீ தின்றுவிட்டுத் தர அவைகளை நான் தின்பேன்.......

கருணா அதிர்ச்சியுடன் ''நன்றாய்த்தான் இருக்கிறது. நான் கடித்து எச்சில்படுத்தியதை நீங்கள் தின்பதா?'' என்றாள்.

''பைத்தியம் மாதிரி உளறாதே! புருஷன் பெண்சாதிக்குள் எச்சிலாவது தீட்டாவது! அதெல்லாம் ஒன்றும் கிடையாது!''

''ரொம்ப அழகாயிருக்கிறது உங்கள் உபதேசம்! உங்கள் எச்சிலை நான் சாப்பிடலாம். ஆனால் என் எச்சிலை நீங்கள் சாப்பிடுவது பாவம், தோஷம்!''

''கிளிப் பிள்ளையைப் போல் சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கிறாயே!...''

நேற்று சினிமாவில் பார்த்தோமே, சிருங்கார சக்கரவர்த்தி ஜடாமுனி சபேசனும், கவர்ச்சிக் குமாரி கல்பலதா தேவியும் எவ்வளவு ஜோராகக் காதல் காட்சியில் நடிக்கிறாங்க! அவள் எவ்வளவு ஒயிலாக வெள்ளரிப் பிஞ்சுகளைக் கடித்துக் கடித்து அவனிடம் கொடுக்கிறாள்! அவன் எவ்வளவு மகிழ்ச்சியுடன் அவைகளைத் தின்கிறான்! தம்பதிகள் எப்படியெல்லாம் காதல் லீலை செய்து இன்பத்தை அநுபவிக்கணும் என்பதை எவ்வளவு விளக்கமாகக் காட்டறாங்க. அதைப் பார்த்துக்கூட நீ தெரிந்து கொள்ளவில்லையா?''

''அட கடவுளே! அந்தக் கர்மகாண்டத்தைப் பார்த்து விட்டுத்தான் இப்படி ஓர் ஆசை உண்டாகி யிருக்கிறதா உங்களுக்கு! அந்தக் கல்பலதாவோ கன்றுளி லதாவோ அந்த ஜடாமுனி சபேசனுக்கு அக்கினி சாட்சியாக வாழ்க்கைப்பட்ட மனைவியா? அவளுக்கு என்ன வந்தது! படாதிபதியும் டைரக்டரும் என்ன செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டாலும் செய்கிறாள்! அந்த ஜடாமுனியோ ஆயிரக்கணக்கில் வாங்கியிருக்கும் பணத்தை எண்ணி அது போன்ற காட்சியில் நடிக்க ஒப்புக் கொள்கிறான். அவன் உண்மையாகவே எச்சிலைச் சாப்பிட்டான் என்று என்ன நிச்சயம்? அவள் கடித்த வெள்ளரியை அவன் வாங்கிக் கொண்டதும் காமிரா இயக்கத்தை நிறுத்தி விடுவார்கள். மீண்டும், கத்தியால் நறுக்கப்பட்ட வேறு வெள்ளரியை இவள் வாயில் போட்டுக் கொள்ளும் போது காமிராவை இயக்குவார்கள். சினிமாவில் காதலர்கள் பண்ணுவதையெல்லாம் நாமும் செய்யணுமா? அவர்கள் அடிக்கும் கூத்தையெல்லாம் நாமும் அடிக்கணுமா? கணவனைத் தெய்வமாகக் கருதும் குடும்பப் பெண்கள் அந்தத் தெய்வத்துக்கு எச்சிலைப் படைக்க மனம் ஒப்புவார்களா? வேண்டுமானால் நீங்கள் கடித்துத் தின்றுவிட்டுக் கொடுங்கள். நான் மகிழ்ச்சியுடன் தின்கிறேன்!''

அருணகிரி அதை விரும்ப வில்லை. சினிமாக் கதாநாயகன் செய்தது போலவே செய்து அந்தப் பேரின்பத்தை நுகர வேண்டும், நுகர்ந்தே தீர வேண்டும் என்ற வேட்கை வெறி கொண்டிருந்தான். தான் சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லித் தன் விருப்பத்தை நிறைவேற்றும்படி அவளை வற்புறுத்தினான்.

அடக்கமும், ஆசாரமும், பழைய மரபுகளில் பற்றும், எச்சில், தீட்டு போன்றவைகளில் அருவருப்பும் கொண்ட ஒரு குடும்பத்தில் பிறந்த பெண் கருணை. அந்தப் பண்புகள் அவள் இரத்தத்தில் ஊறியிருந்தன. எனவே, தான் எச்சில் படுத்தியதைக் கணவன் புசிப்பது—தான் அதற்கு உடன்படுவது—மாபெரும் பாவம் என்று எண்ணினாள். கணவன் எவ்வளவு வற்புறுத்தியும் அவள் தன் அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள மறுத்துவிட்டாள்.

கடைசியில் அருணகிரி எரிச்சலுடன், ''நான் சொல்வதைக் கேட்க மாட்டாயா நீ; அவ்வளவு அடமா உனக்கு?'' என்று இறுதி எச்சரிக்கை விடும் குரலில் கேட்டான்.

''நான் சொல்வதில் உள்ள நியாயம் உங்களுக்குப் புரியவில்லையா? நீங்கள் சொன்னதை என்றைக்காவது தட்டியிருக்கிறேனா நான்? தயவுசெய்து இந்தக் காரியத்தைச் செய்யும்படி மட்டும் என்னை நிர்ப்பந்திக்காதீர்கள்!''

''சரி!'' என்ற உறுமலுடன் சிறுவாணம் போல் அங்கிருந்து அகன்ற அருணகிரி தன் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டான்; செருப்பைப் போட்டுக் கொண்டான். அசாத்திய வேகத்துடன் வெளியே நடந்தான்.

'வயசு இருபது முடியவில்லை! கல்யாணமாகி இன்னும் ஒரு வருஷம் பூர்த்தியாகவில்லை! எச்சிலாம், தீட்டாம், என்னமோ எழுபது வயசுப் பாட்டி போல் ஆசாரம் கொட்டுகிறாள்! சுத்த ஜடம், பதினெட்டாம் நூற்றாண்டில் பிறந்திருக்க வேண்டிய கர்நாடகம்! இன்பமும், குதூகலமுமாகத் தாம்பத்திய வாழ்க்கையை அநுபவிக்க வேண்டும் என்ற ஆசை இல்லாத, உணர்ச்சியற்ற வறட்டு ஜன்மம்! பெண் உருவில் இருக்கும் மரக் கட்டை!' என்று ஆத்திரத்துடன் மானசிகமாகக் கருணையை இகழ்ந்தவாறே விடுவிடுவென்று- ஏதோ நடைப் போட்டியில் கலந்து கொண்டிருப்பவன் போல் நடந்து திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையை அடைந்தான். அந்த ரோட்டிலிருந்து பிரியும் ஒரு தெருவில்தான் அவன் வீடு இருந்தது.

ஹைரோட்டில் விரைவாகத் தெற்கு நோக்கி நடக்கத் தொடங்கினான் அருணகிரி. ஸ்டார் டாக்கீஸைக் கடந்து விட்டான்; அவன் சினம் குறையவில்லை. போஸ்ட் ஆபீஸ் இருந்த இடத்தைத் தாண்டிவிட்டான்; அவன் நடையின் வேகம் குறையவில்லை.

பைகிராப்ட்ஸ் ரோட் நாற்சந்திக்கு வந்து சேர்ந்தவன், விடாமல் தன் யாத்திரையைத் தொடர்ந்தான். அவன் இலக்கு எது? எங்கே போகிறான் அவன்? அவனுக்கே தெரியாது! கால்கள் சென்றன; அவற்றின் வழியே அவன் உடலும் சென்று கொண்டிருந்தது! அவ்வளவுதான்!

ஐஸ் ஹவுஸ் ரோட்டை நெருங்கிவிட்டான் அவன். அங்கே ஒரு பிரும்மாண்டமான



சினிமா சுவரொட்டி: நேற்று அவன் பார்த்த சினிமாவின் போஸ்டர்தான். அந்தச் சுவரொட்டியில் ஜடாமுனியும், கல்பலதாவும் வெள்ளரிப் பிஞ்சு இன்னும் கோலத்தில் காட்சியளித்துக் கொண்டிருந்தார்கள் !

அதைக் கண்டதும் அருணகிரியின் உள்ளத்தில் உணர்ச்சிகள் கொந்தளித்தன. 'ஆஹா, எத்தகைய இன்பக் கிளுகிளுப்பை உண்டாக்கும் காட்சி! அந்த இன்பக் கிளுகிளுப்பை நாம் சொந்தமாக அநுபவித்து மகிழ்வதற்கு ஒத்துழைக்க மாட்டேன் என்று மறுத்துவிட்டதே இந்தப் பத்தாம் பசலிச் சனியன்' என்று உள்ளம் குமுறினான். அதன்விளைவாகக் கருணைமீது அவன் கொண்டிருந்த சீற்றம் பன்மடங்கு கொழுந்து விட்டெரிய, 'தரித்திரம், உணர்ச்சியற்ற ஜடம்! தெரியாத்தனமாக அதைக் கட்டிக் கொண்டு விட்டேன்!.... அதனால் என்ன! அந்தத் தவற்றைத் திருத்திக் கொண்டு விட்டால் போகிறது. இனி அதன் சங்காத்தமே எனக்கு வேண்டாம்....' என்று வாய்விட்டே கூறிக் கொண்டு இன்னும் வேகமாக நடக்கலானான்.

ஹாமில்டன் வாராவதியைக் கடந்தும் அவன் நடையின் வேகம் குறையவில்லை.

அவன் சினம் மயிலாப்பூருக்கு அவனைக் கொண்டு வந்து விட்டது !

மேற்கொண்டு எங்கே போவது ? அதைப் பற்றிச் சிந்திக்கவில்லை அவன். நடந்தான், மேலும் நடந்தான்.

கச்சேரி ரோட்டை அடைந்து மேற்குத் திசையில் நடந்தான். வெங்கட்ரமணா ஆஸ்பத்திரிக்கு அருகே நடைபாதையில் ஒரு கிழவி வெள்ளரிப் பிஞ்சுகளை வைத்துக் கொண்டு. ''படு பிஞ்சு சாமி! வட்டு கணக்காயிருக்கும். வாங்கித் துண்ணு பாரு'' என்று அவனை அழைத்தாள்.

வெள்ளரிப் பிஞ்சும் கிழவியின் அழைப்பும் அவன் சினத் தீக்குப் பெட்ரோல் வார்த்தன.

''உன் வெள்ளரிப் பிஞ்சையும் அந்தக் கருணை ஜடத்தையும் ஒரே கட்டையில் வைத்துக் கொளுத்து'' என்று சம்பந்தா சம்பந்தமின்றி உறுமிவிட்டு நடையை முடுக்கினான்.

'பைத்தியம் போலிருக்கு. நல்ல வேளை பேசாமப் போச்சே' என்று எண்ணி மகிழ்ந்தாள் கிழவி.

லஸ் முனையை அடைந்த நம் வெள்ளரிப் பிஞ்சு லீலாவிநோதன் அங்கேயிருக்கும் ஹோட்டல் வாசலில் தன் நண்பன் ஒருவனைக் கண்ணுற்று அவன் தன்னைப் பார்ப்பதற்குள் விரைவாகத் தென் திசையில் திரும்பி நடந்தான்.

நண்பனிடம் மாட்டிக் கொண்டால் 'இந்த நேரத்தில் இங்கே எங்கே வந்தாய்?' என்று ஆயிரம் கேள்விகள் கேட்பான். உண்மையை, நடந்த வெட்கக்கேட்டை அவனிடம் சொல்ல முடியுமா? பொய் சொல்வதற்கும் அருணகிரிக்குத் திறமை போதாது. அசட்டுத்தனமாக ஏதாவது உளறிவிட்டுச் சிநேகிதனிடம் மாட்டிக் கொண்டு விழிக்கும்படிதானிருக்கும். ஆகவே, அவன் பார்ப்பதற்கு முன்னேயே நழுவிவிடுவது உத்தமம்அல்லவா?

தென் திசையில் ஓட்டம் பிடித்த அருணகிரி கிழக்கே திரும்பி, வடக்கு மாட வீதியை அடைந்து குளக்கரையண்டை வந்து சேர்ந்தான்.

அங்கே ஒரு தள்ளு வண்டிக்காரன் கியாஸ் அடுப்பில் வேர்க்கடலையை வறுத்துச் சுடச் சுட வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்தான். அந்த மணம் அருணகிரியின் மூக்கைத் தாக்கியது. அடுத்த கணம் அவன் வயிற்றைக் கிள்ளத் தொடங்கியது. அப்புறந்தான் தனக்குப் பசிக்கிறது, பசிக்க ஆரம்பித்து வெகு நேரமாகிறது என்பதை அவன் உணர்ந்தான். அடுத்தாற்போல் ஒரு தள்ளு வண்டிக்காரன், பல பாட்டில்களில் விதம் விதமான கலர்களில் ஷர்பத் வைத்துக் கொண்டு ஐஸ் கலந்து கோரியவர்களுக்குக் கிளாஸ் டம்ளர்களில் வழங்கி (காசுக்குத்தான்) அந்த உக்கிரமான வெயில் காரணமாக ஏற்பட்டிருந்த அவர்கள் தாகவிடாயைத் தீர்த்துக் கொண்டிருந்தான்.

அந்தக் காட்சி, தன் நா வறண்டு, தொண்டை காய்ந்து தண்ணீருக்காகத் தவித்துக்கொண்டிருக்கிறது என்பதை அருணகிரிக்கு நினைவூட்டியது.

'ஒரு பதினைந்து பைசாவுக்கு வேர்க்கடலை வாங்கித் தின்றுவிட்டு, ஒரு டம்ளர் ஷர்பத் வாங்கிப் பருகுவோம், பசி தாகங்களைச் சிறிதாவது சமனப்படுத்திக் கொள்வோம்' என்ற எண்ணத்துடன் சட்டைப் பையில் கைவிட்ட அவனுக்குப் பகீர் என்றது !

சட்டைப் பையில் பைசா ஏது?

சின மிகுதியில் கோட் ஸ்டாண்டிலிருந்த சட்டையை மாட்டிக் கொண்டு சூறாவளியாகக் கிளம்பிய அவன், மணிபர்ஸையோ, வேறு சில்லறையோ எடுத்துச் சொக்காய்ப் பையில் போட்டுக் கொள்ள வில்லை ! எனவே, பை காலி! அட கபாலீசுவரா! இப்போது என்ன செய்ய ! ஷர்பத்காரன் பானையில் வைத்திருக்கும் தண்ணீரில் ஒரு டம்ளர் கேட்டு வாங்கிக் குடிக்கலாமா?

சேச்சே, என்ன கேவலம்! வெள்ளைவேட்டியும் சட்டையும் அணிந்து, காலில் சிங்கப்பூர் உசத்திச் செருப்பையும் போட்டுக் கொண்டு, வெறும் தண்ணீரை ஓசியில் வாங்கிக் குடித்தால் ஷர்பத்காரன் எவ்வளவு மட்டமாக எண்ணி விடுவான் !

பின்னே என்னதான் பண்ணுவது ! யாராவது தெரிந்தவர்கள், நண்பர்கள், வருவார்களா? வந்தால் அவர்களிடமாவது ஒன்று, இரண்டு கடன் வாங்கி ஹோட்டலுக்காவது போய்ச் சாப்பிடலாம்! ஆனால் அவர்கள் ஏதாவது குறுக்குக் கேள்வி கேட்க ஆரம்பித்தால் அவர்களுக்கு என்ன பதிலைச் சொல்வது ! ஒன்றும் புரியாமல் குழம்பும் உள்ளத்துடன், அகாதமாகப் பசிக்கும் வயிற்றுடன், தாகத்தால் துடிக்கும் நாவுடன், அவன் யதேச்சையாகத் திரும்பியபோது, சற்றுத் தூரத்தில் வாடி வதங்கிய ரோஜாவாக, கன்றிக் கருகிய மாங்கனியாக, முகத்திலும் உடலிலும் வேர்வை ஆறாகப் பெருகி வழிய, கண்கள் பஞ்சடைந்து பரிதாபமாகக் காட்சியளிக்க, எல்லையற்ற சோர்வும் களைப்புமாகத் தேகம் தள்ளாட, 'கொதிக்கும் பூமியை ஸ்பரிசிக்க முடியாமல் கால்கள் தடுமாற, எந்தக் கணமும் சுருண்டு கீழே விழுந்துவி ⌋

லாம் என்ற நிலையில், கருணா வந்துகொண்டிருந்தாள் !

அவளை — அவளுடைய பரிதாபகரமான, உள்ளத்தைப் பிழிந்தெடுக்கும் தோற்றத்தைக் கண்ணுற்ற அருணகிரி எல்லையற்ற அதிர்ச்சிக்குள்ளாகி ஸ்தம்பமாக நின்றான். அவன் துளிக்கூட எதிர்பார்க்காத — எதிர்பார்க்க முடியாத — காட்சியல்லவா அது !

அவனை நெருக்கி வந்தாள் கருணா ! அவள் கண்கள் பனித்தன. ஏதோ சொல்ல முயன்றாள். ஆனால் பேச முடியாமல் விம்மல்கள் தடை செய்தன.

அருணகிரி அதிர்ச்சியை உதறிவிட்டு, "நீ எங்கே வந்தாய், இங்கே? எப்படி வந்தாய் ?" என்று கேட்டான்.

"நீங்கள் பட்டினியுடன், சாப்பிடாமல் கோபித்துக் கொண்டு வந்து விட்டதைப் பார்த்துக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்க முடியுமா நான்? மனசு கேட்குமா? மன்னிப்பு கேட்டுக் கொண்டு உங்களைத் திருப்பி அழைத்துக்கொண்டு போவதற்காக உங்கள் பின்னாலேயே நானும் ஓடி வந்தேன். நீங்கள் ரொம்ப வேகமாக நடந்தீர்கள். உங்களைப் பிடிக்க முடியவில்லை. நடுத் தெருவில் கத்திக் கூப்பிடுவதற்கு லஜ்ஜையாயிருந்தது. ஆகையால் ஓட்டமும் நடையுமாக உங்கள் பின்னாடியே வந்தேன். இங்கே வந்துதான் பிடிக்க முடிந்தது !" என்றாள் கருணா கண்ணீரினூடே, மூச்சு இரைக்க.

அருணகிரியின நெஞ்சு ஒரேயடியாக நெகிழ்ந்து விட்டது.

அவளுக்குத்தான் தன்னிடம் எவ்வளவு பாசம், பக்தி ! கணவன் சாப்பிடாமல் போய் விட்டானே என்ற வேதனையில் தன் பசியையும் பொருட்படுத்தாமல், இந்தக் கொதிக்கும் நடுப் பகல் வெய்யிலில் காலில் செருப்புக்கூட இல்லாமல், அவன் பின்னால் மூன்று மைல் ஓடி வந்து தாங்க முடியாத சித்திரவதைக்குத் தன்னை ஆளாக்கிக் கொண்டிருக்கிறாளே ! இதில் அவள் ஐந்து மாதக் கர்ப்பிணி வேறு! அவளை இப்படி வாட்டி வதைத்த பாவம் அவனையல்லவா சேரும் ! அவள் ஒன்றுமில்லாத விஷயத்துக்கு அசட்டுத்தனமாக, துர்வாஸரைப் போல் கோபித்துக் கொண்டு ஓடி வந்திராவிட்டால் அவள் இந்தக் கொடுமையை அநுபவிக்க நேர்ந்திருக்குமா? நான் எத்தகைய முட்டாள் ! பூப்போன்ற உன்னை எப்படி வாட்டி வதக்கிப் பொசுங்கச் செய்து விட்டேன்! என் கடும் விரோதிக்குக்கூடக் கொடுக்க மனம் துணியாத தண்டனையை அல்லவா உனக்குக் கொடுத்து விட்டேன் ! எல்லாம் என் முட்டாள்தனத்தால் ஏற்பட்ட கோபத்தின் விளைவல்லவா ?" என்று அரற்றினான்.

"உங்கள் மேல் ஒரு தப்பும் இல்லை. எல்லாம் என்னால் வந்ததுதானே!.... மனைவி எச்சிலைக் கணவன் சாப்பிட்டால் அவனுக்கு ஆயுசு குறையும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதனால்தான் மறுத்தேன். உங்களைப் பட்டினி போட்டு இப்படி வெய்யிலில் அலைய வைக்க நேரும் என்று தெரிந்திருந்தால் ஒரு கெடுதலும் ஏற்படாதிருக்க அருள வேணும்என்று கடவுளை வேண்டிக் கொண்



"என் பிறந்தநாள் விழாவன்று ஏ. ஸி. கார் பரிசளிப்பதாக இருந்தீர்களே ?"

"ஏ. ஸி. கார் ஓ. ஸி.யில் கிடைக்கவில்லையே ?"

டாவது உங்கள் கட்டளையை நிறைவேற்றி யிருப்பேன்! இப்போதுதான் என்ன ! வீட்டுக்குப் போனதும் உங்கள் விருப்பப்படியே...."

"வேண்டவே வேண்டாம்! என் அசட்டு ஆசையால் விளைந்த விபரீதம் மூணு ஜென்மத்துக்கும் போதும்!" என்ற அருணகிரி, தற்செயலாக அந்தப் பக்கம் வந்த டாக்ஸி ஒன்றைக் கையைக் காட்டி நிறுத்தி, "வா, போவோம் ! ஜடாமுனி — கல்பலதாவாக நாமும் ஆகணும் என்று நான் விரும்பியதன் நிகர லாபம் பட்டினி, கோடை நடுப் பகல் வெய்யிலில் மூணு மைல் நடைப் போட்டி, டாக்ஸி சார்ஜ் தண்டம், இவைதான்!" என்றான்.

வீட்டு வாசலில் கருணாவின் அப்பா நின்று கொண்டிருந்தார். "வாங்கோ மாப்பிள்ளை!" என்று வரவேற்ற அவர், "சென்னையிலே ஒரு அவசர வேலை இருந்தது. பஸ் பிடித்து வந்து சேர்ந்தேன். வெறுங் கையோடு வரவேண்டாம் என்று கொஞ்சம் வெள்ளரிப் பிஞ்சு வாங்கிண்டு வந்தேன். வேறு எதையும் பார்த்து வாங்க அவகாசம் இல்லை. இதை பஸ் ஸ்டாண்டிலேயே வித்துண்டிருந்தான்" என்று கூறியபடியே ஒரு கூடை வெள்ளரிப் பிஞ்சை அருணகிரியிடம் நீட்டினார்.

பெண்ணும் மாப்பிள்ளையும் தாம் சொல்வதை முழுதும் கேளாமலேயே எதற்குஇப்படி விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள் என்று அவருக்குப் புரியவில்லை. திருதிரு வென்று விழித்தார் அவர்.

சிரிப்பு ஓய்ந்ததும் கருணா இடுப்பிலிருந்து சாவியை எடுத்து வாசற் கதவைத் திறந்தாள். கூடையிலிருந்து ஒரு வெள்ளரிப் பிஞ்சை எடுத்து வெடுக்கென்று கடித்துவிட்டு அருணகிரியைப் பார்த்துக் கண் சிமிட்டி விட்டு உள்ளே ஓடினாள்.

அருணகிரி மறுபடியும் விலாவைப் பிடித்துக் கொண்டு சிரிக்க ஆரம்பித்தான்.

மாமனார் சிரிப்பின் பொருள் புரியாமல் தலையைச் சொறிந்து கொண்டு நின்றார்!

கழுதைப் புலி

பட்டாஸ்



முதுகில் ஓர் அறை விழுந்த பிறகுதான் திரும்பிப் பார்த்தேன். அடித்தவன் பஞ்சாட்சரம். எனது பழைய கல்லூரி நண்பனான அதே 'பல்புக் கண்' பஞ்சுதான். பார்த்து எத்தனை காலமாயிற்று !

''டேய், நீயா!...''

''அட ஃபூல்! இந்தப் பத்து நாட்களாக உன்னைத்தானே தேடிக்கிட் டிருக்கேன்! வாடா, லக்கி சாப் !'' என்று கையைப் பிடித்து இழுத்தான் பஞ்சு.

'இன்றைக்காவது ஒழுங்காக வீடு திரும்பி' என்று எச்சரித்த என் மந்திரிணியின் கடுகு வெடிக்கும் கனையான முகம் என் அகக் கண்ணெதிரே தோன்றவும், ''உன் விலாசத்தைக் கொடடா பஞ்சு. இன்னொரு நாள் சாவகாசமாக...'' என்று அவனது கொக்கிப் பிடியிலிருந்து நழுவப் பார்த்த என்னை அவன் விட்டால் தானே? பிக்பாக்கெட்காரனைப் போலீஸ்காரர் இழுப்பதுபோல் இழுத்தான்.

அவன் வீடு அருகில்தான். தனி மாடி வீடு. வாடகை இருநூறோ முந்நூறோ இருக்கலாம். வாசலில் தோட்டக்காரன், உள்ளே சோபா செட், ரேடியோகிராம், ஃப்ரிஜ், ரத்தினக் கம்பள விரிப்பு என்று ஒரே அமர்க்களமாக இருந்தது. பயல் வசதியாகத்தான் இருக்கிறான் !....

''ஏய் பத்து! (நான்தான் அது) இப்படி உட்கார். என்ன சாப்பிடுகிறாய்?...''

அவன் கேட்ட கேள்வி என் காதில் விழவில்லை. ஹாலை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தேன். அத்தனை பெரிய வீட்டில் அவனையும் வேலைக்காரனையும் தவிர வேறு ஈ காக்கை இல்லை!

'' ஏண்டா பஞ்சு ! நீ தனிக் காட்டு ராஜாவா?''

அவன் கடகடவென்று சிரித்தான். வாசலிலிருந்த தோட்டக்காரன் மெதுவாக உள்ளே தலை நீட்டினான்.

''ஸாரு, அம்மா வந்து...''

பஞ்சு அல்ஸேஷியன் நாய் போல் எகிறி விழுந்து அவனைப் பிடுங்கப் போனான்.

''ப்ளடி ஸ்வைன்! மரியாதையா வராந்தாவிலே உட்கார்! கூப்பிட்டாலொழிய உள்ளே மூக்கை நீட்டற வேலை வச்சுக்காதே, தெரிஞ்சுதா?... சாயந்திரம் லேடீஸ் கிளப் ஆண்டு விழா, திரும்பி வர ராத்திரி எட்டாகும்னு காலம்பற அம்மா சொல்றப்போ நீயும்தானே ஒட்டுக் கேட்டுக்கிட்டிருந்தே! இப்ப அரிச்சந்திர மகாராஜா மாதிரி அதே விஷயத்தை என்கிட்டே அளக்க வர்றியா? ரெண்டு வச்சேன்னா சரி!''

வேலைக்காரன் காற்றாய்ப் பறந்துவிட்டான்.

எதிரே சுவரில் தொங்கிக் கொண்டிருந்த புகைப்படத்திலிருந்து அவனும் அவனது அவளும் என்னைப் பார்த்துச் சிரித்தனர்.

''ஏய், கொஞ்சம் இருடா பத்து! காப்பி கொண்டுவருகிறேன்; சாப்பிட்டுக்கொண்டே பேசலாம்'' என்று உள்ளே ஓடினான் பஞ்சு. ஓசிக் காப்பி என்றால் எனக்கு உயிர். நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு நான் கூடத்திலிருந்த மாடிப் படிகளை எண்ணிக்கொண்டிருக்கையிலேயே அவன் வெறுங் கையோடு திரும்பி வந்தான். காதுக்கெட்டின காப்பி வாய்க்கெட்டவில்லையே என்று எனக்கு ஒரே ஏமாற்றம்.

''அந்த அறிவு கெட்ட கழுதை காப்பிகூட வைக்காமல் போயிட்டுதுடா!'' என்று தன் மனைவியின் பரம்பரையை வர்ணித்தான் அவன்.

''ஸாரு...''

வேலைக்காரன் பாய்ந்தான்.

பஞ்சு பாய்ந்தான். ''டேய் அதிகப்பிரசங்கி, ரோக்!''

அந்த 'ரோக்' கேட்டுக்கு வெளியே ஓடி விட்டான்.

''இந்த ஃப்ராட் இருக்கானே பத்து...'' என்று அவன் ஆரம்பித்ததை என்னால் ரசிக்க முடியவில்லை. காப்பி கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் எனக்கு.

''கிடக்கட்டும் விடுடா பஞ்சு. முதல்லே கிளப்புக்குப் போய் ஸ்ட்ராங்கா ஒரு கப்...''

''சேச்சேச்சே! உன்னை வச்சுண்டு கிளப்புக்குப் போகிறதாவது? மறந்துட்டியா ?

கல்லூரி பிக்னிக்குன்னு நம்ப குருப்புக்கு நீதானேடா ஹெட் குக்கு?''

''தட் இஸ், அப்ஸல்யூட்லி ராங்!''

''அட சரிதாண்டா, அந்த சோபியா லாரன் சரளா ஹெட் குக், நீ சரக்கு மாஸ்டர் சரிதானே!''

சரளாவை நினைப்பூட்டியதுமே எனக்குக் காப்பி நினைவு போய்விட்டது.

''பஞ்சு, நீ சரளாவை எங்கேயாவது பார்த்தியா?''

''பார்த்தியாவா?... பேசினேண்டா இடியட்! அதைப் பற்றி டிஸ்கஸ் பண்ணனும்னு தான் ஒரு வாரமாய் உன்னைத் தேடிக்கிட்டிருக்கேன்!''

நான் காஸ் அடுப்பைப் பற்ற வைத்துக் காப்பிக்குத் தண்ணீர் வைத்தேன். நினைவு முழுதும் சரளாவைச் சுற்றிக் கொண்டிருந்தது என்பதைக் கூறத் தேவையில்லை. ஏனென்றால் ஐந்தாறு வருடங்களுக்கு முன் வரை பஞ்சுவும் நானும் அவளைத்தானே சுற்றிக் கொண்டிருந்தோம்!

''சொல்லுடா பஞ்சு! சரளாவை எங்கே பார்த்தே? என்ன சொன்னு? நம்மையெல்லாம் ஞாபகம் வச்சிருக்காளா?''

''சரிதான், அவ சதா நம்ப ஞாபகமாவே இருக்காளடா முட்டாள்! அதுவும் என் விஷயத்திலே...''

''ஐயோ, என்னடா ஆச்சு?...''

''ஆகிறது என்ன, சூர்ப்பனகை கதை தான்!''

''சூர்ப்பனகையா?...''

''ஆமாண்டா, ராமாயணத்திலே சூர்ப்பனகை ராமன்கிட்டே வந்து என்ன கேட்டா?''

''என்னைக் கல்யாணம் பண்ணிக் கோன்னு....''

''அதையேதான் சரளா என்கிட்டக் கேட்டா!''

''அடக் கஷ்ட காலமே!... ரொம்பக் கவாரசியமா இருக்கே! சொல்லு சொல்லு!''

வாசற்படியில் மீண்டும் நிழல் தெரிந்தது. பஞ்சு ஓடவும் நிழலும் மறைந்து விட்டது. இதில் ஓர் அதிசயம் என்னவென்றால் பஞ்சுவுக்கும் எனக்கும் ஒரே சமயத்தில் காப்பிமீது வெறுப்பு ஏற்பட்டதுதான்.

''காப்பி என்னடா காப்பி, சரளாவை விடவா காப்பியும் இன்னொன்றும்!'' என்று இரண்டு பேரும் ஏககாலத்தில் கோரஸ் பாடினோம். பஞ்சாட்சரம், தான் சரளாவைச் சந்தித்த விவரத்தைச் சாங்கோபாங்கமாக விளக்க ஆரம்பித்தான்.

''டேய் பத்து, கல்லூரி நாள் முதலாகவே எனக்குச் சரளா மேல் ஒரு கண் என்கிற விஷயம் உனக்குத் தெரியும்...''

''ஏண்டா தனியா ஒதுங்கறே! நாம்ப ரெண்டு பேருமாச் சேர்ந்துதானேடா அவளோட ஹாஸ்டலைப் பிள்ளையார் கோயில் சுத்தற மாதிரி சுத்திக்கிட்டிருந்தோம்! அவளை அழைச்சுக்கிட்டு...''

''இழுத்துக்கிட்டுன்னு சொல்லு!''

''ஆமாம், இழுத்துக்கிட்டு பீச்சு உண்டா சினிமா உண்டான்னு அலையா அலைஞ்சு தானேடா பர்ஸைப் பஞ்சராக்கு!''

''போடா, அவ என்ன சொன்னு! 'தன் வாழ்க்கையிலே, இந்தச் சரளா யாரையா வது கல்யாணம் பண்ணிக்கிட்டா, மிஸ்டர் பத்து, அது உங்களைத்தான்!' அப்படின்னு சொன்னுளாக்கும்!''

''ஐயையோ! உனக்கு எப்படியடா தெரியும்?''

''எப்படியா? என்கிட்டேயும் சொல்லியிருக்காளே!''

''டர்ட்டி கேர்ல், இதே மாதிரியா?''

''இல்லே, கொஞ்சம் மாறுதல்... 'இந்தச் சரளா தன் வாழ்க்கையிலே யாரையாவது காதலிச்சான்னு, மிஸ்டர் பஞ்சு, அது உங்களைத்தான்' அப்படின்னு சொன்னுள்!''

''அட கடவுளே! இதுக்கு என்னடா அர்த்தம்?''

''அதாகப்பட்டது கல்யாணம் பண்ணிக் கொள்வது உன்னை, காதலிப்பது என்னை!''

''ச்சுச்சுச்சு! வாட் எ ஸ்வீட் கேர்ல்! அவளுக்கு நம்ப ரெண்டு பேரையுமே விட்டுவிட விருப்பமில்லையடா பஞ்சு!'' என்று அரற்றினேன் நான்.

''உண்மையிலே சொல்றேன் பஞ்சு, எங்க அப்பா மட்டும் பணம் பணம்னு அலையலேன்னு நான் அந்தச் சரளாவைக் கட்டிக்கிட்டு ஜம்முன்னு வாழ்க்கை நடத்திக்கிட்டிருப்பேன்.''

பஞ்சுவும் ஓலமிட்டான்.

''அட உனக்குத்தான் கொடுத்து வைக்கவில்லே. எனக்காவது அதிர்ஷ்டமிருக்கக் கூடாதா பத்து! எங்க மாமா ஒன்னு நந்தி கேசுவரன் மாதிரி குறுக்கே புகுந்து இந்த நீலாக் கழுதையை என் கழுத்திலே கட்டி விட்டது. அதோ படத்திலே பார். அதன் மோகரையை! சரளாவோட கால் தூசு பெறுமாடா இது!''

இதெல்லாம் நடந்து போன கதையைப் பற்றிய பேச்சு. 'லேட்டஸ்டா'க ஏதாவது உண்டா என்று தெரிந்து கொள்ள ஆவல் துடித்தது.

''மேலே சொல்லுடா பஞ்சு, அவளை எங்கே சந்திச்சே, என்ன சொன்னுள்!''

''பதினைஞ்சு நாளைக்கு முன்னே மவுண்ட் ரோட்டிலே பார்த்தேண்டா! எப்படி இருக்கா தெரியுமா? சும்மா சுவர்ணச் சிலை மாதிரி. மெருகு குலையாமே...''

''வர்ணனை இருக்கட்டும், விஷயத்தைச் சொல்லு!''

''அவசரமா ஆபீசுக்குப் போயிக்கிட்டிருந்தேனு. 'பஞ்சு'ன்னு. எனக்கு ஆசை நெருப்பா தகிச்சுது. 'கொஞ்சம் பேசணுமே'ன்னு. 'ஏற்கனவே லேட்டாயிடுச்சு, லேட்டாப் போனுல் சீட்டைக் கிழிச்சுடுவாளே சரளா ன்னேன். 'அப்படியானு ராத்திரி ஏழு மணிக்கு 'க்வாலிடியிலே'ன்னு. நான் 'ஆகட்டும்'னேன்...''

எனக்கு சஸ்பென்ஸ் தாங்கவில்லை.

''அடப் பாவி, சாயந்திரம் ஆபீஸ் விட்டதும் க்வாலிடிக்கு ஓடினுயா?'' என்று தவித்துக்கொண்டே கேட்டேன்.

''அங்கேதானேடா முட்டாள்தனம் பண்ணினேன்!... முகத்தைக் கழுவிப் பவுடர் அடித்துக் கொண்டு கொஞ்சம் அலங்காரம் பண்ணிக்கிட்டுப் போனுல் தேவலாமே என்று வீட்டுக்கு வந்தேனு. அன்னைக்குப் பார்த்து இந்த நீலாக் கழுதை சினிமாவுக்குப்

வெல்டிங் ஒரு மூன்றெழுத்து வார்த்தை

அதற்குச் சிறிது விளக்கம் தேவை

அந்த மூன்று எழுத்துக்கள் ஐஒஎல் என்பது தெளிவு. ஏனெனில் ஐஒஎல் (இந்தியன் ஆக்ஸிஜன் லிமிடெட்) வெல்டிங் தொழில் நுட்பத்தில் முன்னேற்றத்துக்கு எப்போதும் முன்னோடியாக இருந்து, இந்த நாட்டில் புதிய வெல்டிங் உத்திகளை புகுத்தியுள்ளது. அதே சமயத்தில் ஐஒஎல் நம் நாட்டிலேயே பலவகை வெல்டிங் சாதனங்களையும் அதற்குச் சம்பந்த முள்ள வேறு பொருள்களையும் செய்துள்ளதோடு வேறு எங்கும் உள்ள சிறந்த தொழில் நுட்பவாதிகளுக்குச் சமமான வெல்டிங் தொழில் நுட்பவாதிகள பலரையும் பயிற்றுவித்துள்ளது.

இன்று நாட்டின் ஒவ்வொரு பெரிய தொழில் பிரதேசத்திலும் 60-க்கும் அதிகமான தொழிற் கூடங்கள், அலுவலகங்கள், டிப்போக்கள், கம்பிரஸிங் நிலையங்களை நிறுவி செயல்பட்டு வருகிறது. ஒரு விரிவான விநியோகிப்புப் பணியையும் அது செய்து வருகிறது. வெல்டிங் சம்பந்த மாக எழக்கூடிய எந்த ஒரு பிரச்னையையும் தீர்த்து வைக்க இந்தியா முழுதும் ஐஒஎல் தொழில் நுட்ப நிபுணர்களும், சர்வீஸ் இன்ஜினீயர்களும் பணியாற்றுகின்றனர்.

வெல்டிங் துறையில் முதல்வர்கள் :

IOC. 1768 TAM


ஓவியப்
படைப்பின்
பரவசமூட்டும்
விநாடிகள்..
மாணவர்களுக்கான
ஆயில் மற்றும் வாட்டர் கலர்கள்
ஓவியர்களுக்கான
ஆயில், வாட்டர் மற்றும
போஸ்டர் கலர்கள்

போகணும்னு கைகேசி நாடகம் போட்டுதே பார்க்கணும்!''

''இந்தக் கழுதைகளே அப்படித்தான்டா பஞ்சு! எங்க வீட்டுக் கழுதை கூட இன்னைக்குக் காலையிலேருந்து அப்படித்தான் உதைச்சுக் கிட்டிருக்குது!''

எகிறிக் குதிச்சான் பஞ்சு.

''கெடுத்தாயேடா பாவி! உனக்குக் கல்யாணமாயிடுச்சா?''

''ஏன்டா, என்ன சமாசாரம்? விஷயத்தைச் சொல்லாமல் நீபாட்டுக்கு...''

அத்தனை சுலபமாக விஷயத்தை விளம்பி விட்டால் அவன் பஞ்சுவா என்ன? விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான்.

''சரளா காத்துக்கிட்டிருந்தா... கேண்டில் லைட் டின்னர்... ஃப்ரூட் ஜெல்லியை விட இனிமையான பேச்சு! கல்லூரி விட்ட பிறகு பாவம், என்னை எங்கெல்லாமோ தேடியிருக்கிருள்... அன்றையத் தேதி வரையில் கல்யாணமே பண்ணிக் கொள்ளவில்லை...''

''அன்றையத் தேதி வரையில்னு? அடுத்த தேதியிலே...''

''அவசரப்படாதே. 'பஞ்சு'நான் உங்களுக்காகத்தான் காத்திருக்கிறேன்'னு கிளி கொஞ்சற மாதிரி குழைஞ்சாடா. நான் 'ஐயோ'ன்னேன். 'மிளகாயைக் கடிச்சுட்டீங்களா'ன்னு கேட்டா. 'இல்லே சரளா... எனக்குக் கல்யாணமாயிடுச்சேன்னேன். அவள் மூர்ச்சை போட்டு மயங்கி விழுந்தால் தாங்கிப் பிடித்துக்கொள்ளத் தயாரா கையை நீட்டினேன். அவ முத்துப் போல் சிரிச்சா. 'கல்யாணமாயிட்டா அதனாலே என்ன பஞ்சு?'ன்னு. நான்தான் மூர்ச்சை போட்டு விழப் போனேன். என்னை அவ தாங்கிக்கிட்டா.''

''ஏய், ஏய், கல்யாணமாயிடுச்சுன்னு ஆனை விடவேண்டியதுதானேடா அவ! அதனாலே என்னன்னு என்னடா அர்த்தம்?''

''அர்த்தமா? காதலிக்கிறது மாத்திரம் தான் என்னை, கல்யாணம் பண்ணிக்கிறது வேற ஆசாமியைன்னு அவதான் முன்னாலேயே சொல்லி யிருக்காளேடா முட்டாள்!''

''ஓஹோஹோ! அப்புறம்?''

''பளிச்சுன்னு எனக்கு ராமர் கிட்டவந்த சூர்ப்பனகை கதை ஞாபகம் வந்தது. 'பத்துவை டிவ்ர பண்ணிடேயா'ன்னு கேட்டேன். 'அட்ரஸ்?' என்றுள் அவள். 'பத்து நான் டயம் கொடு' என்றேன். 'ஓகே' என்றுள் அவள்.... இப்போது புரிகிறதா, இந்தப் பத்து நானாக உன்னை எதற்காகத் தேடுகிறேன் என்று?... நீ என்னடா என்றால் வெடி குண்டு எறிஞ்ச மாதிரி 'என் வீட்டிலேயும் ஒரு கழுதை இருக்குதுன்னிட்டியே! இப்ப சரளாவுக்கு நான் என்ன பதில் சொல்லுவது?''

பதிலை என் நாக்கு நுனியில் வைத்திருந்தேன்.

''கல்யாணமாயிட்டா அதனால் என்ன பஞ்சு?''

''அதனாலென்னவா?''

''இதோ பார் பஞ்சு, நம்ப ரெண்டு பேருக்குமே கல்யாணமாயிடுச்சு. அதே சமயத்திலே ரெண்டு பேருமே சரளாவை மறக்க முடியாது!''

''அதனாலே?''

''நாம்ப ரெண்டு பேருமாச் சேர்ந்து... ஒரு சரியான ஐடியா பண்ணிட்டா...''

டக்...டக்...டக்...

ஸ்லிப்பரின் ஒலி.

எங்கிருந்து?

டக்...டக்...டக்...

பஞ்சுவின் கண் பாய்ந்த பக்கமே என் பார்வையும் பாய்ந்தது. கூடத்திலிருந்த மாடிப் படிகளின் உச்சியில் புளு நைலக்ஸ் தெரிந்தது....

''நீலா!...'' என்று அலறினான் பஞ்சு.

புகைப்படத்தி லிருந்த பஞ்சுவின் சகதர்மிணிதான்!...

''நீலா...''

''நீலா இல்லே, உங்கள் வீட்டுக் கழுதை!''

சூடாக வந்த பஞ்சு – பத்தினியின் உறுமல் என் வயிற்றைக் கலக்குவது போலிருந்தது. ஆனால் நானா கலங்குகிறவன்! கலகலவென்று சிரித்துக் கொண்டே சமாளித்தேன்.

''அடப் பஞ்சு!... நம்ப கிளப்பிலே போடப் போகிற 'மிஸ் சரளா' நாடகத்துக்கு ஒத்திகை நடத்தினோமே, அதை உங்க ஒய்ஃப் ஒட்டுக் கேட்டிருக்காங்க!... இதோ பாருங்கம்மா...''

''ஷட்டப் மிஸ்டர் பத்து!....''

சிநேகிதன் பெண்டாட்டிதான் சீறினாள். ஆனால் பஞ்சு விட்டுக் கொடுப்பானா?

''ஏய்! என்னைத் திட்டு, என் சிநேகிதனை..''

''சிநேகிதரா? பார்ட்னர்னு சொல்லுங்க. தூ! வெட்கமாயில்லே?''

பஞ்சுவுக்கு அசாத்தியக் கோபம்.

''ஏ கழுதை! சாமி சத்தியமா நாங்க பேசினது அத்தனையும் நாடகத்துலே வர்ற டயலாக்குதான்!''

அவள் ஒரு படி இறங்கினாள்.

''ரொம்பக் கரெக்ட், எனக்கு உங்க நாடகத்தையும் தெரியும், உங்க கதாநாயகி சரளா தேவியையும் ரொம்ப நல்லாத் தெரியும்! பத்து நாளா நானும் வாட்ச் பண்ணிக்கிட்டுத்தான் இருக்கேன். உங்க டபுள் ஹீரோ நாடகத்துக்கு டபுள் வில்லன் வேணுமில்லேயா? அதனாலேதான் நானும் சுந்தரியும்...''

''சுந்தரியா! எந்தச் சுந்தரி?'' அலறியவன் நான்.

''உங்கள் வீட்டுக் கழுதை சுந்தரியைத் தான் சொல்லுகிறேன் மிஸ்டர் பத்து!... ஏய் சுந்தரி, இங்கே வந்து உன் புருஷன் லட்சணத்தைப் பாரு!...''

மாடிப் படியிலிருந்து இரண்டு கழுதைகள், அல்ல, இரண்டு கழுதைப் புலிகள் ஆக்ரோஷத்துடன் இறங்கி வந்தன.

எனக்குத் தலை கிறுகிறுவென்று சுற்றியது. வேலைக்காரன் உள்ளே வந்து பஞ்சுவிடம் ஏதோ அங்கலாய்ப்பது மட்டும் நன்றாகக் காதில் விழுகிறது:

''அம்மா கிளப்புக்குப் போகல்லே, மாடியிலே யாரோ அவுங்க சிநேகிதியம்மாவோட பேசிக்கிட்டிருக்காங்கன்னு சொல்ல வந்தப்பவெல்லாம் என்னை விரட்டியடிச்சுப்புட்டு இப்ப மாட்டிக்கினு முழிக்கிறிங்களே ஸாரு!''

அட, ஆண்டவனே!

"என் மகன்...என் மகன்!" நினைத்து நினைத்துப் பூரித்துப் போனார் சங்கர். ஒரு மகன் பிறந்து விட்டதில் அவருக்கு அவ்வளவு மகிழ்ச்சி.

"கங்கிராட்ஸ்...எ ஸன்..."

நர்ஸ் வந்து சுருங்கச் சொல்லி விளங்க வைத்த போது அவர் இன்பம் கண்டார். ஆனால் சர்க்கரைப் பாகில் ஒரு பிசிறு கண்டதாக மகன் வளரும்போது எப்படி இருப்பானோ என்ற சிறு கேள்வி கொக்கியாக அவர் இன்பத்தை இழுத்து நிறுத்தி விட்டது. அவன் தன் தாயாரைக் கொண்டுவிடக் கூடாது. பானு கொள்ளை அழகுதான். அவளை அவர் காதலித்தே மணந்தார்..... அதன் பிறகு...மனைவியா அவள்!

உள்ளே சென்று குழந்தையைப் பார்த்தார். பானு சோர்ந்து படுத்துக் கிடந்தாள். கண்கள் மூடியிருந்தன. அவளிடம் அவர் பேசவில்லை. வெளியே வந்து விட்டார். பானு நர்ஸிங்ஹோமுக்கு வந்ததிலிருந்து அவரும் அங்கேயே பழியாகக் கிடந்தார். பானுவோடு பேச வேண்டும் என்ற விருப்பம் இருந்ததாகக் கூடக் காட்டிக் கொள்ளவில்லை. மகனைப் பார்த்துவிட்டுத் திரும்பி விட்டார்.

குழந்தை பிரபுவுடன் பானு வீட்டுக்குத் திரும்பினாள். உறவினர்களும் நண்பர்களும் குழந்தையைப் பார்க்க வந்தனர். பானு இன்முகத்துடன் அனைவரிடமும் பேசினாள். "எல்லாம் வெளி வேஷம்." இது சங்கரின் மனம் கண்ட விமரிசனம்.

"தாமதமாகப் பிறந்தாலும் நல்ல சமர்த்துக் குழந்தையாகப் பிறந்து விட்டது. விவாகமாகிச் சில வருடங்கள் தாமதித்துப் பிறக்கும் குழந்தைதான் சமர்த்தாக இருக்கும் போல் இருக்கிறது!" இது வந்தவர்கள் பேச்சு.



தாமதம்! அதன் காரணம் அவருக்குத் தெரியும். காதல் மலர்ந்து வருடங்கள் சில கழிந்தும் பானு திருமணப் பேச்சைக் கிளப்பவே இல்லை. ஒரு பெண் இப்படி இருப்பது சங்கருக்கு வியப்பை அளித்தது. கடைசியிலே அவரேதான் பொறுமை இழந்து விவாகத்துக்கு வித்திட நேர்ந்தது.

அதன் பிறகுதான் பானுவின் உள்ளம் சங்கருக்குப் புரிந்தது. பானு தன் நடத்தையின் மூலம் விளங்க வைத்தாள். ஆனால் அன்புக்கும் நேசத்துக்கும் வறட்சியே.

''பானு! நீ இன்று பெங்களூர் போகக்கூடாது...''

''நோ, டார்லிங். கிளப்பில் என்னைத்தான் முக்கியமாக எதிர்பார்க்கிறார்கள். நான் போய்த்தான் ஆக வேண்டும்.'' பானு ரோஜா இதழ் விரிய, கன்னம் குழியக் கூறியபோது சங்கர் இன்பம் கண்டவர்தான். ஆனால் திருமணப் பந்தத்துக்குள் அவரால் நினைத்த இன்பத்தைக் காண முடியவில்லை. அது அவருக்குப் பெருங் குறைதான்.

பெங்களூர் சென்றவள் நான்கு நாட்கள் கழித்துத்தான் திரும்பினாள்.

''பானு, நான் உன்னை விவாகம் செய்துகொண்டது எதற்குத் தெரியுமா? நீ இப்படிக் கிளம்பினால் ஏது சுகம்?'' கோபம் கொதித்தெழக் கேட்டார் அவர்.

''சுகம் சுகம் என்று ஏன் இப்படிச் சுயநலமாக இருக்கிறீர்கள்?''

''அப்படியானால் ஏன் திருமணம் செய்து கொண்டாயாம்?''

''நான் அவசரப்படுத்தவே யில்லை.''

அதிர்ந்து போனார் அவர்.

''அப்படியானால் உங்களை நேசிக்கவில்லை என்று சொல்லி விடுவதுதானே!''

''நீங்கள் தவறான எண்ணம் கொண்டிருக்கிறீர்கள். நான் இப்போதும் உங்களைத்தான் நேசிக்கிறேன்.''

இப்படி எத்தனை எத்தனை நாட்கள்! அவருக்குச் சப்பிட்டுப் போயிற்று.

சண்டையின் உச்ச கட்டத்தில் இருவரும் பேசா மௌனியாகி விடுவார்கள்.

சண்டை முடிந்து சமரசத்துக்கு வரும்போது பானுவுக்கு மீண்டும் சமூக சேவைக்கான அழைப்பு ஒன்று வந்து விடும். அவள் போய் விடுவாள். தமக்குப்பின் விவாகமானவர்கள் குழந்தைகளுடன் வெளியே போவதைப் பார்க்கும் போதெல்லாம் சங்கர் தவித்துப் போவார். அவர் வீட்டில் குழந்தை என்ற வரப்பிரஸாதமே இருக்காதோ? கணவன் மனைவி கூச்சலுக்குப் பதில் குழந்தைகளின் விளையாட்டுக் கூச்சல் கேட்காதோ?

பானுவின் தந்தை திருமூர்த்தி நல்ல பதவியில் இருந்தவர். தாய்தான் தம் மகளை அவர்கூடக் கேட்டார், ''பானு! எனக்கு எப்போதம்மா பேரக் குழந்தையைக் காட்டுவாய்?'' என்று. அவருக்குப் பதில் சொல்ல வேண்டிய நினைப்புக்கூட இருக்காது பானுவுக்கு.

சங்கருக்கு வாழ்க்கையே கசந்தது. அந்தக் கசப்பே வாழ்க்கையில் ஓர் இனிமை பிறக்க வழிகோலி விட்டது. பிரபு பிறந்தான், கடவுளின் வரப்பிரசாதமாக. பானு சமூக சேவை சமூக சேவை என்று ஓடாமல் குழந்தையிடம் அன்பு செலுத்துவாள் என்று எதிர்பார்த்தார் சங்கர்.

என் மகன்

எஸ். ரங்கநாயகி



பிரபு சமர்த்தாக வளர்ந்தான். பானுவுக் கென்ன, அவனுக்கென்று ஏற்படுத்தப்பட்ட ஆயாவுக்குக்கூடச் சிரமம் தரவில்லை.

எனவே, பானு குழந்தை பிறந்த பிறகும் சமூகப் பணிகள், வெளியூர்ப் பயணம் என்று ஆரம்பித்த போது சங்கருக்கு ஆத்திரம்பற்றிக் கொண்டு வந்தது. ''பானு, நீ இனியும் இந்த மாதிரி கண்ட இடங்களுக்குச் சுற்றக் கூடாது. பிரபுவுக்குத் தாயாக நீ இருந்தாக வேண்டும்...'' என்றார்.

''பிரபுவுக்குத் தாயில்லாமல் தந்தையாகவா நான் இருக்க முடியும்?'' என்று வேடிக்கையாகக் கேட்டாள் பானு.

''இந்த வேடிக்கை எனக்கு ரசிக்காது. தாய் என்று ஒரு பொம்மையாக நீ நிற்கக் கூடாது. பிரபுவை நீதான் கவனித்துக் கொள்ளணும். ஊர் சுற்றியாக இருக்கக் கூடாது.''

''ஊர் சுற்றி என்று ஏதோ சொல்கிறீர்கள். சும்மா வேலையில்லாமல் நாங்கள் ஊர் சுற்றிக்கொண்டிருக்கவில்லை. மக்களுக்குச் சேவை செய்வதே எங்கள் லட்சியம்.''

''அவரவர் தங்கள் குடும்பத்தாருக்குச் சேவை செய்து கொண்டு வந்தால் உலகம் தானாகவே உருப்பட்டு விடும்.''

''மெய்தான். ஆனால் இந்த உலகத்துக்கு அது எங்கே தெரிகிறது? சேரியில் போய்ப் பாருங்கள்....''

''ஏ, பானு! உன்னுடைய இந்தப் பிரசங்கம் எனக்கு அவசியம் இல்லை. பிரபுவுக்கு நீ தாயாக இருக்க முடியுமா, முடியாதா? சொல்லிவிடு.''

''இது என்ன விநோதமான கேள்வி? பிரபுவுக்கு நான்தான் தாய் என்பது ஆண்டவன் காட்டிவிட்ட தீர்ந்த பிரச்னை. ஏதோ

இரண்டாம் மனைவியாக என்னைப் பாவித்து மூத்த மனைவியின் குழந்தையை உன்னுடைய குழந்தையாக நடத்து என்று கூறுவது போலல்லவா இருக்கிறது உங்கள் கேள்வி!'' அறிவற்ற கேள்வியாக அவர் கேட்டு விட்டது போல் பானு சிரித்தபடி கூறினாள்.

அவள் வார்த்தைகளைவிட அவள் சிரிப்பில் தொனித்த ஏளனம் அவருடைய எரிச்சலை அதிகமாக்கியது.

'' பானு ! உன் அர்த்தமற்ற பேச்சையும் சிரிப்பையும் நிறுத்திக் கொள். இல்லாவிட்டால் எனக்குக் கெட்ட கோபம் வந்துவிடும்! பிரபு உன்னைத் தன் தாயாராக உணரும்படி நீ நடந்து கொள்ள வேண்டுமானால் ஊர் சுற்றுவதை நிறுத்த வேண்டும்.''

''அது என்னால் முடியாத காரியம். நீங்கள் தான் என் கணவர், பிரபு என் மகன் என்பதை மறக்கவோ மறுக்கவோ நான் எண்ணம் கொண்டவள் அல்ல. அந்த நம்பிக்கை ஒன்றைத்தான் நான் உங்களுக்குத் தர முடியும்.''

இப்படிக் கூறிய பானு அவர் அனுமதிக்குக் காத்திராமல் காரில் அமர்ந்து வெளியே சென்று விட்டாள்.

பிரபு வளர்ந்து பெரியவனாகப் பள்ளிக்குப் போகத் தொடங்கினான். புத்திசாலி என்று பெயர் வாங்கினான். சங்கருக்குக் கொள்ளை ஆனந்தம். 'என் மகன், பிரபு என் மகன்' என்று 'என்' என்னும் சொல்லில் அழுத்தம் கொடுத்துச் சொல்லிக் கொண்டார்.

சங்கருக்குத் தம் மனைவி பானுவும் அந்தப் பெருமையில் பங்கு கொள்ள வேண்டும் என்ற ஆசை தோன்றியது. சமூக சேவை, சமூக சேவை என்று அவள் போகும் போக்கைக் கண்டித்து வழிக்குக் கொண்டு வர வேண்டும் என்று திட்டமிட்டார். வீட்டுக்குப் போனதும் முதற்காரியமாக, பானுவின் கையை இறுகப் பற்றி, ''பானு, முடிவாகச் சொல்லி விடு. இந்த அலுவல்களை விடப் போகிறாயா, இல்லையா?'' என்று கேட்டார்.

சங்கரின் பேச்சைக் கவனிக்காதவளாக டெலிபோன் அழைப்பு ஒன்றைக் கேட்க நகர்ந்து விட்டாள் பானு.

''பானு, கொஞ்சம் நில்!'' என்று சங்கர் கர்ஜித்தார். பானு நின்ற இடத்திலிருந்து திரும்பி நோக்கினாள்.

''இதோ பார். இது என் வீடு. என் சம்பாதிப்பில் குடும்பம் நடக்கிறது...''

''ஒரு நிமிஷம்... குடும்பம்! என்றால் அதில் மனைவி குழந்தைகள் எல்லோருக்கும் பங்கு உண்டு.''

''உன் பேச்சுப்படியே வா. இந்தக் குடும்பத்தில் மனைவிக்கும் பங்கு உண்டென்றால் நீ இந்த வீட்டுப் பொறுப்பையும், என்னையும் குழந்தையையும் கவனிக்க வேண்டும். நீ வீட்டோடு தங்காவிடில் உனக்கும் எனக்கும் உள்ள சம்பந்தத்தைத் துண்டித்துக் கொண்டு விட வேண்டியதுதான்.'' அழுத்தம் திருத்தமாகச் சங்கர் கூறினார். அவர் உடல் பதறிக் கொண்டிருந்தது. முகத்தில் வியர்வை.

பானு அவர் அருகில் வந்தாள். ''விவாகரத்து என்ற சொல் நம் குடும்பத்திலும் இடம் பெற வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள். அவ்வளவுதானே ?''

சங்கர் பதில் கூறவில்லை. இலேசாகத் தலை ஆடியது.

பானு கூர்மையாக அவரை நோக்கினாள். ''மிஸ்டர் சங்கர், உங்கள் எண்ணம் அதுவாக இருந்தால் எனக்கு அதில் ஆட்சேபணையில்லை. ஆனால் ஒன்று மட்டும் கூறிவிடுகிறேன். விவாகரத்து மூலம் நீங்கள் மற்றொருத்திக்கு வாழ்வு தரமுடியலாம். ஆனால் என்றுமே நீங்கள்தான் எனக்குக் கணவர்.''

''உன் சேர்க்கையினால் பிரபு கெட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் உன்னை இந்தக் குடும்பத்திலிருந்து விலக்கப் போகிறேன். என் மகன் பிரபு உயர் குணங்களைப் பெற்றவன், ஜீனியஸ். உன் சேர்க்கையில் விழுந்து பாழாகாமல் அவன் நல்ல பையனாக, என் மகனாக இருக்கவே இந்த ஏற்பாடு !''

பானு தடுப்புக் கூறுவாள் என்று அவர் எதிர்பார்த்தார். அவள் விருட்டென்று தன் அறைக்குச் சென்று விட்டாள், பதில் ஏதும் கூறாமல்.

நீதிபதி பானுவிடம் கேட்டார். ''ஒரு தாயின் மனம் எனக்குத் தெரியும் அம்மா. பிரபுவுக்கு 'கார்டியன்' நியமிப்பதில் உன் விளக்கத்தை நீ கூறம்மா.''

பானு ஒரு நிமிடம் தயங்கினாள். கண்களில் நீர் முட்டியது. சட்டெனச் சமாளித்துக் கொண்டு, ''உங்கள் அன்புக்கு வந்தனம். என் விளக்கத்தைச் சொல்லி விடுகிறேன். கடவுளிடம் எனக்கு நம்பிக்கை உண்டு. கடவுள் நியமித்தபடி பிரபுவுக்கு நான்தான் தாய்; சங்கர்தான் தந்தை. சட்டத்தை வைத்துக் கொண்டு அதை மாற்றிவிட முடியாது. இருவருமே பாதுகாப்பாளர்கள். சட்டத்தின் ஆதாரத்தில் பிரபு 'என்' மகன் என்று ஒருமையில் சங்கர் நிழல் தேட விரும்பினால் அவரிடமே அவன் இருக்கட்டும். ''பிரபு புத்திசாலி, நல்ல பையன். இப்படியே அவன் இருந்து சுக வாழ்வு வாழ்ந்தால், நான் தள்ளியிருந்துகூட ஆனந்தம் காண முடியும்'' என்று நிதானமாக மெல்லிய குரலில் கூறி விட்டு அவள் நகர்ந்து விட்டாள்.

பானு சங்கரின் வீட்டிலிருந்து வெளியே வந்ததுமே ஒரு காரியாலயத்தில் வேலை தேடிக் கொண்டாள். அவள் கூப்பிடாவிட்டாலும் அவள் தந்தை திருமூர்த்தி அவளுக்குத் துணையாக அவளிடம் வந்திருந்தார்.

''அப்பா...அப்பா...'' கையில் தினசரியுடன் குதூகலத்தோடு ஓடி வந்தாள் பானு.

''என்னம்மா... என்ன...?''

''இதோ பார்த்தீர்களா? பிரபு பொறியியலில் ராஜ்யத்திலேயே முதலாவதாக வந்திருக்கிறான். பத்திரிகையில் புகைப்படமே பிரசுரமாகி யிருக்கிறது.''

''உன் மகன் இல்லையா, அம்மா?'' திருமூர்த்தியின் குரலில் ஒரே மகிழ்ச்சி.

பானு கடகடவென்று சிரித்தாள். ''என் மகன் என்று சொல்லி விடாதீர்கள், அப்பா.

சங்கர் வழக்குப் போட்டு விடப் போகிருர். இது உங்கள் பேரன் அப்பா பேரன்!''

''எவ்வளவு ஆனந்தமாக இருக்கிறதம்மா. பிரபு நீ எல்லோரும் சேர்ந்திருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்?''

பானு பதில் கூறிக் கொண்டிருக்கவில்லை. ஒரு காகிதத்தை எடுத்தாள். வாழ்த்துக்கள் வரைந்து பிரபுவுக்குத் தபாலில் அனுப்பி விட்டாள்.

பிரபு அவள் எழுதிய வாழ்த்துக்களைப் படித்துக் கொண்டிருந்த போது சங்கர் வந்தார்.

''அப்பா, நான் பரிசுகள் வாங்கி இருப்பதற்காக அம்மா வாழ்த்துக்கள் அனுப்பி யிருக்கிருள்'' என்ருன் பிரபு.

சங்கரன் வெகுண்டு எழுந்தார். ''என்ன சொன்னுய்? அம்மாவா? யாரடா உனக்கு அம்மா? 'என் மகன்' என்று சொல்லிக் கொள்ளும்படி உனக்கு ஒரு அம்மாவும் கிடையாது.' அந்தக் கடிதத்தைத் தீயிட்டுப் பொசுக்கு..... நீ 'என் மகன்'. புத்திசாலி நல்ல பையன்......''

பிரபு பதில் கூறுமுன் சங்கர் அக்கடிதத்தைப் பறித்துச் சுக்கலாகக் கிழித்து நெருப்புக் குச்சிக்கு இரையாக்கி விட்டார்.

பிரபுவிடமிருந்து பதில் வரும் என்று பானு எதிர்பார்க்கவில்லை. சட்டத்தின் மூலம் பிரித்துவிட்ட உறவை ஒட்ட வைக்க முயன்ருலே சங்கர் வெகுண்டு எழுவார் என்பதை அவள் அறிந்திருந்தாள்.

அடுத்த படியில் பிரபு ஐ. ஆர். எஸ். பரீட்சையிலும் இந்தியாவுக்கே முதலாவதாக வந்தான். 'என் மகன் ஜீனியஸ். நான் அதிர்ஷ்டசாலி' சங்கர் வாய் ஓயாமல் கூறிக் கொண்டிருந்தார். வீட்டுக்கு வருவோரும் போவோருமாகப் பிரபுவைக் கொண்டாடினர். சங்கர் பெரிய விருந்து வைத்தார். பானுவுக்கும் திருமூர்த்திக்கும் மட்டும் அழைப்புப் போகவில்லை.

''பிரபு உன் அம்மா எங்கே?'' விருந்துக்கு வந்திருந்த நண்பன் ஒருவன் கேட்டான்.

பிரபு பதில் கூறத் தவித்த போது சங்கரே பதில் கூறினர்: ''தயவுசெய்து அவனிடம் அவனைப் பெற்றவளைப் பற்றிக் கேட்டுத் துன்புறுத்தாதீர்கள். அந்த வழியில் அவன் பெருமை கொள்ளும் நிலையில் இல்லை.''

பிரபுவுக்கு உயர்ந்த பதவி கிடைத்தது. வட இந்தியாவுக்கு அவன் பயணமானுன்.

''ஹலோ, பிரபு, என் மனமுவந்த நல்வாழ்த்துக்கள்!''

கிளப்பிலிருந்து வெளிவந்த பிரபு எதிரே நின்றிருந்தவளைப் பார்த்துத் திடுக்கிட்டான்.

''நீயா... அ...ம்...மா...!''

''நீ, அம்மா என்று கூப்பிட யோசிக்கிருயா? சட்டத்துக்குப் பயமா, அப்பாவுக்குப் பயமா....?'' என்று பானு கடகட வெனச் சிரித்தாள்.

பிரபு பதிலே கூருது தலை குனிந்தான்.

''கவலைப்படாதே, பிரபு! உனக்குச் சகல நலன்களும் உண்டாகட்டும்!''

கையிலிருந்த ஒரு பாக்கெட்டை அவன் கையில் திணித்தாள் பானு. அடுத்த நிமிடம் டாக்ஸியில் இருந்தாள்.



நிருபர்: ஒவ்வொரு படத்துக்கும் நீங்க எவ்வளவு வாங்கறீங்க?

வில்லன் நடிகர்: பத்து அடி, நூறு உதை, ஐந்நூறு கும் குத்து!

பாக்கெட்டைப் பிரித்தான் பிரபு. ஒரு கண்ணுடியில் ரோஜாப் பூ பெய்ண்டிங். அதோடு 'துன்புற்ருேர்களுக்கு உன் உதவி இருக்கட்டும். நீ கடவுளைக் காணும் வழியை எளிதாக்கிக் கொள்கிருய்' என ஆங்கிலத்தில் வாசகங்களை அமைத்து எழுதி வைத்திருந்தாள். பானுவின் கைத் திறன் பிரகாசமாக இருந்தது.

அன்று அவள் காதில் எட்டிய செய்தி பானுவைத் திடுக்கிடச் செய்தது. பிரபு லஞ்சம் வாங்கி விட்டானும். ஸஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிருனும். வழக்கு ஆரம்பிக்கப் போகிறது என்று.

பானு அடுத்த நிமிடமே சங்கரின் காரியாலயத்தை நோக்கி விரைந்தாள்.

சங்கர் அவளைப் பார்த்துவிட்டு, ''எங்கே வந்தாய்?'' என எரிச்சலுடன் கேட்டார்.

''பிரபுவைப் பற்றிச் சொல்ல வந்தேன். உங்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ?''

''எல்லாம் தெரியும். சில காலமாக அவன் லஞ்சம் வாங்குவதாகப் பேச்சு காதில் விழுகிறது. மனைவி ஒருத்தி பெண் பிசாசாக என் வாழ்க்கையில் புகுந்தாள். மகனே லஞ்சப் பிசாசாக வந்திருக்கிருன்.'' வெறுப்பும், குரோதமும் கோபமுமாகச் சங்கரின் வாயிலிருந்து வார்த்தைகள் வெடித்தன.

பானுவின் சினம் இப்போதுதான் உச்சகட்டத்தை அடைந்தது. ''உங்கள் வாழ்க்கையைப் பற்றிய விவரங்களைக் கேட்க நான் வரவில்லை. பிரபு கஷ்டத்தில் தவிக்கிருன் என்று உங்களுக்குத் தெரியுமா, தெரியாதா?''

''நன்ருகத் தெரியும்.''

''உங்கள் மகனைக் கஷ்டத்திலிருந்து காப்பாற்ற என்ன செய்யப் போகிறீர்கள்? அதைக் கேட்கத்தான் நான் வந்தேன்!''

பானு 'உங்கள்' என்ற சொல்லில் அழுத்தம் கொடுத்துக் கேட்டாள்.

''என் மகனா? அப்படி யார் சொன்னது? அவனை அந்தப் பதவியிலிருந்து நான் தள்ளி விட்டேன். லஞ்சம் வாங்கும் நீசன் எப்படி என் மகனாவான்? அவன் கைதி. அவன் என் மகனல்ல. அவனுக்காக நான் ஒன்றும் செய்யப் போவதில்லை.''

பானு விருட்டென்று தெருவுக்கு வந்து விட்டாள். அன்றிரவே தில்லிக்குப் பயணமானாள்.

''நீ பிரபுவைப் பார்ப்பது பற்றிச் சங்கர் ஏதேனும்...'' என்று திருமூர்த்தி இழுத்தார்.

'' 'என் மகன்' என்ற சொல்லுக்கு அவர் விடையளித்து விட்டதாக அவர் தம் நண்பர்களிடம் சொல்லிக் கொண்டிருந்ததாகக் கேள்விப்பட்டேன். அப்போது நான் நம்பவில்லை. என்னிடமே அவர் கூறிய பிறகு நான் நம்பாமல் என்ன செய்வது? எனவேதான் கிளம்புகிறேன்.''

பானுவின் குணத்தை எடை போட முடியாமல் தவித்தார் திருமூர்த்தி.

பானு தில்லியில் சிறிது காலம்தான் தங்க வேண்டியிருந்தது. அவள் திரும்பிய போது பிரபுவும் அவளுடன் வீட்டுக்கே வந்தான்.

''என்னம்மா, என்ன ஆயிற்று?'' என்று கேட்டார் திருமூர்த்தி.

''எல்லாம் நல்லபடியாக முடிந்து விட்டதப்பா. நான் கையோடு என் சேமிப்புப் பணம், நகை எல்லாவற்றையும் எடுத்துச் சென்றிருந்தேன், ஈடு செய்து பிரபுவை விடுவிப்பதற்காக. ஆண்டவன் உதவி விட்டார் அப்பா. பிரபுவிடம் ஓர் அதிகாரிக்கு மனத் தாங்கல், தமக்குச் சலுகை தரவில்லை என்பதற்காக. அதனால் அவனைப் பற்றிப் புகார் கிளப்பியபடி இருந்திருக்கிறார். பிறகு பிரபு எழுதினதாகத் தாமே ஒரு கடிதம் பணத்துக்காக எழுதித் தயாரித்து, அவனுக்குத் தெரியாமல் அவன் பாண்டில் கரன்சி நோட்டையும் வைக்க ஏற்பாடு செய்துவிட்டு, நோட்டு எண்களையும் மேல் அதிகாரிகளுக்குத் தந்துவிட்டுப் பிரபுவைச் சிக்க வைத்துவிட்டார்.''

'' ஐயோ, கேட்கவே பயமாக இருக்கிறதேம்மா....''

''ஆண்டவன் உதவி கிட்டியிருக்காவிடில் பிரபு நிச்சயமாக மீண்டிருக்க முடியாது, அப்பா!''

'' பிறகு என்ன ஆயிற்று?''

''வழக்கு ஆரம்பமாயிற்று. எதிர்பாராமல் பிரபுவைச் சிக்க வைத்தவர் ஒரு மோட்டார் விபத்தில் அகப்பட்டுக் கொண்டு விட்டார். மரண வாக்குமூலம் வாங்கியாகி விட்டது. அப்போது அவருக்கு மனச்சாட்சி உறுத்தியிருக்க வேண்டும். பிரபுவுக்குத் தாம் செய்த துரோகத்தையும் வெளியிட்டு விட்டார். எனவே பிரபு நிரபராதி என்று தீர்ப்பு ஆகிவிட்டது.''

'' கடவுளின் கருணை மெய்சிலிர்க்க வைக்கிறதம்மா'' என்றார் திருமூர்த்தி.

''பிரபு கேட்டதின் பேரில் அவனை இந்த ஊருக்கே மாற்றி விட்டார்கள்.'' பானு கூறி முடித்தாள்.

''பிரபு, எல்லாம் நல்லபடி நடந்து விட்டது. நீ உன் அப்பாவைப் பார்த்துவிட்டு வர வேண்டாமா?'' என்று திருமூர்த்தி ஆரம்பித்தார்.

பிரபு இடைமறித்தான். ''அப்பாவா, யாரைச் சொல்கிறீர்கள் நீங்கள்? அப்பா என்று உறவு கொண்டாடினவருக்குத்தான் முதலில் 'நான் நிரபராதி, என்னைக் காப்பாற்றுங்கள்' என்று செய்தி அனுப்பினேன். 'உனக்கும் எனக்கும் சம்பந்தமில்லை' என்று முறித்துக் கொண்டவரையா நான் போய்ப் பார்க்க வேண்டும்?''

''அது சரிப்பா. சங்கர் நீ இங்கிருப்பதை...''

இப்போது பானு இடைமறித்துச் சிரித்தபடி கூறினாள். ''சங்கர் வருவார், தடுப்பார் என்ற கவலை வேண்டாம் அப்பா. ஜீனியஸ், நல்ல குணம் எனப்பட்ட குழந்தைகளைத்தான் அப்பாமார்கள் 'என் மகன்' என்று சொல்லிக் கொள்ள முன்வருவார்கள். ஆனால் ஒரு தாய் கஷ்டப்படும் மகனைப் பார்த்துத்தான் 'என் மகன்' என்று தவிப்பாள். அவன் கஷ்டத்தில் பங்கெடுப்பாள். இரு புதல்வர்களில் ஒருவன் நல்ல நிலையிலும், மற்றவன் தாழ்விலும் இருந்தால், தாழ்வான மகனுக்குத்தான் தாயார் தன்னை அர்ப்பணித்துக் கொள்வாள். பிரபு நன்றாக இருந்தபோது தாயின் சேவை அவனுக்கு அவசியமில்லை என்றுதான் எளியோரின் சேவையில் ஈடுபட்டேன். பிரபுவுக்குக் கஷ்டம் வந்தது. அவன் கஷ்டத்தில் பங்கெடுக்க ஓடினேன். நான் பிரபுவுக்கு அம்மா என்று காட்டத்தான் ஆண்டவன் இடையே அவனுக்குச் சோதனையைக் கொடுத்தார் போலும்!'' என்றவள் பிரபுவை நோக்கினாள்.

''பிரபு, நீ மேஜர். ஆனாலும் சட்டம் உனக்குக் கார்டியனாக முதலில் வகுத்த உன் அப்பாவிடம் சென்று....''

''நிறுத்தும்மா. சட்டம் ஒரு கழுதை' நான் என் அம்மாவுடன் இருக்கப் போவதை இனி எந்தச் சட்டமும் தடுக்க முடியாது. துன்புற்றோரின் சேவையில் இருக்கும் உன் சேர்க்கை எனக்கு அவசியம்... நீதான் என் தாய். என் அம்மா.... சொல்லும்மா, 'என் மகன், பிரபு என் மகன்' என என்னைப் பார்த்துச் சொல்லு. இந்த வார்த்தைகளை உன்னிடமிருந்து கேட்க நான் துடிக்கிறேன். சொல்லும்மா, 'என் மகன்' என்று சொல்லு.'' பிரபுவின் குரல் தழுதழுத்தது.

பானு துடிதுடிப்புடன் மகனை இழுத்து அணைத்துக் கொண்டாள். ''என் மகன், பிரபு, நீ என் மகன்!'' இது வரை காணாதபடி கண்களிலிருந்து கண்ணீர் அருவி நீராகக் கொட்டியது. உணர்ச்சிப் பெருக்கில் தவி தவித்துப் போனாள் பானு.

''என்ன விந்தையான பெண் இவள்!'' என்று சொல்லிக் கொண்ட திருமூர்த்தியின் கண்களிலும் நீர் நிறைந்துவிட்டது.

ஆறு கைகள் இருந்தாலும் போறது போலிருக்கே!



ஒரு Prestige பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர் வாங்கிவிடுங்கள்!



பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர் உங்கள் பொன்னான சமையல் நேரத்தில் ஒருமணி மிச்சமாக்குகிறது

சமையல் பிரச்சனையை எளிதாக்கவே தயாராகிறது பிரஸ்டிஜ் பிரஷர்குக்கர். பிரஸ்டிஜ் சமையல் வழக்கமான சமையலுக்காகும் நேரத்தில் கால்பங்கு நேரத்திலே தயார். அது எளிதானது. அத்துடன் பத்திரமானதும்கூட. 12 வயது சிறுமிகூட கையாளலாம். எரிபொருள் செலவில் எத்தனையோ மிச்சம். பிரஸ்டிஜ் இருந்துவிட்டால் சமைக்கும்போது குழப்பமோ, தடுமாற்றமோ இருக்காது. ஏனெனில் அதில் ஒரே சமயத்தில் மூன்றுவகை சமைக்கலாம். பிரஸ்டிஜில் தயாரான உணவில் சத்து, ருசி, மணம் முதலியவை குறைவதில்லை. பிரஸ்டிஜ் ஆயுட்கால உத்தரவாதம் கொண்டது. நாடெங்கும் விற்பனைக்குப் பின்பும் பராமரிப்புக்கு வசதி யுள்ள பிரஷர்குக்கர் பிரஸ்டிஜ் ஒன்றே.

பிரஸ்டிஜ் ஐந்து அளவுகளில் உள்ளன. உங்கள் குடும்பத்திற்கு தேவையான அளவை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.


பெயர்கள் வேறானாலும் ப்ரீத், "பிரஸ்டிஜ் இரண்டும் ஒன்றே. இந்தியாவில் பிரஸ்டிஜ், ஏற்றுமதிக்கு ப்ரீத்.

> புகழ்பெற்ற ப்ரீத்ஸ்டிம் இட், ஸ்கில்லெட், ஸாஸ்பான் - சமையல் விரைவாகவும் எளிதாகவும் முடிய இவைகள் உதவுகின்றன.

டிடி (பிரைவேட்) லிமிடெட், பெங்களூர்-16.

TTP-5799

ஐந்தே
காசு
போதும்
உங்கள்
குடும்பம்
பெருகாமல்
தடுக்க!



நிரோத்

உபயோகியுங்கள்

உயர்தர ரப்பரினாலான கருத்தடைச் சாதனம்

குடும்பக் கட்டுப்பாட்டிற்கு

15 காசுக்கு 3

அரசாங்க ஆதரவினால் குறைந்த விலை

சுலபமாகத் தள்ளிப் போடலாம்.

நிரோத் (காண்டோம்) உயர்தர ரப்பரினாலான கருத்தடைச் சாதனம் ஆண்களுக்கானது. எளிமையான, தீமையற்ற நிரோத் உலகமெங்கும் உபயோகிக்கப்படுகிறது. இதை உபயோகிப்போரின் தேகநலம் பாதிக்கப்படுவதில்லை. நிரோத் எங்கும் கிடைக்கும்

<u>வேண்டுமென்றபோது மட்டுமே பேறு...</u>

வேண்டுமென்றபோது மட்டுமே இன்று மக்கட்பேற்றை ஏற்படுத்திக் கொள்ளலாம். இதற்கு நிரோத் உதவும்.

<u>தாய் சேய் இருவரின் தேகநலம்...</u>

குழந்தைகள் சரியான வளர்ச்சி பெற, முதல் மூன்று நான்கு வருடங்கள் அவர்களுக்கு விசேஷமான பராமரிப்பு தேவை என்று வைத்தியர்கள் கூறுகின்றனர். பேற்றில் இழந்த தேக வலுவை மீண்டும் பெற தாய்க்கும் சிறிது காலம் பிடிக்கும். நிரோத் உபயோகிப்பதனால், அடுத்த பேற்றைச்

நிரோத், வீட்டுச் சாமான்கள் விற்கும் கடை, மருந்துக் கடை, வெற்றிலைப் பாக்குக் கடை ஆகியவற்றில் கிடைக்கும்.

davp 70/67

முதுகு

"ரஜனு"

கோவிலுக்கு வருகிற அந்தச் சில நிமிஷ நேரமாவது சும்மா இருக்கக் கூடாதோ? வேடிக்கைதான்.

அகிலாண்டேசுவரி சந்நிதி. வெள்ளிக் கிழமை மாலை. அருகில் உள்ள பெரிய குத்து விளக்கின் சுடர் பட்டு அம்பிகையின் மூக்குத்தி ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது. கண்களில் கருணை கருணை, கருணை... பாதங்களைத் தொடுகிற பட்டு ரோஜா மாலை.

'பாருங்கள், பயமில்லை உங்களுக்கு!' என்று சொல்லும் கரங்கள். காதுகளில் சக்கர மிட்ட தாடங்கம்.

அர்ச்சனை மாற்றி அர்ச்சனை விடாமல் நடந்து கொண்டிருக்கிறது.

இருக்கின்ற கவலைகளை யெல்லாம் மறக்க வேண்டிய இந்த இடத்தில்தான் இவர்களுக்கு இல்லாத கவலைகளெல்லாம் வருகின்றன.

அதோ பாருங்களேன்... அந்த டைட் பேண்டும், பூப்போட்ட சட்டையும் போட்ட வரை. நாற்பதுக்குக் குறையாத அவர் தம் நரைத்த தலைக்கு 'டை'யடித்துக் கொண் டிருக்கிறார். சீப்பால் அழுத்தி அழுத்திவிட்டுக் கொண்ட செயற்கைச் சுருள்.

அவர் மனம் அம்பிகையிடமில்லை. வாய் மட்டும் சம்பந்தமில்லாமல் 'மஹிஷாசுர மர்த் தனி' சுலோகத்தைத் தப்பும் தவறுமாகச் சொல்லிக்கொண் டிருக்கிறது. அம்பிகை சந்நிதிப் பக்கம் அவர் பார்வையில்லை. அங்கே எதிர்ப் புறத்தில் நாகரிகமாக நிற் கிறாளே - நவகோண வகிடும், குட்டைக் கையு மாக - அந்த அழகியைப் பார்த்துக் கொண்டு நிற்கிறார். வேண்டுமென்றே அல்லது கவனக் குறைவாகவோ தலைப்பு கொஞ்சம் 'அப்படி இப்படி' இருந்தால் இப்படியா கண் கொட்டாமல் பார்ப் பார்கள்? - அதுவும் அம்பிகை யின் சந்நிதியில்.

அட, அது போகட்டும், அந்தப் பெண்ணாவது அம்பிகை யைப் பார்க்கிறதா? அதுதான் இல்லை. அதனுடைய பார்வை வேறு பக்கம். வேறு பக்கம் என் றும் ஏதாவது ஓர் இடமாக இருந்தால் பரவா யில்லை. எங்கெங்கே வாலிபப் பயல்கள் இருக் கிறார்களோ அங்கெல்லாம் வட்டமிடுகிறது.

கோவிலுக்கு வருவார்கள், கும்பிடு வார்கள், செல்வார்கள்... இப்படியா?

என் பக்கத்தில் இருவர் சீரியஸான சம் பாஷணையில் மூழ்கி யிருக்கிறார்கள்.

"டெபுடி எப். ஏ. சி. ஏ. ஓ....கே. கே. எஸ்.ஸை எஸ். ஈ. ஆிலிருந்து 'ப்ரமோட்' செய்து மாற்றிவிட்டார்களாமே?..."

"அப்படியா? அவர் வி. எஸ். ஆருக்கும், ஏ. வி. கே.க்கும் ஜூனியராச்சே, 'சூப்பர் ஸீட்' பண்ணியாச்சா?"

"எங்கே போனாலும் ஃபேவரிடிசம்தான் ஐயா! எல்லா நிலைகளிலும்..."

என்ன பேச்சு பாருங்களேன், கோயிலில் வந்து! யார் எங்கே போனாலும் இந்த இரண்டு பேருக்கும் தங்களுடைய பழைய அழுக்குச் சேரிலிருந்து இன்னொரு சேருக்குப் 'பிரமோ ஷனு' மாற்றலோ கிடையாது. யாரோ எப். ஏ. சி. ஏ. ஓவைப்பற்றித் தீராத கவலை. அதுவும் எங்கே? கோயிலில்...!

அங்கு ஒரு மாமி... நல்ல வளமையாக இருக்கிறாள். "ஏண்டா சீனு, ராஜு, அம்புஜு ஆஷா எல்லோரும் எங்கே போய்த் தொலைத் தீர்கள்? அதற்குத்தான் இந்த வால்களை அழைத்துக் கொண்டு கோவிலுக்கு வரக் கூடாது" என்று பெரிய குரலில் முழங்கி, சுற்றுமுற்றும் பார்க்கிறாள்.

என் பின்னால் எங்கேயோ ஒரு தலையாயப் பிரச்னை விவாதிக்கப்படுகிறது.

"அந்தக் குமார் சமாசாரம் தெரியுமோல் லியோ?...."....

"அவன் பெரிய 'ரௌடியாச்சே' என்ன பண்ணினான் மறுபடி யும்?..."

"வழக்கம் போலத் தான். நாராயணசாமி பெண்ணிடம்....அதான் சார்... குமாரி... கண வர் கூட கொஞ்சம் 'இது' ... அவள்கிட்டே கொஞ்சம் வாலாட்டி விட்டான்..."

உரையாடல் எப்படி? நானும் வந்ததிலிருந்து அங்குமிங்கும் இப்படிப் பார்த்துக் கொண்டிருக் கிறேன். யாராவது ஒருத் தர்...! ஊஹூம்...! நம்ம கோயில்களில்தான் இப்படி. கோயிலுக்கு வருகின்ற அந்தக் கொஞ்ச நேரமாவது மனசை அடக்கி ....!

"கற்பூர ஹாரத்தி வாங்கிக்கோங்கோ" என்ற குரல் கேட்டு 'சட்'டென்று நினைவுக்கு வருகிறேன். கற்பூர ஹாரத்தியா? எப்போது ஆயிற்று?... நான் கவ னிக்கவே இல்லையே...!

அட நான்கூட....





பெட்டிக்குள் உள்ள கடிதம் ரூபாய் 15/- பரிசு பெறுகிறது.

சேலத்தில் மாணவர்கள் சிலர் அரக்கத்தனமாக ஒரு மங்கையின் கற்பைக் கல்லூரி விடுதியில் சூறையாடியதைக் கேட்கும் போது தமிழ் மண்ணில் பிறந்த எந்த ஒரு தமிழனும் வேதனைப்படாமலோ, வெட்கப்படாமலோ இருக்க முடியாது.

மாணவன் என்றால் படித்தவன், கடமையும் கட்டுப்பாடும் உள்ளவன் என்று இருந்த நிலை இன்று அடியோடு மாறிவிட்டது.

இன்று மாணவனைக் கண்டு அரசாங்கமே அஞ்சுகிறது. வேண்டாத பல சலுகைகளைக் கொடுத்து அரசாங்கம் மாணவ சமுதாயத்தையே அடியோடு கெடுத்துவிட்டது.

கோவை
21–7–70 கார்த்திகேயன்

பெரும்பாலான மாணவர்கள் நன்னெறியில் செல்ல முயன்ற போதிலும், கயவர்கள் ஒருசிலர் அவர்களூடே புகுந்து அவர்களை ஒட்டுமொத்தமாகக் கெடுத்து விடுகிறார்கள். ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி நஞ்சு போல, இந்தச் சிலர், கேளிக்கைக்காகவும், பொழுது போக்குக்காகவும், உல்லாசத்துக்காகவுமே கல்லூரிக்கு வருகிறார்கள். எந்த ஒரு கலாட்டாவுக்கும், காலித்தனத்துக்கும் இவர்களே முன்னணியில் நிற்கிறார்கள். கல்லூரி ஆசிரியர்களும், பெற்றோர்களும், அரசினரும் இவர்களிடம் கடுமையான நடவடிக்கை எடுத்தாலன்றி இவர்கள் திருந்தவே மாட்டார்கள்.

காஞ்சி
22–7–70 ஆ. ஜெயசந்திரன்

கம்யூனிஸ்டுகளின் நிலப்பறி இயக்கம் நாட்டைச் சீர்குலையச் செய்யும் துரோகச் செயலேயாகும்.

இங்கோ முதலமைச்சர், 'புலி வரட்டும், வந்து என் மேல் பாயட்டும். கழுத்தைக் கடித்துப் பார்க்கட்டும். அப்புறம் என் சுயரூபத்தைக் காட்டுகிறேன்' என்று பேசிக் கொண்டிருக்கிறார். கம்யூனிஸ ஏடுகளில் நிலப்பறிப் பட்டியல்களை, நக்சல்பாரிகளின் பெயர்களைத் 'தளபதி'களாகத் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டு வருகிறார்கள். தமிழ் நாடு அரசு என்ன செய்யப்போகிறது என்பதே மக்களின் கேள்வி. வார்த்தைச் சிலம்பங்கள் காத்துவிட மாட்டா என்பதை உணர்ந்தால் சரி.

தவற்றைத் தவறென்று அடித்துச் சொல்லும் திறம் எந்த இந்தியனுக்கும் வரட்டும்; மேடைப் பேச்சு ஒழியட்டும்; செயல் பெருகட்டும்.

காஞ்சி
24–7–70 பா. ரவிகுமாரன்

திரு கு. அழகிரிசாமி அவர்கள் திடீரென்று மறைந்துவிட்டார்.

இலக்கிய உலகத்துக்குப் பெருநஷ்டம். என்னைப் போன்ற உற்ற நண்பர்களுக்கு அவரில்லாத உலகை எண்ணிப் பார்க்க முடியவில்லை.

அவருடன் நெருங்கிப் பழகியவர்களுக்குத் தான் அவரது எடுத்துக்காட்டான குண நலன்களும் பண்பாடுகளும் தெரிய வரும்.

அடக்கமே உருவானவர். அவரிடமிருந்த ஆற்றல்கள் அனந்தம். ஆனால் தம்மைப்பற்றிப் பிரகடனப்படுத்திக் கொண்டு பயன் பெற நினையாதவர்.

மலாயாவில் 'தமிழ் நேச'னின் ஆசிரியராகப் பணி புரிந்தபோது நல்ல நிலைமையில் இருந்து வந்தார். பொருளாதாரம் நன்றாக இருந்தாலும் அவருடன் சரிசமமாகப் பழகிய இலக்கிய நண்பர்கள் அங்கு கிடையாது. அதோடு தமிழ் மண் அவரைக் காந்தம்போல் இங்கு இழுத்தது.

இங்கு வந்தவர் எழுத்தை மட்டுமே நம்பி வாழ முடியாது தவித்தார். கடைசியில், அகால மரணமுற்றார்.

அவரது எழுத்தால் ஈர்க்கப்பட்டு, பின் அவரை மலாயாவிலேயே மணந்துகொண்ட அவரது மனைவியும் குழந்தைகள் நால்வரும் இப்போது திக்கற்று நிற்கின்றனர்.

மிக உயர்ந்த பண்பாளர் அவர். கொண்ட லட்சியத்தை விட்டு அணுவளவும் பிசகாதவர். நேர்மையானவர். மானஸ்தர். என் உள்ளம் கவர்ந்த இனிய அருமை நண்பர்.

அவரது நினைவுக்குச் சின்னம் ஒன்று எழுப்பவோ, பாராட்டுக் கூட்டம் நடத்தவோ தேவையில்லை. அவரது குடும்பம் கஷ்டப்படாது பார்த்துக்கொள்ளத் தமிழ் உலகம் ஏதாவது செய்தால் நல்லது.

அவருடைய நண்பர்கள் முயற்சிகள் எடுப்பார்கள் என்றுதான் நினைக்கிறேன்.


தென்காசி தீப. நடராஜன்
13-7-70

ராமநாதபுர மாவட்டத்தில் உள்ள தேவகோட்டைக்கு அருகே மானகிரி என்ற கிராமத்துக்குச் சில தினங்களுக்குமுன் சென்றிருந்தேன். அங்குள்ள ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் காலையில் இறை வணக்கம் செய்வதற்கு முன்னால், பள்ளி மாணவத் தலைவன், ''தி.மு.க. ஆட்சி'' ''அண்ணாவின் கொள்கை'' என்று சொல்ல மற்ற மாணவர்கள், ''வாழ்க'' என்று கோஷம் போட்ட பிறகே இறை வணக்கம் ஆரம்பமாகிறது.

யார் தட்டிக் கேட்பது?

முகந்தனூர்
21–7–70 முகந்தனூர் தண்டபாணி

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam



இருமலும் ஜலதோஷமும் உங்களைப் பலவீனப்படுத்தும் — இதர நோய்கள் பாதிக்கவும் இடமளிக்கும்

வாடர்பரீஸ் காம்பவுண்ட் அருந்தி ஆரோக்கியமாகவும் சக்தியுடனும் திகழுங்கள்



இருமலும் ஜலதோஷமும் உங்களைப் பலவீனப்படுத்தி நோய்களை எதிர்க்கும் சக்தியைக் குறைப்பதால், உங்களை இதர நோய்கள் பாதிக்ககூடும். எனவே சிவப்பு லேபிள் கொண்ட வாடர்பரீஸ் காம்பவுண்ட் ஒழுங்காக சாப்பிட்டு வாருங்கள். பசியைத் தூண்டி, இழந்த சக்தியை மீட்டு, உடலுக்கு நோய்த் தடுப்புச் சக்தியை அளிக்கும் பல ஊட்டப் பொருள்கள் அடங்கியது சிவப்பு லேபிள் வாடர்பரீஸ். அதிலுள்ள 'க்ரியோஸோட்' மற்றும் 'கயாகால்' இருமலிலிருந்தும் ஜலதோஷத்திலிருந்தும் துரிதநிவாரணம் அளிக்கின்றன. இக்காரணங்களாலே, சிவப்பு லேபிள் வாடர்பரீஸ் சக்தியையும் ஆரோக்கியத்தையும் காப்பாற்றுவதில் ஒப்பற்றதாக இருக்கிறது.

வாடர்பரீஸ் காம்பவுண்ட் — மிகவும் நம்பப்படும் டானிக்

வார்னர்-லாம்பெர்ட்டின் சிறந்த தயாரிப்பு

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon